உதயன்

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 199 வள்ளுவர் ஆண்டு: 2045 வைகாசி 30, வெள்ளி 13.06.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily


வென்றது வேம்படி மகளிர் பக்கம் 23

28°C

தெளிவான வானிலை

கடற்கரைப் பகுதிகளில் சில வேளைகளில் பலத்த காற்று வீசக்கூடும்

# சொந்த இடங்களில் மக்களை உடன் மீளக் குடியமர்த்துங்கள்

## இலங்கை அரசிடம் ஐ.நா. அறிக்கையாளர் அறிவுறுத்து; ராணுவ வகிபாகத்தையும் மீளாய்வு செய்யுமாறு பரிந்துரை

ஜெனிவா, ஜூன் 13

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், தேசிய பாதுகாப்பில் இராணுவத்தின் வகிபாகம் குறித்து மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்று கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் பெயானி, இதுவரை தமது சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்படாத மக்கள், அவர்களின் சொந்தக் காணிகளில் குடியமர்த்தப்படுவதுடன் அவர்களுக்கு நட்டஈடும் வழங்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் சலோகா பெயானி, தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 26வது அமர்வில் சமர்ப்பித்துள்ள உள்ளக இடம்பெயர் மக்கள் குறித்த விசேட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் இலங்கை வந்திருந்த பெயானி, வடக்குப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளையும், மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களின் நிகழ்கால நிலைமைகளையும் பார்வையிட்டுச் சென்

20 ஆம் பக்கம் பார்க்க

## கமலுக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்ஷியனது கொலை தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவருக்கும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

20 ஆம் பக்கம் பார்க்க


## ஜனாதிபதிக்கு பொலிவியாவில் விருது

கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பொலீவியாவில் நடைபெறும் 'ஜி77' நாடுகளின் உச்சி மாநாட்டில் பங்குபற்றும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கு அமைதி மற்றும் ஜனநாயகத்துக்காக அவர் ஆற்றிய பணிக்கென உயர் விருது ஒன்றை அந்த நாடு வழங்கி கௌரவிக்க இருப்பதாக தெரியவருகிறது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் நாடாளுமன்ற மேன்மை

20 ஆம் பக்கம் பார்க்க



நேற்றைய தினம் பொஸன் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்டன. பல்கலைக் கழக பௌத்த மாணவர்கள் பொஸனை முன்னிட்டு பல்கலை வளாகத்துக்குள் சுட்டிகள் ஏற்றி அழகுபடுத்தியிருந்தனர். (ற-21)

## கடும் நடவடிக்கையே சர்வதேசம் எடுக்கும்

### விசாரணைக்கு ஒத்துக்கொள்ளாவிடில் என்கின்றன பிரதான எதிர்க்கட்சிகள்



கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நியமிக்கவுள்ள விசாரணைக் குழுவுக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் நாட்டுக்கு எதிராக அனைத்துலக சமூகம் கடுமையான நடவடிக்கைகளை எடுக் கக்கூடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளன பிரதான எதிர்க் கட்சிகள்.

ஐ.நா. விசாரணைக்குழு தொடர்பில் நாடாளுமன்றில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு அரசால் செயற்படமுடியாது என்று சுட்டிக்காட்டும் எதிர்க் கட்சிகள், சர்வதேச சமூகத்துடன் தொடர்ச்சியாக முரண்பட்டால் நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடைகூட விதிக்கப்படும் அபாயம் இருக்கின்றது எனவும் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளன.

இவ்வாறு பல சவால்கள் இருப்பதால், ஐ.நாவுடனும் அதன் கீழ் இயங்கும் சபைகளுடனும் அரசு

20 ஆம் பக்கம் பார்க்க

## விசாரணைக் குழுவுக்கு பன்னிருவர் நியமனம்

ஜெனிவா, ஜூன் 13

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இலங்கையின் மூன்று தசாப்த கால போரில் கடைசி ஏழு ஆண்டுகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விரிவான விசாரணையை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக 12 அங்கத்தவர்களைக் கொண்ட விசாரணைக்குழு ஒன்றை ஐநா.மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நியமித்திருக்கின்றார் என்பது உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்



20 ஆம் பக்கம் பார்க்க

## விடுவிக்கப்பட்ட மீனவர்கள் தமிழகம் சென்றடைந்தனர்



மன்னார், ஜூன் 13

மன்னார் நீதிமன்றத்தால் நேற்றுமுன் தினம் விடுவிக்கப் பட்ட 46 இந்திய மீனவர்களும் நேற்றுக் காலை தலைமன்னார் கடற்படை

20 ஆம் பக்கம் பார்க்க

## ஆணைக்குழு விசாரணைக்கு முகம் கொடுப்பதற்குத் தயார்

### ரெலோ இயக்கம் கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 13

எங்கள் கட்சிக்கு எதிராக மக்களால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (ரெலோ) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன்.

காணாமற்போனோர் தொடர்

20 ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மாகாண சபையின் முதல் வரவு-செலவுத் திட்டம்

### தயாரிக்கும் பணிகள் தீவிரமாம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அடுத்த ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகள் வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப் படுகின்றது.

வடக்கு மர்காண சபையால் முதன் முதலாக முழு மையாக தயார் செய் யப்படவுள்ள வரவு

20 ஆம் பக்கம் பார்க்க


## கிளிநொச்சியில் சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 13
கிளிநொச்சி செல்வாநகர் யூதா கோயில் வீதிக்கு அருகில் முதியவர் ஒருவரின் சடலம் நேற்று வியாழக் கிழமை மீட்கப்பட்டது. சடலம் செல்வாநகரைச் சேர்ந்த வைத்திலிங்கம் விக்னேஷ்வரன் (வயது - 65) என்பவருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சிப் பொலிஸார் சடலத்தை மீட்டு மருத்துவ மனையில் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-18-426)

## இலங்கைத் தூதரக அதிகாரி கொலை துப்பாக்கிச் சூட்டில் மற்றையவர் படுகாயம்

### ரஷ்யாவில் நேற்று முன்தினம் சம்பவம்

கொழும்பு, ஜூன் 13
ரஷ்யாவில் இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் எழுதுவினைஞர் ஒருவரை காரால் மோதி படுகொலை செய்துள்ளனர் என்றும் இரண்டாவது செயலர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
ரஷ்யாவின் தென்பகுதியில் உள்ள ரொஸ்ரொவ் ஒன்டொன் நகரில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
'ரஷ்யாவில் இலங்கையின் நாள்கள்' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்வுக்கு சென்ற இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றும் எழுதுவினைஞரே, வாகனம் ஒன்றினால் மோதிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இலங்கைத் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் நெஞ்சில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இலங்கைத் தூதரக அதிகாரிகளை அவர்கள் தங்கியிருந்த டொன் பிளாசா விடுதி வரை அவர்களின் பொதிகளுடன் ஏற்றி வந்த பார ஊர்தியின் இரண்டு சாரதிகள் அவர்களிடம் மேலதிக பணத்தைக் கேட்டபோது அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது எனக் கூறப்பட்டது.
இதன்போதே, எழுதுவினைஞரை தமது வாகனத்தால் மோதிக் கொன்று விட்டும், தூதரக இரண்டாவது செயலரை துப்பாக்கியால் சுட்டுவிட்டும் அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். .
தாக்குதல் நடத்தியவர்களை தாம் பின்னர் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர் என ரஷ்ய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.
எனினும், இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.
இந்தச் சம்பவத்தை ரஷ்ய வெளிவிவகார அமைச்சு நேற்றிரவு உறுதிப்படுத்தியுள்ளது. பார ஊர்தி ஒன்றின் சாரதியே, ரஷ்ய தூதரக நிர்வாக, தொழில்நுட்பப் பணியாளரான ரணவிரு என்பவரைத் தனது வாகனத்தால் மோதிக் கொன்றார் என அதில் கூறப்பட்டுள்ளது.
இலங்கைத் தூதரக இரண்டாவது செயலர் ரத்நாயக்க என்பவர் நெஞ்சில் படுகாயமடைந்துள்ளார் என்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்துக்காக ரஷ்யா தனது கவலையை தெரிவித்துள்ளது. (ஐ)



முல்லைத்தீவு அலம்பில் புனித அந்தோனியார் ஆலயம்

## அலம்பில் அந்தோனியாருக்கு இன்று பெருநாள் திருப்பலி

முள்ளியவளை, ஜூன் 13
முல்லைத்தீவு அலம்பில் புனித அந்தோனியார் யாத்திரை தல பெருநாள் இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.
இன்று திருப்பலி பூசை ஆராதனைகள் நடைபெற்று அதனைத்தொடர்ந்து திருச் சொரூப பவனியும் சொருப ஆசீர்வாதமும் இடம்பெறும்.
முற்பகல் 10 மணிக்கு பெருநாள் திருப்பலி அருட்தந்தை அன்ரனிதாஸ் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.
இந்த ஆலய பெருநாளுக்கு இனமத பேதமின்றி பல்லாயிரக்கணக்கானோர் வருகைதந்து கலந்துகொள்வது வழமை.
இந்தவருடமும் பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-102)

## நீதியமைச்சர் கண்டியில் பல்வேறு நிகழ்வுகளில்


கண்டி, ஜூன், 13
கண்டி மாவட்டத்துக்கு சென்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம் அங்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை, கடுகண்ணாவை, குறுக்குத்தலை கிராமத்தில் பல்வேறு அபிவிருத்திகளை பார்வையிட்ட அமைச்சர், மறுநாள் திங்கட்கிழமை அக்குறணையில் மகளிர் பாடசாலை, புளுகொஹதென்ன சாஹிரா தேசிய கல்லூரி, கசாவத்தை ஆரம்ப பாடசாலை ஆகியவற்றுக்கும் சென்று பார்வையிட்டார்.
அன்றைய தினம் மாலையில் கண்டியில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளைச் சந்தித்தும் அவர் கலந்துரையாடினார். (ஐ-10)

## கொலை, கொள்ளை சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 13
அரியாலை இளையதம்பி வீதியில் உள்ள வீட்டில் வயோதிபப்பெண்ணை யன்னலில் கட்டி கொலைசெய்து, கொள்ளையடித்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.
யாழ். அரியாலை இளையதம்பி வீதியில் வீட்டில் தனியாக இருந்த 4 பிள்ளைகளின் தாயார் ஒருவரை யன்னலில் துணியால் கட்டிவிட்டு அங்கிருந்த பொருள்களை கொள்ளையிட்டு சென்றனர். அந்த பெண் ஓரிரு மணித்தியாலயங்களில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகசேர்க்கப்பட்டு அங்கு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
இந்தக் கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ். கொட்டடி மற்றும் அரியாலை பகுதியைச் சோந்த மூவரை யாழ். பொலிஸார் கடந்த வாரம் கைதுசெய்தனர்.
இவர்களில் இருவரை நேற்று முன்தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்திய போது, இருவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-106)

## இலங்கையிடம் கற்றுக்கொள்ள ஆர்வம் தெரிவிக்கிறது ஜப்பான்

### தீவிரவாதத்தை ஒழிப்பது குறித்து



இலங்கை ஜனாதிபதி - ஜப்பான் கடல் பாதுகாப்பு தலைவர் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 13
இலங்கையிடமிருந்து தீவிரவாதத்தை எவ்வாறு ஒழிப்பது என்பது குறித்துக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.
ஜப்பான் கடல் பாதுகாப்பு படையின் தலைவர் அட்மிரல் கட்சு டோசி கவானோ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை அனுராதபுரத்தில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இந்த சந்திப்பில் இரு நாடுகளுக்கு இடையேயான கடல் பாதுகாப்பு மற்றும் மற்றும் கப்பல்துறை பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்கப்பட்டது என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.
இலங்கை கடற்படையினர் தீவிரவாதத்தை எவ்வாறு வெற்றி பெற்றனர் என்பது குறித்து, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதன்போது விவரித்துள்ளார்.
அதைச் செவிமடுத்த அட்மிரல் கவனோ தீவிரவா தத்தை எவ்வாறு ஒழிப்பது என்று கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.
இலங்கைத் துறைமுகத்தில் ஜப்பான் ஆர்வம் காட்டி வருவதாகவும், அடுத்த ஓரிரு வருடங்களில் ஜப்பன் 15 போர்க் கப்பலை அனுப்ப போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
சந்திப்பின்போது ஜப்பானின் ஆதரவுக்கு நன்றியும், ஜப்பான் பிரதமர் சின்சோ ஏப்பை சந்திக்க விரும்புவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பின் போது இலங்கை கப்பல் படை தளபதி வைஸ் அட்மிரல் ஜேயனாத் கோலோ மேஜ் கலந்து கொண்டிருந்தார். (ற)

## 'மெட்டல் டிடெக்டர்' மூலம் தங்கம் தேடிய இருவர் வன்னியில் கைது

இறுதிப் போரின் போது புதைக்கப்பட்டவை எனக் கருதப்படும் தங்கத்தை, புதைந்து கிடக்கும் உலோகங்களைக் கண்டுபிடிக்கும் கருவி (மெட்டல் டிடெக்டர்) யைப் பயன்படுத்தித் தேடியவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இருவரை அந்தக் கருவியுடன் ஓமந்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தக் கருவி அரச நிறுவனம் ஒன்றில் இருந்து கொள்ளையிடப்பட்டதா என்பது குறித்தும் புலனாய்வு நடைபெறுவதாக இவ்விடயத்தை விசாரித்து வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியிருக்கின்றார்.
உரிய அனுமதிப்பத்திரம் ஏதுமின்றி சந்தேக நபர்களிடம் இந்தக் கருவி சிக்கியது எவ்வாறு என்பது குறித்தும் விசாரணைகள் நடத்தப்படுவதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
தங்கப் புதையல்கள் மறைந்து கிடக்கும் இடங்கள் எனக் கருதப்படும் பகுதிகளின் படங்கள், கைதாகியுள்ள சந்தேகநபர்களின் 'மொபைல் போன்' பதிவுகளில் உள்ளன என்றும் கூறப்பட்டது. மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் ஹடவத்தை மற்றும் கம்பஹா பகுதியைச் சேர்ந்தவர்கள்.
இவர்களை ஓமந்தை மற்றும் வன்னியின் காட்டுப்பகுதிகளுக்குக் அழைத்துவந்த நபர்களைம் தாம் தேடிவருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் பயணித்த வாகனத்தைத் தடுத்து வைத்துள்ள பொலிஸார் அவர்களின் 'மொபைல்' தொலைபேசிக்கு உள்வந்தவெளிச்சென்ற அழைப்புக்கள் குறித்தும் விசாரிப்பதற்கு நீதிமன்ற அனுமதியைக் கோரியிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.
சந்தேக நபர்கள் இருவரும் வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ஐ)

செங்கன் நாடுகளான பிரான்ஸ் சுவிஸ், ஜேர்மனி, இத்தாலி, நோர்வே
குடும்பமாகச் செல்ல
விசா ஆலோசனை
எண்ணி 30 நாள்களில்
பறக்கலாம்.
மிகக் குறைந்த கட்டணம்
(நிபந்தனைகளுடன்)
தூதரகங்களில் விண்ணப்பதாரி
நேரடியாக விண்ணப்பம்
சமர்ப்பித்தல்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021221 9016
021568 9090

(48944) (45.6.2) www thisaivisa.com

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு கண்வில்லைகள் அன்பளிப்பு



சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ மருத்துவரிடம் கையளித்தார்

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு தொகுதி கண்வில்லைகள் நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

நீர்கொழும்பு ஒரியன்ற் லயன்ஸ் கழகமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து மேற்கொள்ளும் செயற்றிட்டத்தின் கீழ் ஒரு தொகுதி மூக்குக் கண்ணாடிகள் சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ மருத்துவரிடம் கையளித்தார்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே ஒரு தொகுதி கண்வில்லைகள் மருத்துவமனைக்கு மாவட்ட ஆளுநரால் கடந்த மார்ச் மாதம் வழங்கப்பட்டு மருத்துவமனையில் கண் கிளினிக்கில் சிகிச்சை பெற்று விழிவெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்ட 30 பேருக்கு வழங்கப்பட்டு சத்திர சிகிச்சை மூலம் கண் வில்லைகள் பொருத்தப்பட்டன.

அதை அடுத்து மேலும் ஒரு தொகுதி கண் வில்லைகளை வழங்கிய மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ விரைவில் மற்றொரு தொகுதி கண்வில்லைகள் வழங்குவதாக உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் எஸ்.எஸ். அருளானந்தம், லயன் கா.சற்குணதேவன் மாவட்ட இணைப்பாளர் லயன் இ.ஜெயபாலன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-9)

# ஆனையிறவு, பரந்தன் இரசாயன தொழிற்சாலைகளை செயற்படுத்துக

### வேலை வாய்ப்புக்காக அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சி, ஆனையிறவு மற்றும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்பன மீள இயங்கும் போது சுமார் ஆயிரம்பேருக்கான வேலைவாய்ப்பு ஏற்படும். எனவே அதனை மீள இயங்க வைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குரிய தொழில் வாய்ப்புக்களையும் அதிக வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் இயங்கி வந்த ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் மற்றும் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம் ஆகியன 1990 இற்குப் பின்னரான காலப்பகுதியில் ஏற்பட்ட போர் காரணமாக சேதமடைந்து செயலிழந்துள்ளன.

இந்தநிலையில் அந்தப் பகுதிகளில் மக்கள் மீள் குடியேறி 5 ஆண்டுகள் கடந்த நிலையில் குறித்த இரு தொழிற்சாலைகளும் மீள ஆரம்பிக்கப்படாமல் காணப்படுகின்றன.

அவற்றை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட வெடிபொருள்கள் அகற்றப்பட்டு உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளபோதும், இன்றுவரை திறப்பதற்கு எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே இதனை மீள ஆரம்பிக்கும் போது ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுவதுடன் மாவட்டத்துக்கான வருமானம் ஈட்டப்படும் என்றும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தில் கடந்த போர் காலத்துக்கு முன்னர் அதாவது கடந்த 2003 -2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 746 பேர் வரையில் தொழில் செய்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-55)

# 41 227 குடும்பங்கள் இதுவரை மீள் குடியேறின

### கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி, ஜூன் 13

போருக்குப் பின்னரான மீள் குடியமர்வைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 41 ஆயிரத்து 227 குடும்பங்கள் மீள் குடியேறியுள்ளன என்று மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கிளிநொச்சி மாவட்டத்தில் 100 குடும்பங்கள் இன்னமும் மீள் குடியேற வேண்டியுள்ளன.

அவை தவிர கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 66 குடும்பங்களும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 13 குடும்பங்களும் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 21 குடும்பங்களும் மீள் குடியேறவுள்ளன. இவ்வாறு நூறு குடும்பங்களே தமது மீள் குடியமர்வுக்கான பதிவுகளை மேற் கொண்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முகமாலை மற்றும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் பரவிப்பாஞ்சான் ஆகிய பகுதிகளிலே அதிகளவு குடும்பங்கள் மீள்குடியமர்வுக்கு விண்ணப்பித்துள்ளன. (வ-55)

## அபராதம்

தென்மராட்சி, ஜூன் 13

ஆவணங்களின்றி வாகனங்கள் செலுத்திய இருவருக்கு தலா 13 ஆயிரத்து 500 ரூபாவும் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 6 ஆயிரம் ரூபாவும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரிக்கப்பட்டன.

வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை - அனுமதிப் பத்திரமின்றி வீடுகளில் கள் வைத்திருந்த 7 பேருக்கு தலா மூவாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

# சுகாதாரப் பணி உதவியாளர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆள்சேர்ப்பு

### வடமாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை

தென்மராட்சி, ஜூன் 13

வடமாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சு சுகாதாரப் பணி உதவியாளர் பதவிகளுக்கு இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் 42 பேரை தெரிவு செய்துள்ளது.

மத்திய சுகாதார அமைச்சால் எயிட்ஸ், சலரோகம் மற்றும் மலேரியா நோய்களை அழிப்பதற்கான கருத்திட்ட உலக நிதிய திட்டத்தின் கீழ் இந்த உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள காசநோய் தடுப்பு பணிமனை, மலேரியா தடை இயக்கப் பணிமனை மற்றும் பால்வினைத் தொற்று நோய் சிகிச்சை நிலையம் என்பன வற்றில் நிலவும் உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான தற்காலிக நடவடிக்கை யாக வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் (13), கிளிநொச்சி (7), மன்னார் (6), முல்லைத்தீவு (7), வவுனியா (5) ஆகிய மாவட்டங்களிலிருந்து தகுதியான 42 பேர் தெரிவு செய்யப்பட்டு குறுகிய கால ஆழ்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் தற்காலிக அடிப்படையில் (2016 ஜூன் வரை) சேவையில் ஈடு படுத்தப்படவுள்ளனர்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் விஞ்ஞான பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருப்பது அவசியமான தாகும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரு பாடம் அல்லது அதற்கு மேல் சித்தியடைந்திருப்பது மேலதிக தகைமையாகக் கொண்டு முன்னுரிமை வழங்கப்படும்.

வடமாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் விண்ணப்பப் படிவங்களை அந்தந்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்று எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம், சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (வ-9)

## முகமூடி அணிந்த இளைஞர்கள் வீட்டில் புகுந்து அட்டகாசம்



கோப்புப்படம்

வலி.தென்மேற்கு, ஜூன் 13

இரவு நேரம் முகமூடி அணிந்து கொண்டு கையில் வாளுடன் வீட்டுக்குள் புகுந்து ஜன்னல் கண்ணாடிகளையும் மின் குமிழ்களையும் அடித்து நொருக்கியதுடன் தந்தையின் கழுத்தில் வாளை வைத்துக் கொண்டு 'மகன் எங்கே' என்று கேட்டு அட்டகாசம் செய்த இளைஞர்கள் அயலவர்களின் வரவைக் கண்டு தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடிவிட்டனர்.

இந்தத் திகிலூட்டும் சம்பவம் புதன்கிழமை சுதுமலை வடக்கிலுள்ள ஓய்வுபெற்ற தபாலதிபரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது.

கணவனும் மனைவியும் பிள்ளைகளுடன் வீட்டில் இருக்கும் போது இரவு 8 மணியளவில் முகமூடி அணிந்து கொண்டு கையில் வாளுடன் வீட்டுக்குள் புகுந்த இளைஞர்களில் ஒருவர் தந்தையின் கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு மகன் எங்கே என்று கேட்டு மிரட்டும் அதே நேரம் ஏனையவர் ஜன்னல் கண்ணாடிகளையும் மின் குமிழ்களையும் அடித்து நொருங்கியதுடன் பூமரங்களையும் வெட்டிச் சாய்த்தனர்.

அவர்களிடம் மிரட்டலுக்கு அஞ்சிய மனைவியும் பிள்ளைகளும் அவலக் குரல் எழுப்பியதும் அயலவர்கள் அங்கு விரைந்து சென்ற போது 4 இளைஞர்களும் தப்பியோடிவிட்டனர்.

இது குறித்துப் பாதுகாப்புப் படையினருக்கு அயலவர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்கள் மேற்படி வீட்டுக்குச் சென்று விசாரணையில் ஈடுபட்டனர். (வ-115)

# புத்தளம் கல்வி வலயத்தில் பணியாற்றும் மன்னார் ஆசிரியர்கள் குறித்து ஆராய்வு

மன்னார், ஜூன் 13

மன்னார் கல்வி வலயத்தின் 167 ஆசிரியர்கள் தற்போது வரை வடமேல் மாகாணத்தின் புத்தளம் கல்வி வலயத்தில் இயங்கும் பாடசாலைகளில் பணிபுரிவதால் ஏற்படும் இடையூறுகள் தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் கடந்த செவ்வாய்க்கிழமை ஆராய்ந்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது:-

போர்க் காலத்தில் வன்னியில் வசித்து இடம்பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசிக்கும் முஸ்லிம் மாணவர்களுக்காக 1990 ஆம் ஆண்டு முதல் தற்காலிகமாக இயங்கும் பாடசாலைகளில் பணிபுரியும் 167 ஆசிரியர்களுக்கும் இன்று வரை வடமாகாணக் கல்வி அமைச்சின் நிதியிலிருந்தே வேதனம் வழங்கப்படுவதோடு இதுதொடர்பில் கடந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் செவ்வாய்க்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் புத்தளத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் கருத்து தெரிவிக்கும்போது;

தாம் வாழ்ந்த,பணிபுரிந்த இடங்கள் பலவும் அழிவடைந்து சிதைவடைந்து காணப்படுவதோடு பாடசாலைக்கட்டடங்களும் இல்லை. அந்தப் பிரதேசத்தில் பல மக்கள் இன்னும் குடியமரவில்லை. அதனால் உடனடியாகத் திரும்புவதற்கு சாத்தியம் இல்லை என்று கூறினார்கள்.

**பாடசாலைகளில் மேலதிகமாக வுள்ள சுமார் 40ஆசிரியர் களும் விரைவில் சொந்த வலயம் திரும்ப வேண்டும் எனவும் தீர்மானித்தனர்.**

இவற்றை ஆராய்ந்த வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர், இவ்வாறு வடக்கு மாகாணத்தின் பதிவின் கீழ் புத்தளத்ததில் இயங்கும் 6 பாடசாலைகளும் அங்கு தொடர்ந்து இரண்டு வருடங்கள் மட்டுமே இயங்க அனுமதிப்பதுடன் அதற்குள் சொந்த வலயத்துக்குத் திரும்ப வேண்டும் என்றும் இந்தப் பாடசாலைகளில் மேலதிகமாக வுள்ள சுமார் 40ஆசிரியர்களும் விரைவில் சொந்த வலயம் திரும்ப வேண்டும் எனவும் தீர்மானித்தனர்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்களான அஸ்மின், குணசீலன், றிவ்கான் மற்றும் வடமாகண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், 6 பாடசாலைகளின் அதிபர்கள்ஆகியோர் கலந்து கொண்டனர். (த-101)

## பிணையில் வந்தவர் மீண்டும் கைவரிசை

யாழ்ப்பாணம், ஜூன் 13
கமரா திருடிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, பின்னர் பிணையில் வெளியேவந்த இளைஞன் ஒருவன், அன்றைய தினமே தனதுகைவரிசையைக்காட்டியுள்ளான். வீடு ஒன்றை உடைத்து 5 பவுண் நகைகள் உட்பட பல பொருள்களை திருடிக் கொண்டு, தலைமறைவாகியிருந்த அந்த இளைஞன் தற்போது பொலிஸாரிடம் சிக்கிக் கொண்டுள்ளான்.

சிறுப்பிட்டி மத்தியைச் சேர்ந்த குறித்த இளைஞனுக்கு முழு நேரத் பணியே திருட்டுத்தான் என்று கூறப்படுகின்றது. குறித்த பகுதியில்தொடர்ச்சியாக உள்ள 8 வீடுகளில் வெவ்வேறு நாள்களில் அவன் தனது கைவரிசையைக் காட்டியுள்ளானாம் என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

குறித்த இளைஞன் சிறுப்பிட்டியிலுள்ள ஒரு வீட்டுக்குள் புகுந்து சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கமராவைத் திருடிய குற்றச்சாட்டில் அவனை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவனுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்பின்னர் 14 நாள்கள் சென்றபின்னர் அவன் பிணையில் வெளிவந்துள்ளான். வெளியே வந்த அன்றைய தினமே அவன் தனது கைவரிசையைக்காட்ட ஆரம்பித்துள்ளான். வீடு ஒன்றை உடைத்து 5 பவுண் நகைகள் 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளான் என்று கூறப்படுகின்றது. திருடி விட்டு குறித்த சந்தேக நபர் முல்லைத்தீவு முள்ளியவளையில் மறைந்திருந்துள்ளார். திருடியமைக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் அவனது தாயார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் குறித்த சந்தேக நபர் முள்ளியவளையிலிருந்து நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய போது புலனாய்வுப் பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார். தற்போது பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-4)



முகாம்களில் உள்ள தமது உறவுகளை விடுவிக்கக் கோரியும், தம்மை உறவுகளுடன் சேர்ந்து வாழ அனுமதிக்குமாறும் கோரி திருச்சி சிறப்பு முகாமில் உள்ள மூன்று இலங்கைத் தமிழர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தேவரூபன் (வயது-27), கேதீஸ்வரன் (வயது-33), புருஷோத்தமன் (வயது-29) ஆகிய மூவருமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கடல்வழியாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த ஒரு வருடமாக சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ளனர். (ந)

## பாகிஸ்தானிலுள்ள இலங்கையருக்கு ஆபத்தில்லை

பாகிஸ்தானின் கராச்சி நகரில் வசிக்கும் இலங்கையர்கள தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
பாகிஸ்தானிலுள்ள இலங்கை தூதரக அலுவலக அதிகாரிகளால் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
பாகிஸ்தானில் உள்ள கராச்சி விமான நிலையத்தில் 9ஆம், 10 ஆம் திகதிகளில் தாக்குதல மேற்கொள்ளப்பட்டது.
இதில் சுமார் 28 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில் கராச்சி பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் இலங்கை மாணவர்களுக்கு இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரியவந்துள்ளது.
மேலும் முதலாவது தாக்குதல சம்பவத்தின் போது விமான நிலையத்தில் இருந்த இரு இலங்கையர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. (வ)

# இலங்கை அகதிகள் நாடு கடத்தப்படலாம்

## பிரிட்டன் ஊடகம் கூறுகின்றது


லண்டன், ஜூன் 13
பிரிட்டனில் இருந்து எதிர்வரும் வாரங்களில் இலங்கையர்கள் சிலர் நாடு கடத்தப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

**பிரிட்டன் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து எதிர்வரும் வாரங்களில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடகத்தப்படவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அந்தநாட்டு ஊடகம் ஒன்றின் தகவல் படி, இதற்கான ஏற்பாடுகளை தற்போது பிரிட்டன் குடிவரவு குடியகல்வுத்துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.
பிரிட்டனில் அகதி அந்தஸ்த்து கோரி சமர்ப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட இலங்கையர்களே இவ்வாறு நாடு கடத்தப்படவுள்ளனர்.
அதேவேளை, உயிரை மாய்க்கும் சம்பவங்களை கருதி இலங்கை அகதிகள் நாடு கடத்தப்படுவதை இடைநிறுத்தப் போவதில்லை என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதன்படி ஆஸ்திரேலியாவில் இருந்தும் எதிர்வரும் வாரங்களில் இலங்கையர்கள் சிலர் நாடுகடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இவ்வாறு நாடுகடத்தப்படவுள்ள இலங்கை அகதிகளுக்கான முன்னறிவித்தலை, ஆஸ்திரேலியாவின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் வழங்கி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## "பல ஊடகங்களுக்கு என்னை பிடிப்பதில்லை"

### வடக்கு முதலமைச்சர் கவலை



யாழ்ப்பாணம், ஜூன் 13
"பல ஊடகங்களுக்குத்தான் என்னைப் பிடிப்பதேயில்லையே!" என்று கவலையுடன் குறிப்பிட்டுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
வடக்கு மாகாணசபையின் அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அரை மணிநேரத்திலேயே அமர்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. அதன்பின் மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சர்கள் சபாமண்டபத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.
அப்போது அவர்களை சபாமண்டபத்தின் வெளியே நின்று ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுத்துக் கொண்டிருந்தனர். ஆயினும் அனைவரும் வெளியேறிய பின்னர், நீண்ட நேரம் கழித்தே முதலமைச்சர் வெளியே வந்தார். முதலமைச்சரையும் ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுத்தனர். அப்போது "என்னைத்தானே ஊடகங்களுக்கு நிறையப் பேருக்கு பிடிக்குதில்லை" அங்கிருந்த ஊடகவியலாளர்களிடம் கூறிக்கொண்டே சென்றார் முதலமைச்சர். (ந-5)

## நகைக்கடை உரிமையாளர் யாழ்ப்பாணத்தில் கைது

### திருடிய நகைகளை வாங்கினாராம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளர் ஒருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் பகுதியில் நடைபெற்ற திருட்டு சம்பவங்களில் திருடப்பட்ட நகைகளை வாங்கிய குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அண்மையில் கிளிநொச்சி பகுதியில் 25 பவுண் நகைகள் திருடப்பட்டிருந்தன. அந்தத் திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் அண்மையில் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், திருடிய நகைகளை குறித்த நகைக்கடையில் விற்றதாகக் கூறியுள்ளனர்.
அதனையடுத்து யாழ். கஸ்தூரியார் வீதியில் உள்ள பிரபல நகைக்கடை உரிமையாளர், யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸின் பணிப்புரைக்கு அமைவாக பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழான புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட நபரை இன்று நீதிமன்றில முன்னிலைப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-106)

## கச்சதீவு ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்க

### வலியுறுத்துகிறார் டி.ராஜா



சென்னை, ஜூன் 13
கச்சதீவு ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் டி.ராஜா வலியுறுத்தினார்.
மாநிலங்களவையில் புதன்கிழமை ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் தொடர்பில் அவர் உரையாற்றினார்.
இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-
கச்சதீவு ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும். இலங்கை தமிழர் விவகாரத்தில் நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையில் கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது. எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக நிரந்தர அரசியல் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (வ)

## இலங்கை தொடர்பாக ஜனாதிபதி பேசவில்லை

### தி.மு.க. குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 13
மீனவர் பிரச்சினை, இலங்கைத் தமிழர் பிரச்சினை, நதிநீர் பங்கீடு விவகாரம் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்திய ஜனாதிபதியின் உரையில் எதுவும் குறிப்பிடப்பட வில்லை என்று மாநிலங்களவையில் தி.மு.க. குற்றஞ்சாட்டியுள்ளது.
ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது பேசிய தி.மு.க. உறுப்பினர் திருச்சி சிவா,
"சில்லறை வர்த்தகத்தில் அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்படுமா? இல்லையா? என்பது குறித்தும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இலங்கை கடற்படையால் மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க மத்தியில் ஆட்சி செய்த எந்த அரசுகளும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.
இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு இன்று வரை தீர்வு காணப்படவில்லை. அகதிகளாக இந்தியா வரும் மக்களுக்காக மத்திய அரசு தனி கொள்கையை வகுக்க வேண்டும்" என்றார். (வ)

# விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் பாதிப்பு அதிகம்

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

கொழும்பு.ஜூன் 13

சர்வதேசத்தை ஏமாற்றிய காலம் கடந்துவிட்டது. சர்வதேச விசாரணைக்கு இடமளித்து ஒத்துழைப்பை வழங்குவதே ஒரே வழியாகும்.

அதனைத் தடுத்தால் அத்துமீறிய சர்வதேச விசாரணை இடம்பெறும். அதன் விளைவுகள் மிக மோசமாக அமையும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.


மங்கள சமரவீர எம்.பி

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 26 ஆவது கூட்டத்தொடர் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது இலங்கையில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான விசாரணை குழு நியமிக்கப்பட்டுள்ளமை, அரசு இந்த விசாரணைக்கு மறுப்புத் தெரிவிக்கின்றமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கருத்துத் தெரிவித்தபோதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர இவ்வாறு கூறுனார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச விசாரணை யொன்று இடம்பெறுவதை தடுத்திருக்க முடியும். எனி னும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார்.

ஆரம்பத்தில் இருந்தே இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் இருக்கும்போது அரசு சுயாதீன உள்நாட்டு விசாரணையொன்றை மேற்கொண்டு பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டிருக்குமாயின் இன்று சர்வதேச அரங்கில் தலைகுனிய வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

போர் முடிவடைந்து .மிக நீண்ட கால அவகாசம் அரசுக்கு வழங்கப்படும். அவை தொடர்பில் எவரும் கவனத்தில் கொள்ளவில்லை. இப்போது காலம் கடந்த பின்னர் உள்நாட்டு சுயாதீன விசாரணைகளை செய்வது, சர்வதேச விசாரணையை எதிர்த்து போராடுவது என்பதெல்லாம் வெறுமனே மக்களை ஏமாற்றும்வேலையாகும்-என்றார்.(ச)

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு.ஜூன் 13

மீரிகம, பஸ்யால பிரதேசத்தில் பொலிஸ் சோதனையின் போது மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்ற இளைஞன் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அந்த இளைஞன் உயிரிழந்துள்ளான்

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 11.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பஸ்யால பிரதேசத்தில் தனது கடமையில் ஈடுபட்டிருந்த போக்குவரத்து பொலிஸாரால் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் மறிக்கப்பட்டுள்ளார். இதன்போது மோட்டார் சைக்கிளை நிறுத்தாது சென்ற இளைஞன் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் 23 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபரது சடலம் வதுபிடிவல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

# புறநகர்ப் பகுதியில் ஹெரோயின் மீட்பு

கொழும்பு.ஜூன் 13

கொழும்பின் புறநகர் பியகம பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 85 கிலோ கிராம் நிறைகொண்ட ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன் சந்தைப் பெறுமதி பல கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கார் ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்த ஹெரோயின் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப் படையினரின் சோதனை ஒன்றின்போதே மீட்கப்பட்ட இந்த போதைப்பொருள் தொடர்பில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். (ச)



பொலநறுவை சோமாவதி விகாரைக்கான வீதியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வுக்கு வருகை தந்த ஜனாதிபதி வரவேற்று அழைத்து வரப்பட்டபோது....

# எதிர்க்கட்சிகளின் கருத்தை கேட்டறிவது மிக அவசியம்

## ஐ.நா. விசாரணை தொடர்பில்

கொழும்பு.ஜூன் 13

ஐக்கிய நாடுகள் விசாரணை தொடர்பில் அரசு எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை கேட்டறிந்து கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.


லக்ஸ்மன் கிரியெல்ல

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் விசாரணை நடத்த விசேட குழு ஒன்றை நிறுவியுள்ளார். இந்த விசாரணைக்குழுவை இலங்கைக்குள் அனுமதிப்பதா? இல்லையா? என்பதனைத் தீர்மானிக்க நாடாளுமன்றில் விவாதம் நடத்தி தீர்மானிக்கப்பட உள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

நாடாளுமன்றில் இது தொடர்பில் யோசனை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர்,எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டை அரசு அறிந்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் தீர்மானம் மற்றும் விசாரணைகள் தொடர்பில் அரசின் நிலைப்பாடு வெட்ட வெளிச்சமானது.

எனவே அரச அமைச்சர்கள் தீர்மானமொன்றை முன்வைப்பதில் அர்த்தமில்லை. அனைத்து கட்சிகளையும் அழைத்து கலந்தாலோசித்து அதன் பின்னரே நாடாளுமன்றில் யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும்-என்றார். (ச)

# சட்ட ஒழுங்குகளுக்கு மதிப்பளிக்காத இலங்கையின் எதிர்காலம் மோசம்

## ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு.ஜூன் 13

சட்ட ஒழுங்குகளுக்கு மதிப்பளிக்காத இலங்கையின் எதிர்காலம் மிகவும் மோசமானதாக இருக்கும் என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது குற்றச் செயல்களில் ஈடுபடுகின்ற அரசியல் வாதிகளும், அரசியல் பலம் கொண்டவர்களும் தண்டிக்கப்படாமல் சுதந்திரமாகச் செயற்படுகின்றனர்.

ஆனால் தேங்காய் திருடியவர்களும், சுத்தமான குடிதண்ணீர் கேட்டவர்களுமே சட்டத்தின் முன்னால் தண்டனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கொள்ளைகள், திருட்டுகள் மற்றும் பாலியல் வன்முறைகள் என்பன நாட்டில் அதிகரித்துள்ளமைக்கு இவ்வாறான சட்ட ஒழுங்கு சீரின்மையே காரணமாக இருக்கிறது என்று ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

சட்ட ஒழுங்குளை மதிக்காத அரசால் இலங்கையில் சிறந்த எதிர்காலத்தை உருவாக்க முடியாது என்று அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# கல்வி நிர்வாக சேவைக்கு 424 பேர் நியமனம்

கொழும்பு.ஜூன் 13

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூன்றாம் தரத்துக்கு 424 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கல்வி அமைச்சில் வைத்து வழங்கவுள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் மூன்றாம் தரத்துக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் தகுதிபெற்ற 135 பேர் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் தகுதி பெற்ற 130 பேர், சேவை மூப்பு அடிப்படை, திறமை அடிப்படையில் 159 பேரும் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் பாடசாலைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு 424 பேரும் நியமிக்கப்படவுள்ளனர் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# இலங்கை விடயத்தில் தலையிடும் அதிகாரம் சர்வதேசத்துக்கு இல்லை

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 13

இலங்கை விடயத்தில் தலையிடும் அதிகாரம் நவநீதம்பிள்ளைக்கு இல்லை. அரசின் நிலைப்பாடு குறித்து பெருமையடைகின்றோம். இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்தாலும் கவலையடையப் போவதில்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குண தாஸ அமரசேகர தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறியும் விசாரணைக் குழுவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நியமித்துள்ள நிலையில், அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை விடயத்தில் முடிவெடுக்கும் அதிகாரமோ எமது நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கும் உரிமையோ சர்வதேசத்துக்கு இல்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கையில் எந்த செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரம் இல்லை. சர்வதேச விசாரணைக் குழுவை அவர் நியமித்தாலும் அரசின் அனுமதியின்றி அவர் உள் நுழைய முடியாது.

இந்த விடயத்தில் அரசு மிகவும் உறுதியாக உள்ளமை எமக்குப் பெருமையாக உள்ளது. அரசின் செயற்பாடுகளையும் நாட்டின்மீது அரச தரப்பு கொண்டுள்ள அக்கறையையும் நாம் எப்போதும் வரவேற்போம்.

அதேபோல் சர்வதேசத்தால் இலங்கை மீதான பொருளாதாரத் தடையை மட்டுமே மேற்கொள்ள முடியும். இது எமக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை.

ஏனெனில் எமது உற்பத்திகள், வளங்கள் இந்த நாட்டில் இருக்கின்றன. அவைகளை வைத்து எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

மேற்கத்தேய நாடுகளின் உதவியை மட்டும் நம்பியிருந்த காலம் மாறிவிட்டது. அவர்களின் பொருளாதார உதவிகளோ அல்லது அவர்களின் பாதுகாப்போ இனி ஒரு போதும் எமக்குத் தேவையில்லை.

சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பை வழங்கி இலங்கையின் சுயாதீனத் தன்மையை சீரழிப்பதை விட துணிந்து ஆட்சி நடத்துவது சிறந்தது.-என்றார். (ச)

# துரோகச்செயல்களுக்கு இடமளிக்க முடியாது

## தமிழருக்குத் தொடர்ந்து அநீதி என்கிறார் நவரெட்ணராஜா

மட்டக்களப்பு. ஜூன் 13
தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துரோக செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், உறுப்பினருமான துரையப்பா நவரெட்ணராஜா தெரிவித்தார்.

மக்களுக்காகவே பதவி; பதவிக்காக மக்களில்லை. எனவே வாக்களித்த மக்களுக்கு பொறுப்பு கூறமுடியாத பதவி வீணற்றது என்பதால் கிழக்கு மார்காணசபை உறுப்பினர் பதவியை.நான் இராஜினாமா செய்துள்ளேன் என்று அவர் கூறினார்.

கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2008 ஆம் ஆண்டில் கல்முனை தமிழ் பிரதேச செயலக தரமுயர்த்தல், வட்டைமடு மேய்ச்சல் தரை உள்ளிட்ட சில பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அரச கட்சியுடன் இணைந்து மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஆட்சி அமைத்தோம்.

முன்னாள் முதலமைச்சரின் ஒத்துழைப்புடன் நிதி மற்றும் நிர்வாகத்தை முறையாக கையாண்டோம். தொழில் வாய்ப்புக்களை இன விகிதாசாரப்படி சமமாக வழங்கினோம்.

ஆனால் இன்று கிழக்கு மாகாண மக்கள் ஜீரணிக்க முடியாத வகையில் அமைச்சரவையின் பிழையான தீர்மானத்தால் நியமனங்கள் வழங்கப்படுவது குறித்து அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

கடந்த மார்ச் மாதம் அளவில் வழங்கப்பட்ட 200 நியமனங்களில் தமிழ் உத்தியோகத்தர்கள் புறக்கணிப்பு செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறே முகாமைத்துவ உதவியாளர் நியமனங்களும் அமைந்தன.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற சாரதிகளுக்கான பரீட்சையில், அதிகூடிய புள்ளிகளை அம்பாறை மாவட்ட தமிழ் பரீட்சார்த்திகள் பெற்றபோதும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாமல் அநீதி இழைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகளானது எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாத காலப்பகுதியில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் எனது நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் திருகோணமலை மாவட்டத்தின் அமைப்பாளர் பதவியை அம்பாறைக்கு மாற்றி வழங்குமாறும் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு எந்தவித சாதகமான பதிலும் வழங்கப்படவில்லை.

எனவே, இவ்வாறான காரணங்களை அடுத்தே எனது மாகாணசபை உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளேன்-என்றார். (ச)

# விபத்தில் ஒருவர் சாவு; ஐந்து பேர் படுகாயம்

மட்டக்களப்பு,ஜூன் 13
மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள சத்துருக்கொண்டானில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் 12 வயதுச் சிறுவன் படுகாயமடைந்துள்ளான் என்று மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர், ஐயங்கேணியில் இருந்து மட்டக்களப்பு, திருப்பெருந்துறையிலுள்ள கண்ணகை அம்மன் கோயில் உற்சவத்துக்காக சிறுவனை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு தந்தை பயணித்துள்ளார்.

அவ்வேளை வாகனம் ஒன்று சைக்கிளை மோதிவிட்டு அதிவேகமாக சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை-மட்டக்களப்பு, மண்டூரில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

> மண்டூர் பகுதியில் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது.

மண்டூர்-14 ஆம் பிரிவிலிருந்து காக்காச்சுவட்டை கிராமத்தை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும், மண்டூர் கிராமத்திலிருந்து மண்டூர்-14 ஆம் பிரிவை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் மண்டூர் வைத்தியசாலைக்கு முன்பாக நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றம்; தமிழ் மக்களுக்கு நன்மை

## செல்வராசா எம்.பி.தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜூன் 13
இந்திய அரசியலிலே மாற்றம் ஏற்பட்டபோது தற்போது இலங்கையிலும் பேரினவாதிகளாக இருந்த அரசியல் கட்சிகள் கூட தமிழர்களின் உரிமைகளை கோருகின்ற ஒரு கட்சிகளாக மாறியிருக்கின்றன. 13 ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ் அதிகாரம் ஒரு போதும் வழங்கப்படமாட்டது என்று கூறிய அமைச்சர் கெஹலியரம்புக்வெல அதனை வழங்க முயற்சிக்கலாம் எனக் கூறியுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று இந்தியாவின் அரசியல் மாற்றம் எமது நாட்டின் இனப்பிரச்சனை தீர்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை நாம் காண்கின்றோம். 13 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற மாட்டோம்; பொலிஸ் அதிகாரமோ, காணி அதிகாரமோ வழங்கக் கூடாது; அந்த தீர்வுத் திட்டத்தையே நீக்கி விட வேண்டும் என்று கூறிய ஜாதிக ஹெல உறுமய போன்ற பேரினவாத கட்சிகள் தற்போது தமிழர்களின் அபிலாசைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான் தமிழர்களின்பிரச்சினைகளை தீர்க்கவல்ல கட்சி என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. அந்த அளவுக்கு சர்வதேசத்துக்கு எமது பிரச்சினைகளை கொண்டு சென்று அதிலே வெற்றிவாகை சூடிக்கொண்டிருக்கின்றோம்.

இதன் வெளிப்பாடே தற்போது மீண்டும் [illegible] ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான பேச்சுக்கள் இடம்பெறுகின்றது-என்றார். (ச)


## INVITATION FOR BID
## SEVALANKA FOUNDATION
## KILINOCHCHI

Reg.No.GL41

UNHCR
The UN Refugee Agency

**SEVALANKA FOUNDATION** is a National Non-Governmental Organization (NGO) which has been in existence for the last Twenty years serving the needy and the deserving, severely affected either by natural disasters or by internal conflict across the entire country, and generously funded by the **UNHCR.**

1. **Sealed Bids are invited for the following works from eligible and qualified bidders for the Construction of Class room building 120' x 27' below from 13th of June 2014 at 09.00 a.m.** and will be **open on 19th of June 2014 at 2.45 pm** in the District Office, No 75,Thirunagar Road, Kilinochchi. Late bids will be rejected. The bidders or their authorized representatives are invited to be present at the opening occasion.
2. Bidding will be conducted through Local Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered having registered office within territorial area Northern in the field of Building Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 1 item 5 of the Bidding document. Additional details are provided in the bidding Data sheet (Section -02)
5. Interested bidders may obtain further information from **Project Manager, District Office, No 75, Thirunagar Road, Kilinochchi through fax (Tel No: 021-2285082)** or E-Mail to kilinochchi.finance@sevalanka.org and inspect the bidding documents at the same address on any working days other than Sundays from 9.00 hrs to 17.00 hrs on or before **19th of June 2014 at 02.30 p.m.**
6. Pre-bid Consultation : The firms those are interested for consultation before to bid, a pre bid consultation will be given to them on **18th June 2014 at 2.00pm** regarding information on the requirements, specification, standards of the construction work
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Project Manager, District Office, No 75, Thirunagar Road, Killinochchi** from **2014.06.13 until 2014.06.19 from 9.00 hrs to 17.00 hrs and before 2.30 p.m on 19.06.2014** upon payment of non-refundable fees of **Rs. 2,000.00** for each bid. The method of payment should be by cash.
8. Prepared Bids adhering to all the conditions specified in the Bid Documents should be put into the tender box at **District Office, No 75,Thirunagar Road, Kilinochchi,** or sent by registered post addressed to: **The Project Manager, Sevalanka Foundation, District Office, No 75, Thirunagar Road, Kilinochchi, Srilanka to receive on or before 19th of June 2014 at 2.30 pm. Tender code number must be mentioned in the top of the envelop.**
9. The validity should be offered for 60 days from the time of opening of bids and 180 days from the binding of contract agreement.

The bill of quantity envisaged in the projects advising to quote to the works as per the specifications on bid codes are as follows.

| Tender Code | Narration of the works | Total estimated amount in LKR | Required ICTAD Grade | Bid Bond in LKR |
|---|---|---|---|---|
| SLF/UNHCR/ KILI/P-I/01 | Construction of Class room building 120' x 27' at Iyanarpuram, Vannerikkulam in Mullaitivu District. | 5.6 Mn | C7 or above | 56,000/- |

Any expenses arising on the preparation of bid document and submission should not be reimbursed.

**Project Manager,**
**SEVALANKA FOUNDATION,**
**District Office,No 75, Thirunagar road, Kilinochchi.**

(C/41386)(5.3)



## மணமகன் தேவை

சுவிஸ் பிரஜாவுரிமை பெற்று மருத்துவ தொழில்நுட்பவியலாளராக மருத்துவமனையில் பணிபுரியும் 1987 ஆம் ஆண்டு பிறந்த உத்தரட்டாதி நட்சத்திரமுடைய மணமகளுக்கு மருத்துவர் அல்லது நன்கு படித்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சாதகம் மற்றும் புகைப்படத்துடன் மின்னஞ்சல் ஊடாகத் தொடர்புகொள்ளவும்.

மின்னஞ்சல் முகவரி: vnaala@hotmail.com
தொ.பே. 0041 779 624 520 (48923)(45.6.3)



## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(செல்வா தியேட்டருக்கு முன்பாக ஆசிறி லாய்ப்புக்குப் பக்கத்தில் வலதுபக்கம் மேல் மாடியில்)

Spoken English With Grammar,
Shorthand Typing, சிங்களம்,
ESOL, IELTS ஆகிய வகுப்புகள் நடை பெறுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் 14.06.2014.
பழைய இயக்குநரும் ஆசிரியையும்

**இ.லோகநாயகி**
**TP: 077 677 9340**
பாட முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



## வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு அம்பலவாண விக்கினேஸ்வரர் பிள்ளையார் கோயில்

## மஹோற்சவம் - 2014

16.06.2014 - திங்கட்கிழமை
முற்பகல் 11 மணி - கொடியேற்றம்

20.06.2014 - வெள்ளிக்கிழமை
மாலை 6 மணி - தண்டிகைத் திருவிழா

23.06.2014 - திங்கட் கிழமை
மாலை 6 மணி - சப்பறத் திருவிழா

24. 06.2014 - செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10 மணி - தேர் உற்சவம்

25.06.2014 - புதன்கிழமை
முற்பகல் 10 மணி - தீர்த்தோற்சவம்
மாலை 5 மணி - கொடியிறக்கம்
இரவு 7 மணி - பஞ்சேஸ்வரர் உற்சவம்

26.06.2014 - வியாழக்கிழமை
மாலை 6 மணி -
வசந்தோற்சவம் - பூங்காவனம்

அனைவரும் வருக அருள்பெறுக

கோயில் அறங்காவலர்கள்

(48936)(45.6.3)

## குருபூசையும் பரிசளிப்பு விழாவும்

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஏற்பாட்டில் திரு ஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையும், பேச்சுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.15 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. வரவேற்புரையைநயினை. சி.சோமேஸ்வரபிள்ளைநிகழ்த்துவார். தலைமையுரையை இரா.செல்வ வடிவேல் ஆற்றுவார்.
பரிசில்கள், சான்றிதழ்களை க.அருள்நேசன் வழங்க, நன்றியுரையை சொ.முகுந்தன் கூறுவார். (க)

## பெண்ணின் சாதுரியத்தால் சங்கிலித் திருட்டு தோல்வியில்

பெண்ணின் சங்கிலியை திருடர்கள் அறுக்க முயன்றவேளை குறித்த பெண்ணின் சாதுரியத்தால் சங்கிலியின் ஒரு பகுதியுடன் திருடன் தப்பி ஓடியுள்ளான். இந்தச் சம்பவம் கடந்த திங்கள் இரவு வரணி வடக்கு தம்பான் பிரதேசத்தில் இடம்பெற்றது.
குறித்த பெண் நடனம் பயிற்றுவிக்கும் ஆசிரியை என்றும் அவர் அன்றைய தினம் வீட்டுக்குஅண்மையில்இடம்பெற்று வரும் கோயில் திருவிழாவுக்கு செல்வதற்கு ஆயத்தமான வேளை முகத்தை துணியால் மறைத்துக் கொண்டு திருடன் வீட்டுக்குள் உட்புகுந்தான். இதை அவதானித்தபெண் சாதுரியமாக சங்கிலியைப் பற்றிப் பிடித்துக் கொண்டு கூக்குரல் இட்டதாகவும் அயலவர் வரும்முன்புதிருடன்ஓடித்தப்பிய தாகவும் கூறப்பட்டது. (வ-122)

## கோயிலை வலம் வருவது ஏன்?

கோயில் தரிசனத்துக்குப் போகும் இளைஞர்களிடம் பெரியோர்கள் "கோயிலை வலம் வர மறந்துவிடாதே" என்று கூறுவதுண்டு. கோயிலை வலம் வரவேண்டும் என்பதே இந்தப் போதனை. இதன் பின்னால் சிறப்பான ஓர் அர்த்தமும் சாஸ்திரமும் உண்டு.
காலையிலும் மாலையிலும் பொதுவாக உடற்பயிற்சியின் வேளைகளாக நாம் பழக்கப்படுத்தியுள்ளோம்.

ஞானக்கதிர்

இது இயலாதவர்களுக்கு கோயில் தரிசனமும் கோயிலைவலம் வருவதும் நல்ல உடற் பயிற்சியாக அமையும். சிறியவர்களுக்கும் பெரியவர்களுக்கும் எளிதில் செய்யக்கூடிய ஓர் உடல் பயிற்சியே கோயிலை வலம் வருதல். காலணிகளைக் களைந்து வலம் வருதல், தோப்புக்கரணமிடுதல், கும்பிடுதல் முதலியவை உடற்பயிற்சியின் சக்தியை அதிகரிக்கின்றது. இவ்வாறு நாமறியாமலே உடலிலுள்ள எல்லா முட்டுக்களும் தசைகளும் நன்றாக அசைவடையும் ஓர் உடற்பயிற்சியே கோயில் தரிசனத்தில் நாம் செய்வது.
வலம் வைத்தல் என்பது வலது பக்கம் சுற்றி வருதல் என்பதே. பொதுவாக கோயில் வலம் வருவது வலம் பக்கமாகத்தான்.
இப்படிச் செய்வதில் நாம் இறைவனுடன் கூடுதல் நெருங்குகின்றோம் என்பது ஆசாரியார்ப் படிப்பினை. கோயில் வலம் வரும் போது முன் ஜென்மங் களில் செய்த பாவமும் அழிந்துவிடும் என்பது நம்பிக்கை.



உலக சுற்றாடல் தினத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினர் கடந்த 5 ஆம் திகதி தனன்கிளப்பு பகுதியில் மரம் நடுகைத் திட்டத்தை மேற்கொண்டனர். தனன்கிளப்பு அ.த.க. பாட சாலை, பொது அமைப்புகளின் கட்டடங்கள், ஆலயங்கள் போன்றவற்றில் மரக்கன்றுகள் சம்மேளனப் பிரதிநிதிகளால் நடப்பட்டன. (வ-9)

## சமய சந்நிதிகளில்

ஏழாலை தெற்கு மயிலங்காடு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.
தினமும் மாலை 5.00 மணியளவில் ஆரம்பமாகும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து இரவு 7 மணியளவில் சுவாமி வெளி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (வ-86)

* * *

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற்று சங்காபிஷேகத்துடன் திருவிழா நிறைவு பெறும். தினமும் அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். (க-28)

## விளையாட்டு விழா

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க முன்பள்ளிச்சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் சன்மார்க்க சனசமூக நிலையத் தலைவி தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரெட்னம் கலந்து கொள்ளவுள்ளார். (86)

## குரு மாற்ற வழிபாடு

வவுனியா, ஜூன் 12
இன்று வெள்ளிக்கிழமை வியாழ மாற்றம் தொடர்பான விசேட பூசை வழிபாடுகள் வவுனியா கோயில்குளம் மகா விஷ்ணு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.
வியாழ பகவான் இன்று மாலை 5.39 மணியளவில் கடகராசிக்குள் பிரவேசிக்கும் போது விசேட பூசை நாமார்ச்சனைகள், மஞ்சள் பொடி கலந்த நீர் அபிஷேகம் என்பன இங்கு இடம்பெறவுள்ளன. (க)

## சடலத்திலிருந்து திருடப்பட்ட சங்கிலி மீட்பு

கொழும்புத்துறை, ஜூன் 12
அரியாலைப் பகுதியில் இறந்த பெண்ணொருவரின் உடலில் இருந்து திருடப்பட்ட 5 பவுண் சங்கிலி அடுத்த நாள் வீட்டு முற்றத்தில் வீசப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.
அரியாலை தபாற்கட்டைச் சந்திப் பகுதியில் உறவினரின் வருகைக்காக வைக்கப்பட்ட வீட்டிலிருந்த சடலத்தில் இருந்து திருடப்பட்ட சங்கிலியே வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் திருடனை பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் பரவியதை அடுத்து இவ்வாறு வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது. (வ-135)

## பொதுச் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
அரச சேவை ஓய்வூதியர்களின் 13 ஆவது பொதுச் சபைக் கூட்டம் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய நிகழ்வில் அரச நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சர் உட்பட உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பீ.பீ.அபேக்கோன் மற்றும் ஓய்வூதியத் திணைக்கள ஆணையாளர் சுனில் ஹெட்டி ஆராட்சி ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்து கொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-122)

## நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றுதல்

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி (ஏஆர்வி) பின்வரும் இடங்களில் வைத்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

17 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- ஞானக்குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி,
மு.ப.11.30-பி.ப.1.30- ஐயனார் கோயிலடி,

18 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- முருகமூர்த்தி வீதி,
மு.ப.11.30-பி.ப.1.30- கலைவாணி சனசமூக நிலையம்.

19 ஆம் திகதி
காலை 9-மு.ப.11-தாமரை வீதி,
மு.ப.11.30-பி.ப.1.30- பெரிய தம்பிரான் வீதி.

20 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- வள்ளுவர் சனசமூக நிலையம்,
மு.ப.11.30-பி.ப.1.30-கலைமகள், பாலர் பாடசாலை கே.கே. எஸ்.வீதி-

23 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- பிறவுண் வீதி 2 ஆம் ஒழுங்கை
மு.ப.11.30-பி.ப.1.30- பிறவுண் வீதி 1 ஆம் ஒழுங்கை.

24 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- அன்னசத்திர லேன், நாவலர் வீதி,
மு.ப.11.30-பி.ப.1.30- மணிக்கூட்டு லேன்

25 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- சபாபதி லேன்,
மு.ப.11.30-பி.ப.1.30-பூநாரி லேன்.

26 ஆம் திகதி
காலை 9-மு.ப.11- பலாலி வீதி 4 ஆம் ஒழுங்கை.
மு.ப.11.30-பி.ப.1.30 பலாலி வீதி. 4 ஆம் ஒழுங்கை. (க)

## மாதாந்த பொதுக் கூட்டம்

வரணி, ஜூன் 13
வரணி பிரதேச வைத்திய சாலை நோயாளர் நலன் புரி சங்கத்தின் மாதாந்த பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை வைத்திய சாலை மண்டபத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
வழமையாக போயா தினங்களில் இடம்பெறும் மாதாந்த பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் மேற்குறித்த திகதி இடம்பெறும் எனவும் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (க-122)


**பதவி வெற்றிடம்**
AIA Insurance Lanka PLC (General Insurance)
பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1) சந்தைப்படுத்தல் முகாமையாளர்
தகைமை - A/L, 3 வருட காப்புறுதி அனுபவம்
2) சிரேஷ்ட சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
தகைமை - O/L, ஒரு வருட காப்புறுதி அனுபவம்
3) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
தகைமை - O/L - 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் - தமிழ், கணிதம் உட்பட.
4) அலுவலக உத்தியோகத்தர்
தகைமை - A/L

நேர்முகத் தேர்வு:
இடம்: AIA காப்புறுதி நிறுவனம்
62/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (NDB வங்கியின் முதலாம் மாடியில்)
திகதி: இம்மாதம் 16ஆம், 17ஆம் திகதி (திங்கள், செவ்வாய்) ஆகிய நாள்களில்
நேரம்: காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை.
தொடர்பு: 077 476 6466, 075 651 9856
Mr. S.Shiva Senior Executive Jaffna Branch (N/I) Contact No. 077 375 1383





**கிருஷ்ணா அடகு சேவை**
பதிவு இல : J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2013 ஆம் ஆண்டு **31.05.2013** இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2014ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி **(15.07.2014)** இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும்.
புதுப்பிக்கத் தவறின் **15.07.2014** ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர் : A.S.Surendran

இல.370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 021 490 0311
இல.9, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5046
(C/14715)(7.6.3)


## திருப்பதிகம் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜூன் 13
அகில இலங்கைத் திருமுறை மன்றம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிமுதல் நல்லூர் ஸ்ரீசட்ட நாத ஸ்வாமி தேவஸ்தானத்தில் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு அவர் அருளிய அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல் நடைபெற்று விசேட பூசைகள் வழிபாடுகள் இடம்பெறவுள்ளது. (ஒ)


**TRADE FINANCE & INVESTMENTS PLC**

Since 1978
A Finance company Licensed by the Monetary Board of the Central Bank of Srilanka Under the finance Business Act No.42 of 2011

**மோட்டார் சைக்கிள்கள்**
1) APACHE - 180 - NPXX-XXXX
2) PLEASURE - NPBAL - XXXX
3) TVS XL SUPER HD - NPXV - XXXX
4) YAMAHA SZ - R - NPBAF - XXXX

**உழவு இயந்திரங்கள் (MASSEY FERGUSAN)**
1) 49 - XXXX

**மோட்டார் கார்**
1) WPHO - XXXX (TOYOTA HARRIER JEEP)

**முச்சக்கர வண்டி (TVS)**
1) NPAAD - XXXX
2) NPQA - XXXX

(சி14747) (12.5.6)
தொடர்புகளுக்கு: மேனகாந் - 077 364 4409

TRADE FINANCE AND INVESTMENTS PLC
74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898

# யாழ்: பாஷையூர் அந்தோனியார்

## ஆலயப் பெருவிழா

## 13.06.2014



### பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயம்

164 வருட சிறப்புமிக்க பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயமானது அதன் வருடாந்த திருவிழாவை கொண்டாட ஆயத்த மாகும் இவ்வேளையில், பங்குத்தந்தை அருட்திரு ரோய் பேடினன்ட் அடிகளாருக்கும், உதவிப் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்குமக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், செபங்களையும் கூறி நிற்கின்றேன். மேலும் அதன் மகத்தான சிறப்புக் களில் ஒரு சிலவற்றை பகிர்ந்து கொள்கின்றேன். பாஷையூர் பங்கானது 1850ஆம் ஆண்டிலிருந்து தனிப் பங்காக செயற்பட்டு வருகின்றது. காலத்துக்குக் காலம் அர்ப்பணமிக்க பங்குதந்தையரின் மேற்பார்வையிலும் ஆர்வமிக்க பங்கு பொதுச்சபை உறுப் பினர்களின் பங்களிப்புடனும் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. கடல்வளம், மொழிவளம், கலைவளம் கொழிக்கும் பாஷை யூர்ப் பங்கானது யாழ்ப்பாண மாநகரின் ஓர் ஆசீர்வாதம் நிரம்பிய ஒரு சொத்தாகும். விளையாட்டுத் துறையிலும் சரி, கலைத் துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி நற்பிரசைகளை உருவாக்கி ஊருக்கும் உலகிற்கும் பெருமை தேடித் தருவது இவ் வூரின் தனிச் சிறப்பாகும்.

1844, 1845ஆம் ஆண்டுகளில் தியான சபை (ORATORIAN) குரு அருட்திரு கபிரியேல் ஜோகின் அடிகளாரால் ஆரம்பக் கோயில் கல்லால் கட்டப்பட்டது. இருப்பினும் இக்கோயில் இதற்கு முன்னைய காலத்தில் கிடுகுகளால் கட்டப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. 1906ஆம் ஆண்டு இக்கோவில் அருட்திரு கௌதியர் அடிகளாரால் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றது. பழைய கோவில் இடிக்கப்பட்டு ஒரு புதிய கோவில் கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து அருட்தந்தை விக்டர் டெஸ்லான்ஸ் அடிகளாரின் விசேட பங்களிப்பும் இக்கோவிலுக்குக் கிடைத்தது. 1911ஆம் ஆண்டுகளில் விசாலமான 106×38 அளவு கொண்ட யன்னல்கள் கோவிலின் மேல் பக்கத்திலும், இருமருங்கிலுமுள்ள சாலைகளும் (விராண்டாக்களும்) கட்டிமுடிக்கப் பட்டன. அருட்திரு பவுறில் அடிகளாரின் ஆன்ம தாகத்தில் 1918ஆம் ஆண்டு பெல்ஜிய நாட்டிலிருந்து பெறப்பட்ட உயி ரோட்டமுள்ள சிலுவைப் பாதைப் படங்கள் நிறுவப்பட்டன. எமது கோவிலின் 100ஆவது வருட நினைவுச் சின்னமாகிய சிங் காரத் தேர் 1950ஆம் ஆண்டிலிருந்து வெகுவிமரிசையாகப் பவனி வருகின்றது.

கோவில் திருவிழாவையொட்டி சிறப்பான பல அம்சங்கள் நடைபெறுவது வழமை. ஆனி முதலாம் திகதி கொடியேற்றம் இடம்பெறும். 3ஆம் திகதி ஊரின் துறைமுக வாயிலில் கடல் அந்தோனியார் என்று அழைக்கப்படும் சுருவத்தின் அண்டை சென்று வழிபாடு நடத்துவது தனிச்சிறப்பாகும். 4ஆம் திகதியிலிருந்து நவநாள்கள் தொடர்ச்சியாக சிறப்பு மறையுரைகள் மூலம் நடைபெறும்.

13ஆம் திகதி காலையில் திருவிழா திருப்பலி ஆயரின் தலைமையில் நடைபெறும். இன்று மாலை திருத்தேர் பவனி நடைபெறும். சக வீதிகளும் அழகாக அலங்கரிக்கப்பட்டு வர்ண மின் விளக்குகளால் சோடனை செய்யப்பட்டிருப்பது கண் கொள்ளாக் காட்சியாகும். இவ்வரிய காட்சியை காண்பதற்கும், ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும், புனித அந் தோனியாரின் பரிந்து பேசுதலை பெறுவதற்கும் இனம், மதம், மொழி பேதமின்றி மக்கள் ஒன்று கூடுவர். கேட்டவருக்கு கேட்ட வரம் அளிக்கும் புதுமை வள்ளல், கோடி அற்புதர், நாவழியா வரத்தர் புனிதர் அந்தோனியாரின் ஆசீர்பெற மக்கள் வெள்ளம் ஆனி மாதம் முழுவதும் பாஷையூரை மக்கள் வெள்ளமாகவே காட்சியளிக்க வைக்கும். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரு விழாக் காலங்களில் மாத்திரமல்லாமல் தினசரி விஷேடமாக செவ்வாய்க்கிழமைகளில் இக்கோவிலை தரிசித்து புனித அந் தோனியாரின் பரிந்து பேசுதலால் ஆன்ம உள சுகம் பெறுவது அன்றாடம் காணும் காட்சியாகும். இத்திருவிழாவானது பாஷை யூர் மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தும் ஓர் அழகான சந்தர்ப்பமாகும். இத்திருவிழாவிற்காக வெளிநாடுகளில் பணிபுரியும் பங்கு மக்களும், இலங்கையின் ஏனைய பாகங்களில் பணிபுரியும் ஊர்மக்களும்,பாஷையூர் பங்கு மக்களும் ஒன்றாக கூடுவர். இவ்வரலாற்று சிறப்புமிக்க புனித அந்தோனியார் அருளைப்பெற உங்கள் அனைவரையும் திருவிழாவிற்கு அழைக்கின்றோம்.

அருட்தந்தை கே.நே.ஏபிரகாம்
(முத்து-பங்குமகன்), நுவரெலியா.

### அருளாசி நிறைவாக பெருக ஆசிக்கின்றேன்

நான் உங்களோடு இணைந்திருப்பது போல நீங்களும் என்னோடு இணைந்து இருங் கள் (யோவா- 15;4)

புனிதர்களுடனான சமூக உறவைப் விசு வசித்து சுமுகமான உறவை வளர்க்க விரும்பும் எவரும் இறைவனோடு இணைந்து இறை விருப்பத்தின்படி வாழ விரும்புகிறான் என்பது மகத்துவ மான உண்மை.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில், கத்தோலிக்க மதம் பல சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்த காலத்தில் 1775ஆம் ஆண்டு புனிதருக்கு ஒரு சிற்றால யம் பாஷையூரில் அமைக்கப்பட்டது. இம் மண்ணின் ஆழமான விசுவாசத்தைக் காட்டுகின்றது. விசுவாசம் வளர்த்து கத்தோலிக்க மறைகாத்த கத்தோலிக்கர் எந்த மிரட்டல்களுக்கும், தண்டனைகளுக்கும் அஞ்சாமல், விசுவாசத்தை பகிரங்கமாக கடைப்பிடிக்கத் துணிந்தனர். அதன் அடிப்படையில் தமக்கென ஒரு சிற்றாலயத்தை அமைத்த பெருமை எம் மண்ணின் மைந்தர்களுக்கும் உரியது. மக்களும் இறை உறவுக்குள் நிலைக்க விரும்பி னர், அதனால் புனிதர்களின் உறவுக்குள் நிலைத்த புனித வாழ்வை, சாட்சிய வாழ்வை வாழ ஆரம்பித்தனர்.

ஆனி மாதம் பிறந்துவிட்டது, நாடி வந்தோர் துயர் துடைக்கும் கோடி அற்புதராம் புனித பதுவை அந்தோனி யாரின் கொடி பாஷையூர் பதியில் வழமைபோல் ஏற்றப் பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது. இன, மத வேறு பாடின்றி பக்தர் வெள்ளம் கூடிவருகின்றது. தேடிவரும் அனைவரும் தூயவரின் பரிந்துரையால் கேட்ட வரமும் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்.

நம் பாதுகாவலராம் தூய அந்தோனியாரின் பரிந் துரையும் இறைவனின் நல்லாசியும் நிலைத்திருக்க வாழ்த்தி ஆசிக்கின்றேன்.

அருட்பணி செ.ரோய் பேடினன்
பங்குத் தந்தை, பாஷையூர்.

பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள், பிஸ்கற் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர், குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்
குமார்
பேக் ஹவுஸ்
சென். செபஸ்தியான் வீதி, பாஷையூர்.

சகல புரியாணிகள் (சைவ, அசைவம்), குளிர்பானங்கள் சிற்றுண்டிகள் (ரோல்ஸ், வடை, கட்லட், சமோஷா) என்பவற்றை சுவையாக உண்டு மகிழ
ஹொட்டல் றொலெக்ஸ்


ஓடர்கள் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
340, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2808
360, காலி வீதி, கொழும்பு-06. தொ.பே: 2360462

டோனிகா
நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்
நம்பிக்கை, நாணயம், நயமான சேவை
82, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
T.P:077 888 6191

எமது பாஷையூர் மக்களுக்கு ஆசி வழங்குமாறு தேரோடும் அந்தோனியாரைப் பிரார்த்திக்கின்றோம்.
யாழ்.பாஷையூர்
புனித அந்தோனியார் கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும்,
பாஷையூர் கிராமிய கடற்றொழில் அமைப்பும்,
கடற்கரை வீதி, பாஷையூர்
021 300 6982

தேவி ஸ்ரோர்ஸ்
பல்பொருள் வாணிபம்
புதினப் பத்திரிகை முகவர்
பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட சிறகு வலைகளுக்குரிய தரமான நிர்மலா நீல வலைகள். பொலித்தீன் கயிறுகள், தும்புக்கயிறுகள் மற்றும் ஏனைய கடல் தொழில் உபகரணங்களை பெற்றிட
சுமதி விற்பனை நிலையம்,
No.165, கடற்கரை வீதி, பாஷையூர், யாழ்ப்பாணம்.
(மீன் சந்தைக்கு முன்னால்)
தொடர்பு 077 549 0359
(C/138-47)(10.6.3)

பெனா
மல்ரிமால்
அழகுசாதனப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், கவறிங் நகைகள், அன்றாட பாவனைப் பொருள்கள், பலசரக்குப் பொருள்கள் யாவும் நியாயமான விலையில்பெற்றுக்கொள்ளலாம்.
82, ஈச்சமோட்டை வீதி,யாழ்ப்பாணம்.

ஆகாஸ்
பான்சி குட்ஸ்
தையல் தொழிலகம்
ஆண், பெண்களுக்கான ஆடைகள் குறித்த நேர காலத்தில் ஓடருக்குத் தைத்துக் கொடுக்கப்படும்.
பீச் றோட், ஈச்சமோட்டை.

வில்லவையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள்
கச்சான் பிஸ்கட்
J/DS/BR/750
சேர்வைகள்:
கச்சான், மா, சீனி, மாஜறின், பால்மா, அங்கீகரிக்கப்பட்ட எசென்ஸ்
கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம்
இல.76/5, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை. பதிவு இல.4456,
No.76/5, Eachchamoddai Road, Jaffna, Sri Lanka.
077 312 6909

பானுயன்
அரிவு மில்
சகல விதமான மரவகைகள் குறித்த தவணையில் பலகைகள், நீராந்திகள், தளபாட வகைகள் ஓடருக்குச் செய்து தரப்படும்



யாழ்ப்பாணம் ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் பாதையில் தண்டவாளங்களைப் பொருத்தும் இயந்திரம் இந்த வாகனத்தில் தான் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த வாக னத் துக்குள்ளே இயந்திரத்தை வைத்தே தண்டவாளங்கள் பொருத்தப்படுகின்றன. (வ-21)

## சாவகச்சேரி தனங்களப்பு சந்தி வரையான வீதி திருத்தப்படுமா?

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரியிலிருந்து மன்னார் செல்லும் வாகனங்களின் பிரதான வீதிகள் செப்பனிட்டுள்ளபோதும் சாவகச்சேரியிலிருந்து தனங்களப்பு சந்தி வரையான வீதி திருத்தப்படாதது குறித்து பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாகச் செல்லும் வாகனங்களில் பெரும்பாலானவை சாவகச்சேரி ஊடாக தனங்களப்பு சென்று பயணத்தைத் தொடர்கின்றன.

அந்த வீதியின் பல இடங்கள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர்.

சாவகச்சேரியிலிருந்து சுமார் 4 கிலோ மீற்றர் நீளமான வீதியை ஏனைய வீதிகளைப் போல காப்பெற் வீதியாக மாற்றித் தருமாறு உரிய அதிகாரிகளை மக்களும் வாகனச் சாரதிகளும் கோரியுள்ளனர். (வ-9)

## இரவிலும் மீன் விற்பனை; விரைவில் கூடி முடிவு

### கொக்குவில் சந்தையில்

யாழ்ப்பாணம், ஜூன் 12

கொக்குவில் சந்தையில் இரவில் மீன் விற்பனை செய்வது தொடர்பாக பிரதேச சபைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

கொக்குவில் சந்தையில் இர வில் மீன்விற் பனை செய்வ தற்கு அனுமதி கோரியுள்ள மீன்வியாபாரிகள் 5 பேர் இது தொடர்பாக சபையை அணுகியுள்ளனர். இது குறித்து சபைக் கூட்டத்தில் உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து உரிய தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)



கோப்புப்படம்

## தோல் கிளினிக்கில் அதிகமானோர் பயன்

### சாவகச்சேரி மருத்துவமனையில்

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் தோல் கிளினிக்கில் யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சைபெறவருவதால் வாராந்தம் 75 இற்கு மேற்பட்டோருக்கு சிகிச்சையளிப்பதாக மருத்துவமனைப் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகிறது.

தென்மராட்சி பிரதேச மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் மருத்துவமனையில் கடமையாற்றும் பயிற்சி பெற்ற மருத்துவர் தலைமையில் தோல் நோயாளர்களுக்கான கிளினிக் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் பளை, வடமராட்சி கிழக்கு, பூநகரி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் கிளினிக்குகளில் கலந்து கொண்டனர்.

தற்போது யாழ்.மாவட்டத்தில் தீவகம், வலிகாமம், யாழ்ப்பாணம்போன்றபிரதேசங்களைச் சேர்ந்த தோல் நோயாளர்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வாராந்தம் 50 பேருக்கு இலக்கத் துண்டுகள் வழங்கப்படுகின்ற போதிலும், மேலதிகமாக 25 இற்கு மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தோல் கிளினிக்கில் கலந்து கொண்ட நெடுந்தீவு, சுழிபுரம், குருநகர், கோண்டாவில், அச்சுவேலி போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களிடம் யாழ்.போதனா மருத்துவமனையில் தோல் கிளினிக் நடைபெறுகின்ற போது இங்கு கிசிச்சை பெற வந்துள்ளீர்களெனக் கேட்ட போது:-

யாழ்.போதனா மருத்துவமனை தோல் கிளினிக்குக்குச் சென்றால் ஒன்றரை மாதம் தொடக்கம் 4 மாதம் வரை திகதியிட்டு அந்தத் திகதியில் வருமாறு மருத்துவர்களால் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இங்கு உடனுக்குடன் சிகிச்சை வழங்கப்படுகிறது. தமக்குரிய மருந்துகளும் மருத்துவமனையில் வழங்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது;

தோல் கிளினிக் வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் ஒரு மணியிலிருந்து மாலை 4 மணி வரை என்று அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் மாலை 6 மணி வரை கிளினிக் நடத்தப்பட்டு வரும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ)

## கூ.சங்கக் கிளைகள் மூடியதால் சிரமம்

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நுணாவில் மேற்கு மலர்மகள் ஆகிய கிளைகள் மூடப்பட்டதால் அந்தக் கிளைக் கடைகளில் பொருள்கள் பெற்ற மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நிவாரணப் பொருள்கள், சமுர்த்தி உதவிப் பொருள்கள் விநியோகம் இல்லாததால் சங்க கிளைக் கடைகளுக்கு மக்கள் செல்வது குறைவடைந்ததை அடுத்து கடைகள் மூடப்பட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன் கிளைக் கடைகள் இருந்த வாடகைக் கட்டணங்கள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும் கிளைகள் அமைப்பதற்கு கட்டடம் இல்லாததால் கிளைக் கடைகளை அமைக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## நடமாடும் பாண் விற்பனை குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பேக்கரி உரிமையாளர்கள் நடமாடும் பாண் விற்பனையாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றை நடத்த நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

சபைக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த பாண் உற்பத்தி யாளர்கள், வியாபாரிகள், வெளியில் இருந்து வரும் பாண் விற்பனையாளர்களால் பாதிக்கப்படுவதாகவும் நடமாடும் பாண் வியாபாரத்தை தடைசெய்ய வேண்டும் என்று கருதப்படுகிறது.

இது தொடர்பாக பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறும் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் பிரதேச சபையின் அனுமதியின்றி பேக்கரிகளோ நடமாடும் விற்பனையோ குறிப்பிட்ட விடயத்தை மேற்கொள்ள முடியாது என்றும் இதுதொடர்பாக சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும்தெரிவிக்கப்பட்டது.(வ-7)

## சாவகச்சேரி சந்தையில் பலாப்பழம் விலை வீழ்ச்சி

தென்மராட்சி, ஜூன் 13

சாவகச்சேரி பிரதேசத்தின் உற்பத்தியான பலாப்பழம், மாம்பழம் ஆகியவை பெருமளவில் சந்தைக்கு விற்பனைக்கு வருவதால் அவற்றின் விலைகளிலும் வீழ்ச்சி காணப் படுவதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக வெளியூர் வியாபாரிகள் அவற்றைக் கொள்வனவு செய்ய வராததால் பழங்களின் விலை என்று மில்லாத அளவு வீழ்ச்சியடைந்து வருவதாகவும் தெரிவித்தனர்.



மு.ப. 10 மணிக்குப் பின்னர் சந்தைக்கு மரக்கறி மற்றும் பொருள்கள் வாங்கச் செல்வோரில் தெரிந்தவர்களுக்கு பழவகைகளின் உற்பத்தியாளர்களால் பழங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும் சம்பவங்களும்இடம்பெற்றுவருகின்றன.

காலை 6 மணிக்கு சந்தைக்கு கொண்டு வந்து மு.ப.10 மணி வரை விற்பனையாகாமல் இருக்கும் பழ வகைகளே இவ்விதம் அன்பளிப்பாக வழங்கப்படுவதைக் காண முடிகிறது. (வ-9)

## குமுதினி பழுது; பயணிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நெடுந்தீவு கடல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் அரச படகு 'குமுதினி' பழுதடைந்ததை அடுத்து மீண்டும் போக்குவரத்துக் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாக நெடுந்தீவு மக்கள் தெரிவித்தனர்.

தற்போது வீசும் கடும் காற்று மற்றும் கடல் கொந்தளிப்பின் மத்தியில் பாதுகாப்பற்ற படகுகளில்மக்கள் தமது பயணத்தை சிரமங்களின் மத்தியில் மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். (ஓ-7)

## ஏழாலை வடக்கில் மோட்டர் திருட்டு

வலி.வடக்கு, ஜூன் 13

ஏழாலை.வடக்கில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள் வரிசையில் புதன்கிழமை இரவு மூன்று வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த மின் மோட்டர்கள் மிகவும் துணிச்சலான முறையில் களவாடிச் செல்லப்பட்டுள்ளன.

ஏழாலை தேவி கோயிலடி, கண்ணகி அம்மன் கோயிலடி மற்றும் அண்ணமார் கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீடுகளில் இருந்தே மோட்டர்கள் திருடப்பட்டுள்ளன.

குறித்த களவுகள் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## மீண்டும் இயங்கவுள்ளது எழுதுமட்டுவாழ் ஆயுள்வேத மருந்தகம்

தென்மராட்சி, ஜூன் 13

எழுதுமட்டுவாழ் ஆயுள்வேத மருந்தகம் மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது.

2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வின் போது முன்னர் இயங்கிய ஆயுள்வேத மருந்தகக் கட்டடம் எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தைக் கட்டடங்களுடன் முற்றாக அழிவடைந்தன.

ஆயுள்வேத மருந்தகம் இயங்காததால் கிளாலி, முகமாலை, கரம்பகம், ஒட்டுவெளி, எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் கொடிகாமத்தில் இயங்கும் ஆயுள்வேத மருந்தகத்துக்குச் சென்று சிகிச்சை பெற்று வந்தனர்.

ஆயுள்வேத மருந்தகத்தின் அவசியத்தை சுட்டிக்காட்டி சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை பிரதேச சபையின் கூட்டங்களில் கேட்டுக் கொண்டதையடுத்து சபை நிதி மூலம் கட்டடம் புனரமைக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட ஆயுள்வேத மருந்தகக் கட்டடத்தை சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சி.துரைராசா எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9.30 மணிக்குத் திறந்து வைத்து மருந்தக சேவையை ஆரம்பித்து வைப்பார்.

பிரதேச சபை செயலாளர் செல்வி தி.தர்சினி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.கைலைநாதன், பிரிவு கிராம அலுவலர் க.ஜனகன், பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளை ஆகியோர் உரை நிகழ்த்துவர். (வ-9)



வாழைக்குலை

## வாழைக்குலை சந்தைப்படுத்த முடியாதநிலை

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழைக்குலையை சந்தைப்படுத்த முடியாத நிலையில் செய்கையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மீள்குடியமர்ந்த மக்கள் வாழைச் செய்கையில் ஈடுபட்டுள்ள போதிலும், வாழைக்குலையை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது ஒரு கிலோ வாழைப்பழம் 15 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்ற போதிலும் அதனை வாங்குவதற்கு யாரும் முன்வருவதில்லை என்று செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் உழவர் சந்தை ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்த போதும் இதுவரை அது குறித்து எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர். (ச-500)

## வவுனியாவில் சேக்கிழார் விழா

வவுனியா, ஜூன் 13

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் ஏற்பாட்டில் சேக்கிழார் விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா, வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி ஆலய கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் செ.துரைராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், அகில இலங்கை இந்து மா மன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடமாகாண சபை உறுப்பினர் சு.இந்திரராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-421)

## காட்டுயானை அட்டகாசம் அதிகரிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீண்டும் யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. இதனால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர்.

கனகரத்தினபுரம், பேராறு, பண்டாரவன்னி, உடையார் கட்டு போன்ற இடங்களில் யானையின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

இரவு வேளைகளில் யானைகள் நடமாடி பயிர்களையும் அழிப்பதுடன் வீடுகளில் புகுந்து பொருள்களையும் சேதப்படுத்தி வருகின்றது என்று மக்கள் கூறினர். (ச-500)

# கிளிநொச்சி மாவட்டத்தில் நீர் வழங்கல் திட்டங்கள்

### முதற் கட்ட பணிகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஜூன் 13

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவும் பிரதேசங்களில் ஆறு கிராமிய நீர்வழங்கல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கிராமிய நீர் விநியோகத் திட்டத்தின் கீழ் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள முழங்காவில், நாச்சிக்குடா அன்புநகர், குமுழமுனை, இரணைமாதாநகர், வலைப்பாடு, வேரவில், சகாயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆனைவிழுந்தான், காந்திகிராமம் ஆகிய பகுதிகளிலும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் கல்லாறு கிராமம் உள்ளடங்கலாக ஆறு கிராமிய நீர் வழங்கல் வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆனைவிழுந்தான், கல்லாறு குடி தண்ணீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

அவற்றுக்கான ஆரம்பகட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன என்று நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் மாவட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஆனைவிழுந்தான், கல்லாறு குடி தண்ணீர் விநியோகத் திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

இதற்கான நிதி கிடைத்ததும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார். (ச-55)



அக்கராயன் குடிதண்ணீர் திட்டத்துக்காக அமைக்கப்பட்ட நீர்த் தாங்கியைக் காணலாம். (ச-18)

# கசிப்பு உற்பத்தியை தடுக்க வேண்டும்

### மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சி, பிரமந்தனாறு பகுதியில் இடம்பெற்று வரும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பிரமந்தனாறு பகுதியில் தொடர்ந்து சட்டவிரோத, கசிப்பு உற்பத்தி விற்பனை அதிகரித்துக் காணப்படுகின்றது என்று மக்கள் கூறினர்.

அதனால் கிராமத்தில் பல்வேறு சட்ட விரோத செயல்களும் இடம்பெறுகின்றன என்று மக்கள் சுட்டிக் காட்டினர்.

இவ்வாறு இடம்பெறும் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# வடிகால்களுக்குள் கழிவுத் தண்ணீர்

### தொற்றுநோய் பரவும் அபாயம்

கிளிநொச்சி,ஜூன் 13

கிளிநொச்சி நகரில் வடிகால்களில் கழிவுத் தண்ணீர் தேங்கிக் காணப்படுவதால் துர்நாற்றம் வீசி வருகிறது.

கிளிநொச்சி பிரதேச சபை முன்பாகவும், பொலிஸ் நிலையம் முன்பாகவும் உள்ள வடிகால் பகுதிகளில் நீண்ட நாள்களாகக் கழிவுத் தண்ணீர் தேங்கியுள்ளதால் துர்நாற்றம் வீசி வருகிறது.

மூடிய நிலையில் காணப்படும் வடிகால்களிலேயே இவ்வாறு கழிவுத் தண்ணீர் தேங்கி காணப்படுகின்றது.

ரயில் நிலைய வீதியின் முன்பாக வுள்ள வடிகால் பகுதியில் பயணிக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசி வருகிறது என்று மக்கள் கூறுகின்றனர்.

"தண்ணீர் தேங்குவதால் துர்நாற்றம் வீசி வருகிறது."

இந்தப் பகுதிகளில் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதில்லை.

அதனால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்தான சூழல் காணப்படுகிறது என்று மக்கள் விசனம் தெரிவித்தனர். (ச-55)

# ஆசிரியர்கள் கடமைக்கு சமுகமளிக்காத நிலை

### கிளிநொச்சி கல்வி வலயத்தில்

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சி கல்வி வலயத்தில் உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் பணிக்கு இதுவரை சமூகமளிக்கவில்லை என்றுமுறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலரால் பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று அதிபர்களுக்கும் வலயக் கல்வி அலுவலகத்துக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், பாடசாலைகளில் ஆசிரியர்கள் பணியை பொறுப்பேற்காத நிலைமை காணப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கிராமப் புறப் பாடசாலைகளுக்கு கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி ஏ-9 சாலையிலுள்ள முக்கிய பாடசாலைகளில் பணியாற்றுகின்றனர் என்று தெரிய வருகின்றது. (ச-18)

# பாதுகாப்பற்ற ரயில் கடவையால் அச்சத்தில் தினமும் பயணம்

வவுனியா, ஜூன் 13

வவுனியா, ஓமந்தை, பாலமோட்டை ஊடாகச் செல்லும் தார்ப் பாதையில் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவையால் பொது மக்கள் அச்சத்துடன் பயணம் மேற் கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாலமோட்டை, கோழியாங்குளம், வண்ணாங்குளம், மாதர்பனிக்கர் மகிழங்குளம், ஊறல்குளம், குஞ்சுக்குளம், கிழவிகுளம், கதிர்வேலர், பூவரசன் குளம், இறம்பைக்குளம், மல்லாவி ஆகிய இடங்களுக்குப் பயணிக்கும் மக்கள் பயன்படுத்தும் வீதிக்குக் குறுக்காகக் காணப்படும் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளால் பொது மக்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.



பாதுகாப்பற்ற ரயில் கடவை

இது குறித்து உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொதுமக்கள் குறிப்பிட்டனர்.

குறிப்பிட்ட ரயில் கடவையைக் கடக்க முயன்ற வேளை ரயிலால் மோதுண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும், மகனும் உயிரிழந்த சம்பவமொன்று அண்மையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இந்தப் பாதுகாப்பற்ற ரயில் கடவையை ரயில் பயணிக்கும் வேளையில் மூடி பாதுகாப்பை உறுதி செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

## அப்பிள் அறிமுகம் செய்யும் ஸ்மார்ட் கைக்கடிகாரம்



அப்பிள் நிறுவனம் வெவ்வேறு தொழில்நுட்பம், வடிவமைப்பைக் கொண்ட ஸ்மார்ட் கடிகாரங்களை உருவாக்கி வருகின்றது.

இவற்றில் முதனாவதாக வளைந்த ஓ.எல்.ஈ.டி. திரையைக் கொண்ட ஸ்மார்ட் கைக்கடிகாரத்தை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் அறிமுகம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ கடிகாரம் என்று அழைக்கப்படும் இக்கடிகாரம் 200 - 230 டொலர்கள் வரையான பெறுமதி உடையதாக இருக்கலாம் என்று ஊகம் வெளியீடப்பட்டுள்ளது.

இதில் உடலில் உள்ள கலோரி, குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு, ஓட்சிசன் அள்வு என்பவற்றை அறிந்து தெரிவிக்கும் வசதியும் தூக்கம் தொடர்பான தக்வல்களைத் தெரிவிக்கும் வச்தியும் காணப்படுகின்றன.

> இந்தக் கடிகாரம் 200 தொடக்கம் 230 டொலர்கள் வரையான பெறுமதி உடையதாக இருக்கலாயம்.



## மடிக்கக் கூடிய அதி நவீன ஓ.எல்.ஈ.டி. திரை

சம்சுங் மற்றும் எல்.ஜி. நிறுவனங்கள் அறிமுகம் செய்த வளையக் கூடிய தொடுதிரையைக் கொண்ட ஸ்மார்ட் கைபேசிகள் பற்றி அறிந்திருப்பீர்கள்.

அதன் வரிசையில் தற்போது நொக்கியாமற்றும்எஸ்.ஈ.எல். இணைந்து மடிக்கக் கூடிய ஓ.எல்.ஈ.டி. திரையை அறி முகம் செய்யவுள்ளன.

இந்த திரையானது 5.9 அங்குல அளவுடையதாகவும், 1280 X 720 அளவுடையதாகவும் காணப்படுகின்றது.

இதுதொடர்பான அறிவித்தலானது 2014 ஆம் ஆண்டுக்கான எஸ்.ஐ.டி. நிகழ்வில் வெளியிடப்பட்டுள்ளது.

> இந்த திரையானது 5.9 அங்குல அளவுடைய தாகவும், 1280 X 720 அளவுடையதாகவும் காணப்படுகின்றது.

## இலத்திரனியல் இதயத்துடிப்பு அறிகருவி

திங் லாப்ஸ் என்ற நிறுவனம் இலத்திரனியல் தொழில்நுட்பத்தைக் கொண்ட இதயத்துடிப்பு அறிகருவியை அறிமுகம் செய்துள்ளது.

இது தற்போது பாவனையிலுள்ள சாதாரண இதயத்துடிப்பு அறிகருவிகளை விடவும் 100 மடங்கு வரை ஒலியை பிறப்பிக்கக்கூடியதாக இருப்பதுடன் இதயத்துடிப்பு வீதத்தை துல்லியமாகக் கணித்து அறியத் தரக்கூடியதாகவும் இருக்கின்றது.

இதனை யு.எஸ்.பி.இணைப்பான் மூலம் மின்னேற்றம் செய்யக் கூடியதாக இருப்பதுடன், இதிலிருந்து பிறப்பிக்கப்படும் ஒலியை ஐ.ஓ.எஸ்.அன்ரோயிட், மக் மற்றும் பிசி சாதனங்களில் விசேட மென்பொருளின் உதவியுடன் பதிவு செய்து கொள்ள முடியும்.

இதனைக் கொள்வனவு செய்வதற்காக தற்போது 499 டொலர்கள் செலுத்தி முன்பதிவு செய்வதன் மூலம் சில்லறை விலையான 799 டொலர்களில் இருந்து 300 டொலர்களை சேமிக்க முடியும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.



## அதி நவீன 3 டி பிரிண்டிங் பேனா



> வரிசையில் 3 ஆம் பிரிண்டிங் செய்யக் கூடிய பேனாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

முப்பரிமாண தொழில்நுட்ப பிரிண்டிங் அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக பல்வேறு சாதனங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில் வரிசையில் 3 ஆம் பிரிண்டிங் செய்யக்கூடிய பேனாக்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

எனினும் இவற்றிலிருந்து வெளியாகும் மை வெப்பத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது.

ஆனால் தற்போது குளிர்ந்த மையை வெளியேற்றும் 3 ஆம் பேனாவை க்றோபொப் எனும் நிறுவனம் உருவாக்கி அறிமுகம் செய்துள்ளது.

இதனை 89 டொலர்களுக்கு கொள்வனவு செய்ய முடியும்.

## மடிக்கக்கூடிய சிறிய இலத்திரனியல் வாகனம்

உலகின் சிறிய இலத்திரனியல் வாகனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ரிக்கிலெற் எனும் இந்த வாகனம் மடித்து எடுத்துச்செல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது மணிக்கு 12 கிலோமீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடியதாகக் காணப்படுவதுடன் ஒருமுறை மின்னேற்றம் செய்யப்பட்ட மின் கலத்தைப் பயன்படுத்தி 15 கிலோ மீற்றர் வரை பயணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

இதன் விலையானது 1,400 டொலர்கள் தொடக்கம் 2,000 டொலர்களுக்கு இடைப்பட்டதாக இருக்கலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

> இது ஒரு முறை சார்ஜ் செய்யப் பட்ட மின் கலத்தைப் பயன் படுத்தி 15 கிலோமீற்றர் வரை பயணிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.



## 4 ஜி வலைப்பின்னலில் அதிவேக சாதனையை நிலைநாட்டிய நொக்கியா

தரவுச் சேவைகளை வழங்கும் 4 ஜி அலைவரிசை ஊடாக அதிக வேகத்தை சாத்தியப்படுத்தி சாதனை நிலைநாட்டியுள்ளதாக நொக்கியா நிறுவனம் அறிவித்துள்ளது.

தென் கொரியாவைச் சேர்ந்த வலைப்பின்னல் ஒன்றில் நொக்கியா அடைந்த வேகம் இந்தியாவின் தொலைத் தொடர்பு- சேவைகள் வழங்கும் வேகத்தை விட நான்கு மடங்கு அதிகமானது.

நொக்கியாவும், எஸ்.கே. ரெலிகொம் நிறுவனமும் ஒரு செக்கனில் 3.78 ஜிகா பிட் தரவுப்பரிமாற்றத்தை சாத்தியப்படுத்தி இருக்கின்றன.

இந்த வேகத்தில் சுமார் 750 மெகா பைட் கொள்ளளவுடைய ஒரு தமிழ் திரைப்படத்தை ஒரு செக்கனில் தரவிறக்கம் செய்துவிட முடியும்.

தனது கையடக்கத் தொலைபேசி உற்பத்திப் பிரிவை மைக்ரோ சொப்ட் நிறுவனத்துக்கு விற்பனை செய்த நொக்கியா நிறுவனம், தற்போது கணினி வலைப்பின்னல், தொலைத்தொடர் பாடல் கருவிகள் போன்றவற்றை உற்பத்தி செய்து வருகிறது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி :news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அடிப்படையில் மாற்றம் இல்லை

இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் (போர்க் குற்றங்கள் என அறியப்பட்டவை) குறித்த விசாரணைகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஆரம்பிக்க உள்ள நிலையில், வடக்கில் இடம்பெற்றுள்ள மற்றொரு சம்பவம் இலங்கை அரசும் அதன் அதிகாரிகளும் இனங்களுக்கு இடையில் பாரபட்சத்துடன் நடந்துகொள்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

சிங்களவர்களைவிட தமிழர்கள் ஒதுக்கப்படுபவர்களாக, தண்டிக்கப்படவேண்டியவர்களாக, இரண்டாம் தரக் குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள் என்பதை அந்தச் சம்பவம் மிகத் தெளிவாக்கியிருக்கிறது.

வன்னிக் காடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் தங்கத்தை, இரும்பு அறி கருவிகளைக் கொண்டு தேடிய இருவரைக் கைது செய்த பொலிஸார் அவர்களைச் சாதாரண சட்டங்களில் கீழ் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தியுள்ளனர். அவர்களை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் கடவத்தை மற்றும் கம்பஹா பகுதிகளைச் சேர்ந்த சிங்களவர்கள்.

அந்தச் சம்பவம் அப்படியே இருக்க, சில மாதங்களுக்கு முன்னர் இதேபோன்ற இரும்பு அறி கருவிகள் கண்டறியப்பட்டதாகக் கூறி, மனித உரிமைச் செயற்பாட்டாளரான ஜெயகுமாரி (விபூசிகாவின் தாய்) பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் தவிர வேறு சிலரும் கைது செய்யப்பட்டமைக்கு இரும்பு அறி கருவிகள் அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டமைதான் காரணம் என்றும் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீளுருவாக்கம் செய்தார்கள் என்று கூறப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட கோபி மற்றும் அப்பன் ஆகியோரின் செயலை நியாயப்படுத்தவும் இந்த இரும்பு அறி கருவிகளை அவர்கள் திருடியிருந்தார்கள் என்பதே முதன்மையான காரணமாகக் கூறப்பட்டிருந்தது.

இவ்வாறு இரும்பு அறி கருவியுடன் தொடர்புபட்டிருந்த தமிழர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதி விசாரணைகள் எதுவுமின்றி பூஸாவில் அடைத்து வைக்கப்பட, அதே குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிங்களவர்கள் சாதாரண குற்றவியல் சட்டங்களின் கீழ் கையாளப்படுகின்றார்கள்.

இலங்கையில் சட்டங்கள் தமிழர்களுக்கு எதிராகவும், பாரபட்சமாகவுமே அதிகாரிகளால் கையாளப்படுகின்றன என்பதை மிகத் தெளிவாக நிரூபிக்கும் மற்றொரு உதாரணம் இது. சர்வதேச அழுத்தங்கள், ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானங்கள், போர்க் குற்ற விசாரணைகள் என்று எவையுமே இலங்கை அரசினதும் பொலிஸ் மற்றும் படையினரதும் சிந்தனையை, போக்கை மாற்றவில்லை என்பது இதன் மூலம் கண்கூடு.

போர் முடிவடைந்து 5 ஆண்டுகளாகிவிட்டபோதும், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் பற்றி அரசு வாய்கிழியப் பேசி வருகின்றபோதும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் 80 வீதமானவற்றை நடைமுறைப்படுத்திவிட்டதாக அரசு கூறிவருகின்றபோதும் அடிப்படையில் தமிழர்களுக்கு எதிரான உணர்வு நிலையில் மாற்றம் இல்லை என்பதற்கான மிகச் சமீபத்திய உதாரணம் இது.

இந்த அடிப்படையில் மாற்றம் இல்லாத வரையில், அந்த மாற்றத்துக்காக அரசு உண்மையாக உழைக்காத வரையில் இலங்கையில் இன நல்லுறவில் முன்னேற்றம் ஏதும் ஏற்படும் என்று தோன்றவில்லை. அது நாட்டின் சாபக்கேடும்கூட.



# ஜெயலலிதாவின் தனி ஈழம்

ராஜ்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமுக்கும் இடையில் அண்மையில் புதுடில்லியில் உத்தியோகபூர்வமான சந்திப்பொன்று இடம்பெற்றது.

மோடி இந்தியாவின் பிரதமராக பதவியேற்றதன் பின், ஜெயலலிதாவும் மோடியும் சந்தித்த முதலாவது சந்தர்ப்பம் இது. இந்தச் சந்திப்பு ஊடகங்களினால் அதிகம் கவனிக்கப்பட்டது.

ஏனெனில், இந்தியாவின் பிரதமர் நாற்காலிக்காக அறிவிக்கப்பட்ட நிலையில் மோடியும், அறிவிக்கப்படாத நிலையில் ஜெயலலிதாவும் கடந்த மக்களவைத் தேர்தலை எதிர்கொண்டிருந்தார்கள். அதில், வெற்றிபெற்று மோடி பிரதமரும் ஆகிவிட்டார். இந்த நிலையில், அரசியலில் போட்டியாளர், நண்பர் என்ற நிலைகளைக் கடந்து இருவரும் உத்தியோகபூர்வமாக சந்தித்தது முக்கியத்துவம் பெறுவது இயல்பானது.

தமிழகத்தின் முதல்வராக இந்திய மத்திய அரசிடம் உதவிகளை கோருவதும், ஒத்துழைத்துச் செயற்படுவதும் ஜெயலலிதாவுக்கு அவசியமானது. அது, மாநிலத்தின் வளர்ச்சிக்கு முக்கியமானது. ஆனாலும், அவரினால் மோடியிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கைக் கடிதத்தில் முன்வைக்கப்பட்ட இரண்டு விடயங்கள் இந்தியா- தமிழக அரசியல் சூழலைத் தாண்டி அதிகம் பேசப்பட்டது.

இலங்கையில் நடந்த இனப்படுகொலையைக் கண்டித்து ஐக்கிய நாடுகளில் இந்தியா கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டும். அந்தத் தீர்மானத்தில், தனித் தமிழ் ஈழம் அமைக்க இலங்கைத் தமிழர்களிடமும், புலம்பெயர்ந்த தமிழர்களிடமும் வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தவேண்டும்.

பாக்குநீரிணையில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளையும், அவர்களது பாதுகாப்பையும் உறுதிசெய்ய வேண்டும் என்பனவே அவை.

தமிழக அரசியலில் இருந்து இந்தியாவின் தேசியக் கட்சியான காங்கிரஸ் முழுமையாக வெளியேற்றப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இனி காங்கிரஸ் கட்சிக்கான எதிர்காலம் என்பது ஒரு சிலரின் தலைநபர் அடையாளங்களினால் மாத்திரமே சாத்தியமாகும். அது, கட்சியின் எழுச்சியாகவோ, மீள்வருகையாகவே இருக்காது.

தமிழகத்திலிருந்து காங்கிரஸ் கட்சியின் அஸ்தமனம் திராவிடக் கட்சிகளின் வருகையோடு தொடங்கியது. தமிழகத்தின் ஆட்சியை திராவிடக் கட்சிகளின் எழுச்சிக்குப் பின் காங்கிரஸினால் பிடிக்கவே முடியாமற்போனது. இது, காங்கிரஸ் தமிழகத்தில் பெற்ற முதல் அடி.

ஆனால், தமிழகத்தில் காங்கிரஸ் முழுமையாக வெளியேற்றப்படக் காரணமான இரண்டாவது அடி தனி ஈழம் என்ற விடயத்தை முன்வைத்து நிகழ்த்தப்பட்டிருக்கிறது. தமிழக அரசியலில் தவிர்க்க முடியாமல் இலங்கைத் தமிழர் பிரச்சினை தாக்கம் செலுத்திக் கொண்டிருப்பதற்கான சாட்சி இது.

ஆக, தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்ந்தும் பெரும் வகிபாகத்தை எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படியானதொரு நிலையிலேயே ஜெயலலிதாவினால், தனி தமிழ் ஈழத்திற்கான வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது. இது மத்திய அரசால், இந்தியாவின் வெளிவிவகார கொள்கைகள் மற்றும் பிராந்திய அரசியல் போக்கினைக் காட்டி இலகுவாக புறக்கணிக்கப்பட்டு விடும். ஆனால், ஜெயலலிதா மீது தமிழக மக்களை மட்டும் அல்லாமல், ஈழத் தமிழர்களையும் ஏதோவொரு நம்பிக்கை கொள்ள வைக்கும்.

ஜெயலலிதா மத்திய அரசின் பங்காளி அல்ல. ஆனால், ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை இந்திய மத்திய அரசிடம் எடுத்துச் செல்வதற்கான ஒரே ஆளுமை இப்போதைக்கு ஜெயலலிதா. அதுவே, அவரின் மீது நம்பிக்கை கொள்ள வைக்கிறது. அது, அவரின் எதிர்கால அரசியலுக்கும் பெரும் பயனை விளைவிக்கும்.

ஜெயலலிதாவினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் கவனிக்கப்பட்ட இன்னொரு கோரிக்கை, பாக்குநீரிணைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்களுக்கு மீன்பிடிக்க இருக்கும் உரிமையை நிலைநாட்டக் கோருவது. இலங்கை - இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடித்தல் தொடர்பில் நீண்ட காலமாக தொடர்ந்து கொண்டிருக்கும் பிரச்சினை இது. தனி ஈழத்துக்கான வாக்கெடுப்பு கோருதல் போலவே, மீனவர் பிரச்சினையும் தமிழக மாநிலத்தைத் தாண்டி மத்திய அரசாங்கத்தினால் தீர்க்கப்பட வேண்டியது. அல்லது முன்னெடுக்கப்பட வேண்டியது.

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையில் தொடர்ச்சியாக எல்லை தாண்டி மீன்பிடித்தல் மற்றும் பொருத்தமற்ற உபகரணங்களை மீன்பிடித்தலுக்கு பயன்படுத்துதல் என்பது பெரும் பிரச்சினை. அது, மீனவர்கள் அளவில் பேசித் தீர்க்க முடியாமல் நாடுகளின் பிரச்சினையாக மாறி இரண்டு தசாப்தங்களைத் தாண்டி விட்டது. பாக்குநீரிணைக் கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையை நிறுவுவதற்காகவே கச்சதீவு மீண்டும் இலங்கையிடமிருந்து மீட்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்படுகிறது. ஆனாலும், அதற்கான வாய்ப்புக்களும் இல்லை.

கடந்த வாரத்தில் மட்டும் இலங்கைக் கடல் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையால் 83 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது போல, இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் 12 இலங்கை மீனவர்கள் இந்திய கடலோர காவற்படையினால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தொடர்கதையாக் இருக்கிறது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா தன்னுடைய அரசியல் செல்வாக்கினை நிலை நிறுத்துவதற்காக தனி ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு என்ற கோரிக்கையையும், தமிழக மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் பிரதானமாக முன்மொழிந்திருக்கிறார். இந்த இரண்டு கோரிக்கைகளும் ஜெயலலிதா தன்னுடைய அரசியல் ஸ்திரத்தன்மையை எவ்வாறு திட்டமிட்டு தக்க வைத்துக் கொள்கிறார் என்பதற்கான அண்மைக்கால சாட்சி!

தனது மாநில மக்களின் மனவுணர்களின் அடிப்படையில், தமிழக முதல்வராக, மத்திய அரசிடம் இந்திய எல்லை மற்றும் எல்லை தாண்டிய பிரச்சினைகள் குறித்த அவரது செயல் நகர்வுப் பேச்சுக்கள், தமிழக மக்களிடமும், உலகத் தமிழர்களிடமும் செல்வாக்குப் பெறக் கூடியவை. ஆயினும், தமிழக முதல்வரின் இந்த ஆளுமை நகர்வு, ஈழத் தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுத் தருமா என்பதை காலம் பதிவு செய்யும்.

கட்டுரை

வைத்தியர், அ.பிறிற்ரோ டக்ளஸ்
பாஷையூர்.

# அற்புதங்களால் அருள் புரியும் புனித அந்தோனியார்

புதுமைகள் பல புரிய அருள்பெற்ற புனித அந்தோனியார் போத்துக்கல் தேசத்தின் லிஸ்பன் நகரில் இற்றைக்கு 819 வருடங்களுக்கு முன்னர் பிரபுக்கள் குடும்பத்தில் மாட்டீனுக்கும் தெரசாவுக்கும் மகனாகப் பிறந்தார். இவர் திருமுழுக்கினால் பேடினன் என பெயர் பெற்றார். சிறு வயது முதலே இறை பக்தியும் விசுவாசமும் கொண்டதனால் துறவறத்தில் இணைய ஆசை கொண்டு துறவியானதால் தனது பெயரை அந்தோனி என மாற்றி அந்தோனியானார்.

அந்தோனியார் எளிமையானவர், மனிதர்களிடத்தில் அன்பு கொண்டவர் எப்பொழுதும் செபம் செய்பவர். தனது தவத்தாலும் கடின செபத்தின் வல்லமையினாலும் இறை அன்புக்கு பாத்திரமாகி இறைவனின் நேசதோளராகியதால் புதுமைகள் புரியும் அருளினையே இறைவனிடமிருந்து அதிகமாக பெற்றுக்கொண்டார். திருச்சபையின் உயர்ந்த மறை வல்லுன்ரான புனித பொலவெஞ்சர் கூறுகிறார் புதுமைகள் பெற வேண்டுமாயின் புனித அந்தோனியாரிடம் செல்லுங்கள் ஏனெனில் உலகிலே உயர்ந்த சலுகைகளை புனித அந்தோனியார் பெற்றிருக்கிறார் என்றார்.

வேத நூல்களை வாசிப்பதிலும் ஆழமான அர்த்தங்கள் நிறைந்த மறையுரைகளை ஆற்றுவதிலும் விற்பன்னராக விளங்கிய அந்தோனி, அக்காலத்தில் அகஸ்த்தினார் குருமடத்தில் நடைபெற்ற ஒரு புதிய குரவரின் முதற் பாடற் பூசையில் மறையுரையாற்றவேண்டிய குருவானவர் வராததனால் மடாதிபதி பணித்தார் அப்பணியை அந்தோனியிடம். எந்தவிதமான முன்னாயத்தமும் இல்லாதபோதும் அதனைப் பொறுப்பேற்று அர்த்தமுள்ள அழகான மறையுரையை ஆற்றினார் அந்தோனியார்.

புனிதரின் மறையுரையைக் கேட்ட மக்கள் ஆனந்தத்தையும் அற்புதங்களையும் அடைய வழிசெய்தமையினால் பலர் பாவ வாழ்க்கையைவிட்டு விலகி இறைவனின் அண்டை வந்தார்கள் இதனால் புனிதர் தலை சிறந்த போதகர் ஆனார். இவர் இறைவனின் சம்மட்டி எனவும் அழைக்கப்பட்டார்.

இவர் கிறிஸ்துநாதரில் வைத்த அசைக்க முடியாத நம்பிக்கையினால் இவரின் கரங்களிலுள்ள வேதாகம புத்தகத்தின் மீது குழந்தை இயேசு அமரும் பாக்கியத்தையும் பெற்றார். இவரின் மறையுரைகள் ஒரு பாஷையில் நிகழ்த்தபடுகின்றபோதும் அனைத்து பாஷையீல் உள்ளோரும் அறியக்கூடியதாக இருந்தது. ஒரு வேளையில் இரு இடங்களிலும் காணப் பட்டார். அக்காலத்தில் ஆலய கோபுர அமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த தச்சன் தவறுதலாக கீழே விழுகின்றபோது அந்தோனி என அலறினான். அவ்வேளை ஆலய வளவில் வலம் வந்த அந்தோனி அலறல் கேட்டு தச்சனை அந்த ரத்தில் நிறுத்தி மெதுவாக கீழே இறக்கினார்.

காணாமற் போனவற்றை கண்டடையச் செய்வதில் வல்லமை பெற்றவர். திருப்பலி வேளையில் இறைவனின் பிரசன்னம் தேவ நற்கருணையில் இருப்பதை அறியாதவர்கள் உணவற்று வாடியிருந்த கழுதை முன் உணவழித்த போதும் உணவைப் பொருட்படுத்தாது கழுதை தேவ நற்கருணையினை மண்டியிட்டு வணங்கியதைக் கண்டு நம்பிக்கையற்றோருக்கு இறை சித்தத்தை உணர வைத்தார்.

பிசாசுகள் தீய ஆவிகளை சிலுவை அடையாளம் கொண்டு விரட்டி ஓட்டும் புலமை பெற்றவர். உடல் நோய்களை, மன நோய்களை குணமாக்கிவந்தவர். இவ்வாறாக இவர் செய்யும் புதுமைகள் எண்ணில் அடங்காமையினால் கோடி அற்புதர் என பெயர் பெற்றார். கோடி அற்புதர் 36 வருடங்களே இப் பூவுலகில் வாழ்ந்தார். 1231 ஆம் ஆண்டு ஆனிமாதம் 13 ஆம் திகதி விண்ணுலகு சென்றார். இவர் இறந்த இன்னாளே கத்தோலிக்க மக்களால் திருவிழாவாக கொண்டாடப்படுகின்றது. புனிதரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது செவ்வாய்க் கிழமையாகும். இந்தக் கிழமையே புனிதருக்கு உரித்தானது.



வாழ்நாளிலே புதுமைகள் புரிந்தவர் தனது மரணத்தின் பின்னரும் அற்புதங்கள் புரிந்தமை கண்டு வியத்தவர்கள் பல வருடங்களின் பின்னர் அவரின் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையைத் திறந்து பார்த்தனர். அங்கு அவரின் புதுமைகள் புரிந்த நாக்கு அழியாமல் இருந்தது. நா அழியா வரம் பெற்றவர் ஆனார். இன்றுவரை அவரின் 'நா' அழியாது காணப்படுகின்றது.

கத்தோலிக்க பாரம்பரியங்களில் புனிதர்களின் பரிந்துரைகளை மக்கள் நாடிவருவது வழக்கமானதாகும். புனிதர்கள் புனிதர்களாக பிறப்பதில்லை இறை அன்பினால் உருவாக்கபடுகின்றனர். இப்புனிதரின் ஆலயங்கள் இலங்கையில் கரையோரப் பகுதிகளில் அநேகமாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

யாழ். பாஷையூர் புனித அந்தோனியார் ஆல யம் வடமாநிலத்தில் சிறப்பு பெற்ற ஆலயமாகும். இவ் ஆலய மக்கள் புனிதரில் மிகுந்த பற்று கொண்டவர்கள். புனிதரின் திருநாளினை நவ நாள்களுடன் சிறப்பாக கொண்டாடுவதனை பாரம்பரியமாகக் கொண்டுள்ளனர்.

ஆனி 13 ஆம் திகதி திருநாள் கொண்டாடப் படுவதுடன் மாலை புனிதரின் தேர்ப்பவனி வலம் வருவதையும் காணலாம். இங்கே கடல் நடுவே


யாழ். பாஷையூர் புனித அந் தோனியார் ஆலயம் வட மாநிலத்தில் சிறப்பு பெற்ற ஆலய மாகும். இவ் ஆலய மக்கள் புனிதரில் மிகுந்த பற்று கொண்டவர்கள். புனிதரின் திருநாளினை நவ நாள்களுடன் சிறப்பாக கொண்டாடுவதனை பாரம்பரி யமாகக் கொண்டுள்ளனர்.

மீன் இனங்களை வரவழைக்கும் புனித அந்தோனியாரின் திரு உருவத்தினை அமைத்து தமது தொழில் துறைகளையும் பாதுகாத்து வருகின்றனர். இங்கு காணப்படும் துறைமுகமானது பல தசாப்தங்களின் பின்னர் அண்மையில் புனரமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் திகழ்வதையும் காணலாம். இன, மத, மொழி, பேதமின்றி வாழ்க்கையின் அன்றாட பிரச்சினைகளுக்கு தீர்வு முதற் கொண்டு உடல் நலம், மன நலம், ஆன்மிக நலம் முதலான பல்வேறு உதவிகளை நாடி புனிதரை தேடி வருவோரின் எண்ணிக்கை ஏராளம்.

கடந்த காலப் போரின் வடுக்கள், காணாமற் போனோர், சமூக கலாசார சீரழிவுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், விபசாரம், கடன் தொல்லை, கொலைகள், தற்கொலை முயற்சிகள், மாற்ற முடியாத உடல் நோய்கள், மன நோய்கள், குடும்பப்பிரிவுகள், புகை மது போதைப் பொருள்களின் பாவனைகள் போன்றவற்றால் சமூகத்தின் ஆன்மிக கட்டுக்கோப் புகள் சிதைக்கப்பட்டு வருவதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

சுகத்தையும் துக்கத்தையும் உணரக் கூடியவன் தன்னைச்சுற்றி இனிமையான சூழலை உருவாக்கி தான் சமூகத்தினுள்ளும் சமூகத்தை தன்னுள்ளும் பார்கின்ற போது கடவுளை தன்னுள்ளே காண்கின்றான் என்கின்றார்கள். அன்போடு எதைப்பார்த்தாலும் அது கடவுளாகத் தெரியும். ஆழ்ந்த அன்போடு பார்த்துவிட்டால் அப் பொருள் அவருக்கு அருள் செய்துவிடுகிறது. இந்த உண்மையை அற்புதங்களால் அருள் புரியும் புனித அந்தோனியார் எமக்கு அருட் கொடைகளாக வழங்கி வருகிறார். எனவே புனித அந்தோனியாரின் தினத்தில் எமது விண் ணப்பங்கள், வேண்டுதல்கள், தேவைகளை சமர்ப்பித்து அருள்வளங்களை பெற்றுகொள்ள புனித அந்தோனியாரை பக்தியுடன் நாடுவோம்.

# சமூகத்தின் மதிப்பீட்டில் அதிபர்களும் ஆசிரியர்களும்



S.J.லக்ஷ்மி,யாழ்ப்பாணம்

இன்று உலகம் அறிவுப் பொருளா தாரத்தைத் நோக்கி வீறுநடை போ கின்றது. போட்டிகள் நிறைந்த ச லான உலகத்தில் கல்வித்துறையும் பல சவா களை எதிர்கொள்கின்றது. நவீன தொழில்நு யுகத்தின் வளர்ச்சி மேலைத்தேய கல்வி போக்கை கீழைத்தேயத்திலும் புகுத்தியுள் பாடசாலை என்பது அதிபர், ஆசிரியர், மாண பெற்றோர், பழைய மாணவர், ஏனைய ச நிறுவன அங்கத்தவர்களையும் கொண் கும் உயிரோட்டத் தொகுதியாக உள்ள பாடசாலையின் இயங்கு திறனையும், பாட்டையும் கண்காணிப்பதற்கு உள்ளே வெளியேயும் ஆயிரம் கண்கள் விழிப் இருக்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை எ பலராலும் மதிப்பீடு செய்யப்பட்டுவரும் நிறுவனமாகக் காணப்படுகின்றது. மாண கள் உயிரோட்டமுள்ள தாபனக் கோவைக நோக்கப்படுகின்றனர். சமூகச் சிக்கல்க தகர்த்தெறிந்து சமூகத்தை சீரிய நெற கொண்டியக்க வேண்டிய கடப்பாட்டில் ஆசிரியர்களும், அதிபர்களும் அன்று தொடக்கம் இன்று வரை உயராது உழைக்கின்றனர்.

பாடசாலையின் வளர்ச்சியும் சரி, பின்னடைவும் சரி. அதிபர், ஆசிரியர் தலைகளிலேயே கூடுதலான பொறுப்பைப் பெறுகின்றன. ஒரு சமூகத்திலுள்ள பாடசாலை சூழ உள்ள சமூகத்தால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு பாடசாலையின் அதிபர் வெற்றிடத்தையோ, ஆசிரியர் வெற்றிடத்தையோ பூர்த்தி செய்ய பாடசாலையின் பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் கூடுதலான அக்கறை காட்டுகின்றனர். அது மட்டுமல்லாது ஓர் அதிபரையோ அல்லது ஓர் ஆசிரியரையோ இடமாற்றம் செய்யும் விடயத்தில் கூட இவர்களின் செல்வாக்கு அதிகமாகவே காணப்படுகின்றது.

அதிபர், ஆசிரியர்களின் சேவை மனப்பாங்கு, கல்வித்தரம், உளப் போக்குகள், தம் சமூகத்தின் மீதான அக்கறை, அடைவு மட்டம், இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகள் அனைத்தும் சமூகத்தின் பார்வையில் தெளிவாக மதிப்பிடப்படுகின்றது.

இன்று, ஒரு பாடசாலைக்கு குறித்த அதிபரை நியமனம் செய்க எனவும், குறித்த ஆசிரியரை நியமனம் செய்க எனவும் பல கோரிக்கை மனுக்கள் நாட்டில் பல கல்வி வலயங்களிலும் தேங்கிக் கிடக்கின்றன. இங்கு சில இடங்களில் நிலவும் அரசியல் செல்வாக்குகளும், மதப் பிரச்சினைகளும், சமூகக் கட்டமைப்புகளும் கூட தேவையான இடத்துக்குத் தேவையான அதிபர், ஆசிரியர்களை நியமிக்கத் தடங்கலாக விளங்குகின்றமை மனம் வருந்தத் தக்க விடயமாக உள்ளது. இவை கடமையை கடமையாகச் செய்யும் கல்வி உயர் அதிகாரிகளின் பொதுநலங் காக்கும் நீதிச் செயற்பாடுகளுக்கு கைவிலங்கு போடுகின்றன.

அதிபர், ஆசிரியர்களின் சேவை மனப்பாங்கு, கல்வித்தரம், உளப் போக்குகள், தம் சமூகத்தின் மீதான அக்கறை, அடைவு மட்டம், இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகள் அனைத்தும் சமூகத்தின் பார்வையில் தெளிவாக மதிப்பிடப்படுகின்றது.

குறித்த ஒரு சமூகம், சில அதிபர்களையோ, சில ஆசிரியர்களையோ, தமது பாடசாலைக்கு வர அனுமதிக்காமைக்கும், சில அதிபர்களையும், சில ஆசிரியர்களையும் பாடசாலையில் நியமிக்க எடுக்கும் முயற்சிக்கும் காரணம் தேடின் சில தவறான பக்கங்கள் அதிபர், ஆசிரியர் பக்கம் இருப்பதும் நோக்கத் தக்கதாகும்.

பாடசாலையின் அடைவு மட்டம் குறைந்தாலோ, இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகளில் வீழ்ச்சி கண்டாலோ மாணவர் விழுமியம் வீழ்ச்சி கண்டாலோ அந்தப் பாடசாலையின் தலைமைத் துவம் சரியாக இயங்கவில்லை எனச் சமூகம் எடை போடுகின்றது. அதேபோல் பிந்தி வந்து முந்திச் செல்லும் ஆசிரியர்களையோ, வகுப்பறைக்கு நேரத்துக்குச்செல்லாத ஆசிரியர்களையோ, வகுப்பறைக்கு நேரத்துக்குச் சென்றும் கற்பிக்காது வீட்டுப் புராணம் படித்துக் காலத்தைப் போக்கும் ஆசிரியர்களையோ, பாட நேரத்தில் வகுப்பறை செல்லாது அரட்டை அடிக்கும் ஆசிரியர்களையோ மாணவனின் தேவையை அறிந்து கற்பிக்காத ஆசிரியர்களையோ பாடசாலைக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் குறியாகக் கொண்ட ஆசிரியர்களையோ உரிய காலத்தில் கலைத்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது அடைவு மட்டத்தைக் குறைத்துச் செல்லும் ஆசிரியர்களையோ குறித்த பாடசாலைச் சமூகம் கல்விப் புலத்தில் இருந்து ஓரங் கட்டுகின்றது.

பகலிரவாய் கண் விழித்து பட்டங்கள் பல பெற்று அரச நியமனத்தைப் பெற்றுச் சமூகத்தின் தார்மீகப் பொறுப்பை சிரமேற்கொண்ட அன்புசால், அறிவுசால், அதிபர், ஆசிரியர் பெருந்தகைகளே ஒரு கணம் நின்று நிதானித்து உங்களை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளுங்கள். சமூகம் உங்களை வரவேற்கின்றதா? அடியோடு விரட்டி அடிக்கின்றதா? எனச் சிந்தியுங்கள். எங்கு சென்றாலும் எந்த நிலையிலும் எந்தப் பாகுபாடுமின்றி உங்களுக்கு இட்ட பணியை செவ்வனே நிறைவேற்றுங்கள். குறைகளைக் களைந்து நிறைகளைக்காணுங்கள். வாழ்க்கையில் தன்னிறைவு உங்களைத் தேடிவரும். விழி திறந்து நோக்குங்கள். நாளைய சமூகம் உங்களின் காலடியில் உங்களின் பணிக்காகக் காத்திருக்கின்றது.

# அமெரிக்காவுக்கு உளவு பார்த்தாரா உதயகுமார்?

## அதிர்ச்சித் தகவலால் பரபரப்பு

புதுடில்லி, ஜூன் 13

அமெரிக்க நிறுவனத்திடம் பணம் பெற்றுக் கொண்டு இந்திய அணுசக்தித் திட்டங்கள் தொடர்பாக உதயகுமார் தகவல் அளித்ததாக உளவுத் துறை தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்துக்கு உளவு அமைப்பான ஐ.பி. அண்மையில் ஓர் அறிக்கை தாக்கல் செய்துள்ளது. அதில் இந்தியாவில் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

மேலும் கூடங்குளம் போராட்டக் குழுவின் தலைமை ஒருங்கிணைப்பாளரான சுப. உதயகுமாரின் பெயரை இரண்டு இடங்களில் குறிப்பிட்டு உளவுத் துறை குற்றம்சாட்டியுள்ளது.

ஐ.பி. அறிக்கையில், அமெரிக்கா மற்றும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும் உதயகுமாருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

2010ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஓஹையோ மாகாணத்தில் செயல்படும் கீர்வான் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்திடம் பணி ஒப்பந்தம் ஒன்றை உதயகுமார் பெற்றுள்ளார்.

அந்த நிறுவனமானது உதயகுமாரின் பெயரில் உள்ள அமெரிக்க வங்கிக் கணக்கில் 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 21, 120 அமெரிக்க டொலர் தொகையை வழங்கியுள்ளது.



உதயகுமார்

இதேபோல் மற்றொரு ஒப்பந்த பணி மூலம் அடிக்கடி அறிக்கைகள் அனுப்பி 2012ஆம் ஆண்டு ஏப்ரல் வரை 17,600 அமெரிக்க டொலர் பணம் பெற்றிருக்கிறார்.

இந்நிலையில், ஜேர்மனியைச் சேர்ந்த ராய்னர் என்பவர் சென்னையில் இருந்து 2012ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி நாடு கடத்தப்பட்டுள்ளார்.

அவரது மடிக்கணிணியில் இந்தியாவின் 16 அணுசக்தி நிலையங்கள், 5 யுரேனியம் சுரங்கங்கள் உள்ள வரைபடம் இருந்துள்ளது.

இவை உதயகுமார் உட்பட 5 அணுசக்தித் திட்ட எதிர்ப்பாளர்களுக்கு ஈமெயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதைக் கூடங்குளம் உதயகுமார் திட்டவட்டமாக மறுத்து தமது முகநூல் பக்கத்தில் சிறையோ, சாவோ, எதுவோ வரட்டும்! என்ற விரிவான மறுப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார். (த)

## முசாபர் நகரில் வன்முறைகள்

புதுடில்லி, ஜூன் 13

உத்தரப் பிரதேசத்தின் முசாபர் நகரில் இரு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலின்போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்தனர். சம்பவ இடத்தில் கலவரத் தடுப்புப் பொலிசார் குவிக்கப்பட்டனர்.

முசாபர்நகரின் புகானா என்ற பகுதியில் இரு பிரிவினரிடையே முன் விரோதம் காரணமாகக் கடந்த இரண்டு நாள்களாக ஏற்பட்டிருந்த மோதல் நேற்றுக் கலவரமாக மாறியது.

கலவரத்தின்போது கிராமத்தினர் சிலர் துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டனர்.

இதில் இருவர் உயிரிழந்ததாக மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில், பதற்றம் நிலவுவதை அடுத்துப் புகானா மாவட்டம் முழுவதிலும், கலவரத் தடுப்புப் பொலிசார் குவிக்கப்பட்டுள்ளனர். (த)

## முஸ்லிம்களுக்காகவும் எங்கள் அரசு பாடுபடும்

### மோடி தெரிவிப்பு

புதுடில்லி, ஜூன் 13

எமது அரசு வறியவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதன் மீது கவனம் செலுத்தும் வேளையில், சமூகத்திலுள்ள சகல பிரிவுகளினதும் அபிவிருத்திக்காகப் பாடுபடும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரிவுகளில் முஸ்லிம்களின் பெயர்களையும் குறிப்பிடுவதற்கு மோடி மறக்கவில்லை. இந்திய மக்களவையில் ஜனாதிபதியின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்திற்கு மோடி பதிலளித்து உரையாற்றினார்.

**கறைபடிந்ததாக வர்ணிக்கப்படும் இந்தியாவை ஆற்றல்மிக்க இந் தியாவாக மாற்றும் தமது கனவுகள் பற்றியும் புதிய பிரதமர் குறிப்பிட்டார்.**

இந்த உரையில், கறைபடிந்ததாக வர்ணிக்கப்படும் இந்தியாவை ஆற்றல்மிக்க இந்தியாவாக மாற்றும் தமது கனவுகள் பற்றியும் புதிய பிரதமர் குறிப்பிட்டார்.

நாட்டைச் சுபீட்சமானதாகவும், வலுவானதாகவும் மாற்றும் முயற்சியில் சகல கட்சிகளையும் அரவணைத்துச் செல்லப் போவதாகவும் அவர் உறுதியளித்தார். (த)


## தமிழக அரசுக்கு மோடி பாராட்டு

சென்னை, ஜூன் 13

தமிழக அரசு செயற்படுத்திய மழைநீர் சேகரிப்புத் திட்டம், மிகவும் பாராட்டுதலுக்குரியது. அதனால் நல்ல பயன் ஏற்பட்டுள்ளது எனப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் பிரதமர் மோடி கடந்த புதன்கிழமை பேசியதாவது:-

தமிழக அரசு செயல்படுத்திய மழைநீர் சேகரிப்புத் திட்டம், மிகவும் பாராட்டுதலுக்குரியது அதனால் நல்ல பலன் ஏற்பட்டுள்ளது. அதேபோன்று, சத்தீஸ்கர் அரசு செயல்படுத்தியுள்ள பொது விநியோகத் திட்டம், கேரள அரசின் குடும்பஸ்ரீ திட்டம், நாகாலாந்து அரசின் பழங்குடியினர் நலன் திட்டங்களும் மிகவும் பாராட்டுக்குரியவை. மாநிலங்களின் இது போன்ற சிறப்பான திட்டங்களை நாடு முழுவதும் செயற்படுத்த நடவடிக்கை எடுப்போம். சிக்கிம் அரசு, இயற்கை முறை விவசாயத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துள்ளது. மேற்கு வங்கத்தில் 34 ஆண்டு காலக் கம்யூனிஸ்ட் ஆட்சியால் ஏற்பட்ட பாதிப்பையெல்லாம், எனது சகோதரி முதல்வர் மம்தா பானர்ஜி கடினமாக உழைத்து மாற்றியுள்ளார் என்றார். (த)



மும்பைக் கடல் நேற்றுக்காலை திடீரெனப் பெருக்கெடுத்ததால் கடல் நீர் வீதிக்குப் பாய்ந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சமடைந்ததுடன் பரபரப்பான நிலைமையும் ஏற்பட்டது. (த)

## ஊழல் மோசடி வழக்கினால் கார்த்தி சிதம்பரம் சிக்கலில்

சென்னை, ஜூன் 13

தமிழக காங்கிரஸின் புதிய தலைவராக கார்த்தி சிதம்பரம் நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியான நிலையில், அவர் மீது ராஜஸ்தான் சி.பி.சி.ஐ.டி பொலிஸார் ஊழல் வழக்கு பதிவு செய்திருப்பது சட்டரீதியாகச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.



கார்த்தி சிதம்பரம்

தேர்தல் தோல்விக்கு ஞானதேசிகனே காரணம் என்று கூறி, அவர் பதவி விலக வேண்டும் என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம் மற்றும் அவரது ஆதரவு நிர்வாகிகள் அறிக்கை வெளியிட்டனர்.

தமிழக காங்கிரஸ் தலைவராக கார்த்தி சிதம்பரத்தை கொண்டு வர, சிதம்பரம் அணியினர் முயற்சிப்பதாகவும், இதுபற்றி ராகுல் காந்தியிடம் பேசி, இளந் தலைவர் ஒருவரைத் தமிழகத்தில் நியமித்துக் கட்சியை வலுப்படுத்தலாம் என்று வலியுறுத்தி வருவதாகவும் தகவல்கள் வெளியாயின.

இந்நிலையில், கார்த்தி சிதம்பரத்தின் அரசியல் வளர்ச்சிக்குத் தடையாக, அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. கார்த்தி சிதம்பரம், முன்னாள் மத்திய அமைச்சர் வயலார் ரவியின் மகன் ரவி கிருஷ்ணா, ராஜேஷ் பைலட்டின் மகன் சச்சின் பைலட் மற்றும் ராஜஸ்தான் முன்னாள் முதல்வர் அசோக் கெலாட் ஆகியோர் மீது ராஜஸ்தான் மாநில சி.பி.சி.ஐ.டி பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

இதையறிந்த ப.சிதம்பரத்தின் எதிர்த்தரப்பினர், கார்த்தி மீதான வழக்கு குறித்து மேலிடத்துக்கு முறைப்பாடு அனுப்பத் தயாராகி வருகின்றனர். ஒரு சிலர் இந்த வழக்குக் குறித்த தகவல்களை மேலிடத்துக்கு அனுப்பியுள்ளனர்.

இது கார்த்தி சிதம்பரத்தின் அரசியல் வளர்ச்சிக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தும் என அவர்கள் கூறுகின்றனர். (த)

## பாதிரியாரை மீட்க நடவடிக்கை ஜெயலலிதாவிடம் மோடி உறுதி

புதுடில்லி, ஜூன் 13

ஆப்கானில் கடத்தப்பட்ட தமிழக பாதிரியார் அலெக்ஸ் பிரேம் குமாரை மீட்க அனைத்து நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக, முதல்வர் ஜெயலலிதாவுக்கு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



நரேந்திர மோடி

தமிழகத்தைச் சேர்ந்த பாதிரியார் அலெக்சிஸ் பிரேம்குமார், ஆப்கானிஸ்தானின் ஹெராத் மாகாணத்திலிருந்து தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார். அவரை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி, பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா கடந்த 4 ஆம் தேதி கடிதம் எழுதியிருந்தார். முதல்வரின் கடிதத்துக்கு, பிரதமர் நரேந்திரே மோடி 5 ஆம் தேதி பதில் கடிதம் எழுதியுள்ளார்.

அதில், உங்களது கடிதம் கிடைத்தது. ஆப்கானிஸ்தானின் ஹெராத்தில் பாதிரியார் அலெக்சிஸ் பிரேம்குமார் கடத்தப்பட்டது குறித்து நானும் மிகுந்த கவலை கொண்டுள்ளேன். அவரை இயன்றவரையில் விரைவாக மீட்க, ஆப்கானிஸ்தான் அரசாலும், ஹெராத்தில் உள்ள அதிகாரிகளாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த விவகாரத்தில், அதிபர் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுடன் காபூலில் உள்ள எமது தூதரக அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் இருக்கின்றனர். பாதிரியாருக்கு எவ்வித பாதிப்பும் இல்லாமல் இயன்றவரையில் விரைவாக மீட்பதற்கான அனைத்து விதமான நடவடிக்கைகளையும் அரசு துரிதமாக மேற்கொள்ளும் என உறுதியளிக்கிறேன் என்று அந்தக் கடிதத்தில் பிரதமர் மோடி கூறியுள்ளார். (த)

# ஈராக்கில் முக்கிய நகரங்கள் கிளர்ச்சிப் படைகளின் வசம்

## தலைநகர் பக்தாத் நோக்கி முன்னேற்றம்

பக்தாத், ஜூன் 13

ஈராக்கில் பெரிய நிலப்பரப்புகளின் கட்டுப்பாட்டைக் கையில் எடுத்துள்ள இஸ்லாமியவாத ஆயுததாரிகள் அடுத்த படியாக தமது தாக்குதலை தலைநகர் பக்தாத்துக்கு எடுத்துச் செல்லப் போவதாகக் கூறுகின்றனர்.

அல் கெய்தாவுடன் தொடர்புடைய அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். கடந்த புதனன்று மொசூல் நகரில் தமது பிடியை வலுப்படுத்தியிருந்தது. திக்ரித் நகரத்தையும் அது கைப்பற்றியிருந்தது.

சமர்ரா நகரில் அதன் படைகள் முன்னேறியபோது வான் படையின் உதவியோடு அரச துருப்புகள் அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்திருந்தன.

வடக்கிலுள்ள கிர்குக் நகரில் இருந்து தேசியப் படைகள் வெளியேறிவிட்டதை அடுத்து அந்த ஊர் தற்போது தமது கட்டுப்பாட்டில் வந்துவிட்டதாக குர்த் படைகள் சார்பாகப் பேசிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எழுந்துள்ள நெருக்கடியைச் சமாளிக்க நாடாளுமன்றம் நாட்டில் அவசர நிலையைப் பிரகடனம் செய்ய வேண்டும் என பிரதமர் நூரி அல் மலிக் விரும்புகிறார்.

ஆனால் நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதற்கான எண்ணமோ திராணியோ அற்றவர்களாக அரச படைகள் தோன்றும் நிலையில், அவசர நிலையால் மட்டும் கிளர்ச்சிக்காரர்களின் முன்னேற்றத்தைத் தடுத்துவிட முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதுதான் என ஈராக்கிலுள்ள செய்தியாளர்கள் கூறுகின்றனர். (த)



திக்ரித் நகரை வசமாக்கியுள்ள கிளர்ச்சிப் பண்டீகள்

## பொது நடத்தை தொடர்பில் மக்களுக்கு சீனாவில் பயிற்சி

பீஜிங், ஜூன் 13

சீனத் தலைநகர் பீஜிங் நகரவாசிகள் பொதுவெளியில் நடந்து கொள்ளும் முறைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் அரச அதிகாரிகள் பெரும்பரப்புரையை முன்னெடுத்திருக்கிறார்கள்.

புகைபிடிப்பது, குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவது மற்றும் வரிசையில் நிற்காமல் முண்டியடித்துக்கொண்டு செல்வது போன்ற பழக்கங்களை தடுக்கும் நோக்கத்தில் இந்தப் பரப்புரை முன்னெடுக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் இறுதியில் பீஜிங்கில் நடக்கவிருக்கும் ஏபெக் என்றா ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படும் ஆசிய-பசுபிக் நாடுகளின் பொருளாதார ஒருங்கிணைப்புக்கான உச்சி மாநாட்டை ஒட்டி இந்த பரப்புரை முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கு முன்பு சீனாவில் நடந்த 2008 ஆண்டு ஒலிம்பிக்ஸ் உள்ளிட்ட மிகப்பெரிய சர்வதேச நிகழ்வுகளை ஒட்டி இதே போன்ற முன்னெடுப்புக்களை சீன அரசு முன்பு செய்திருந்தது.

பீஜிங் நகரத்தில் நாகரிகமான, ஒழுங்கான, நட்பு ரீதியிலான போக்குவரத்தை ஊக்குவிப்பதே தற்போதைய முன்னெடுப்பின் நோக்கம் என்று பீஜிங் நகராட்சியின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை தெரிவிக்கிறது. நவம்பரில் நடக்கவிருக்கும் ஏபெக் மாநாட்டில் இருபதுக்கும் அதிகமான நாட்டுத்தலைவர்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். (த)

## குழந்தையை கொலை செய்து உண்ட இரு சகோதரர்கள் கைது



கைது செய்யப்பட்ட சகோதரர்கள்

இஸ்லாமாபாத், ஜூன் 13

பாகிஸ்தானில் நரமாமிசம் உட்கொண்ட சகோதரர்கள் இருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது. குழந்தையொன்றை கொலை செய்து உட்கொண்ட காரணத்தால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் வசிக்கும் குறித்த இருவரும் ஏற்கனவே இது போன்ற குற்றச்சாட்டில் 2011 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு கடந்த வருடம் மே மாதம் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இவர்கள் வசிக்கும் குடியிருப்பில் துர்நாற்றும் வீசுவதாக அப்பகுதி மக்கள் செய்தமுறைப்பாட்டுக்கு அமைய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவர்களின் வீட்டில் இரண்டு வயது குழந்தையில் மண்டையோடுகாணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட சகோதரர்கள் இருவருக்கும் 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (த)


# அமெரிக்காவால் தேடப்பட்ட பயங்கரவாதி நேற்று கைது

மணிலா, ஜூன் 13

அமெரிக்காவால் தேடப்பட்டு வந்த அதிபயங்கரத் தீவிரவாதியான காயிர் முண்டோஸ், பிலிப்பைன்ஸ் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவரிடமிருந்து துப்பாக்கிகள், தீவிரவாதப் பயிற்சி ஏடுகள் கைப்பற்றப்பட்டன.

சர்வதேசப் பயங்கரவாதியான பின்லேடனின் அல் கொய்தா தீவிரவாத இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புள்ள அபு சய்யாப் தீவிரவாத இயக்கத்தின் தலைமை அமைப்பாளர் காயிர் முண்டோஸ். இந்த இயக்கம் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கடத்திப் பிரபலமானது.





காயிர் முண்டோஸ்

பிலிப்பைன்ஸ் நாட்டில் பல்வேறு தீவிரவாதச் செயல்களை அரங்கேற்றுவதற்குப் பின்லேடனின் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்திடமிருந்து இந்த அபு சய்யாப் தீவிரவாத இயக்கம் நிதி உதவி பெற்று வந்துள்ளது.

அதில் காயிர் முண்டோசுக்கு முக்கிய பங்கு உண்டு. இந்த காயிர் முண்டோஸ் வெடிகுண்டு தயாரிப்பதில் மன்னனாகத் திகழ்ந்தவர்.

இவரை உயிருடனோ, பிணமாகவோ பிடித்துக்கொடுத்தால் ஐந்து இலட்சம் டொலர் வழங்குவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது.

இவரது அபு சய்யாப் தீவிரவாத இயக்கத்தை அமெரிக்கா தீவிரவாத இயக்கமாக அறிவித்ததுடன், பிலிப்பைன்சில் அமெரிக்கப் படையினரின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கும், அப்பாவி மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கும் இவர்தான் காரணம் எனவும் அறிவித்திருந்தது.

இந்தத் தீவிரவாதியை பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவின் சர்வதேச விமான நிலையத்தின் அருகே வைத்து பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு படையினரும், பொலிஸாரும் கூட்டாக நேற்றுக் காலை கைது செய்தனர்.

பல்வேறு குண்டுவெடிப்புகள், ஆள்கடத்தல் வழக்குகளில் பிலிப்பைன்ஸ் பொலிஸார் தேடப்பட்டு வந்த நிலையில், அவர் சிக்கினார். (த)

# இஸ்ரேலின் புதிய ஜனாதிபதியாக றிவ்லின் நாடாளுமன்றால் தெரிவு

ஜெருசலேம், ஜூன் 13

இஸ்ரேலின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகரும் அமைச்சருமான ரெயுவென் றிவ்லினை அந்நாட்டு நாடாளுமன்றம் தெரிவு செய்துள்ளது.

**பலஸ்தீனர்களுடனான சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதிக்கு முக்கிய வகிபாகம் எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.**

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இரண்டாம் சுற்று இரகசிய வாக்கெடுப்பொன்றில் றிவ்லின் நீண்ட காலம் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த மெயிர் ஷீட்ரித்தை 53 வாக்குகளுக்கு 63 வாக்குகளால் தோற்கடித்துள்ளார்.

ஏற்கனவே 7 வருட காலம் ஜனாதிபதியாக பதவி வகித்த ஷிமொன் பெரெஸின் (வயது-90) பதவிக் காலம் எதிர்வரும் ஜூலை மாதம் முடிவடைவதையொட்டியே இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இஸ்ரேலிய ஜனாதிபதி பதவியானது பெருமளவில் வைபவ ரீதியான ஒன்றாக உள்ளது.

பலஸ்தீனர்களுடனான சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதிக்கு முக்கிய வகிபாகம் எதுவும் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் பெஞ்ஜமின் நெத்தன்யாஹூவின் வலது சாரி லிகுட் கட்சியின் உறுப்பினரான றிவ்லின் இஸ்ரேலின் 10 ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்கவுள்ளார்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதையடுத்து றிவ்லின் உரையாற்றுகையில், "இந்த தருணத்திலிருந்து நான் எந்தவொரு கட்சிக்கும் உடைமையானவன் அல்லன். நான் அனைவருக்கும் உடைமையானவன். நான் இந்த நாட்டுக்குரியவன் என்று கூறினார். (த)

## பாகிஸ்தானில் தாக்குதலை ஆரம்பித்துள்ளது அமெரிக்கா

இஸ்லாமாபாத், ஜூன் 13

அமெரிக்கா ஆளில்லா விமான தாக்குதல் மூலம் பாகிஸ்தானில் தீவிரவாதிகளை அழித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகளை கடந்த டிசெம்பர் மாதம் தாக்கியுள்ளது.

அதன்பின்னர், தலிபான் தீவிரவாத அமைப்புடன் அரசு பேச்சு நடத்துவதற்குவாய்ப்பு வழங்கும் வகையில் தாக்குதலைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது.

இந்நிலையில் கராச்சி விமான நிலையத்தைத் தீவிரவாதிகள் தாக்கியபிறகு, அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில், வடக்கு வசிரிஸ்தானின் தர்கா மண்டி கிராமத்தில் நடந்த தாக்குதலில் 6 தீவிரவாதிகளும், நேற்று அதிகாலையில் தண்டே தர்பாக்கல் பகுதியில் நடந்த தாக்குதலில் 10 தீவிர வாதிகளும் கொல்லப்பட்டனர்.

மேலும், கராச்சி விமான தாக்குதலை அடுத்து பாகிஸ்தான் அரசும் தீவிரவாதிகளை வேட்டையாடும் பணியைத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: பயணங்கள் ஏற்படலாம். ஆன்மிக பணிகளில் நாட்டம் செல்லும். உங்களது பொருள்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும்போதும் கவனம் தேவை.



**இடபம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாகச் செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும். குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.



**மிதுனம்**: விபரீத ஆசைகள் ஏற்படலாம். கவனம் தேவை. பெண்களுக்கு பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்களில் சாதகமான பலன் பெறுவீர்கள். நண்பர்களிடம் நன்கு பழகி அவர்கள் நன் மதிப்பைப் பெறுவீர்கள்.



**கடகம்**: எல்லா பிரச்சினைகளிலும் சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதி உண்டாகும். உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன்கள் வந்தே தீரும். வீண்கலகமும் அலைச்சலும் இருக்கும். நற்சுகமும் பொருளாதார மேம்பாடும் உண்டாகும்.



**சிங்கம்**: மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகளில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை.



**கன்னி**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்த்திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை கூடும். துணிச்சலாக எதிலும் ஈடுபடுவீர்கள்.



**துலாம்**: மற்றவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் நாட்டம் செல்லும். கௌரவம் அந்தஸ்து உயரும். வீண் செலவுகள் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.



**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலகப் பணியை சிறப்பாகச் செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சியை தருவதாக இருக்கும். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.



**தனுசு**: தந்தையுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. வெளி தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. பெண்க ளுக்கு எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்க சூழ்நிலை ஏற்படும். செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. கவுரவம் உயரும்.



**மகரம்**: சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்துக்கு உதவும். சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாக தீர்ப்பீர்கள். மேலதிகாரிகளின் அனுசரணை இருந்துவரும்.



**கும்பம்**: புதியதாக ஆரம்பித்த தொழிலில் ஏற்றம் உண்டு. கூட்டாளிகளிடையே ஒற்றுமை பலம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் சற்று தாமதமாக வந்தாலும் முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். பொருளாதாரம் எதிர்பார்த்தபடி இருக்காது.



**மீனம்**: எதைச் செய்தாலும் நேர்மையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அதிகாரம் செலுத்தும் ஆர்வமும் கொள்வீர்கள். பணவரத்து இருக்கும். திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும்.

## நாளை

**வைகாசி-31 சனிக்கிழமை | 14.06.2014**

திதி: பிரதமை மு.ப.08.09 வரை
நட்சத்திரம்: மூலம் பி.ப.12.29 வரை
சுபநேரம்: 02.53-04.23 வரை
இராகுகாலம்: 08.53-10.23 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### உள்ளது ஒன்று பலவாகத் தோன்றுதல்

பலவகை யோகங்களிலும் வைராக்கியம் அல்லது துறவே திருப்புமுனையாகக் கூறப்படுகிறது. செயல் புரிபவன் செயலின் பலனைத் துறந்து விடுகிறான். பக்தன் எல்லையற்ற அன்புருவான இறைவனிடம் அன்பு செலுத்தி மற்றச் சிற்றின்பங்களை எல்லாம் துறந்து விடுகிறான். யோகி தன் அனுபவங்களைத் துறக்கிறான். இயற்கை முழுவதும் ஆன்மாவின் அனுபவத்துக்காகவே இருந்தாலும்,முடிவில்தான் இயற்கை அல்ல என்பதை உணரவே அது பயன்படுகிறது; தான் இயற்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டவன் என்பதையும் அதன் மூலமே உணர முடிகிறது. இதுவே அவனது கொள்கை. அவன் தன் அறிவையும் புலன் பற்றிய அனுபவங்களையும் துறப்பதற்கு இந்த அறிவே காரணம். ஞானியோ எல்லாவற்றையும் விட்டுவிடுகிறான். அவனது கொள்கைப்படி இயற்கை என்ற ஒன்று, அன்றும் இன்றும் என்றுமே இல்லை. இந்த உயர்ந்த நிலைகளில் பலன் என்னும் பேச்சுக்கே இடம் இல்லை. பலன் என்ற பேச்சை அங்கே புகுத்துவதே தவறு. அப்படியே இந்தக் கேள்வி வந்தாலும் அதை நன்றாக ஆராய்ந்தால், நாம் காண்பது என்ன? இன்பம் பெறுதல் என்ற இலட்சியமே எது மனிதனுக்கு அதிக இன்பம் தருகிறதோ, அதுவே அவனுக்கு மிகவும் பயனுடையதாகும். அவனுடைய உலக போகங்களுக்கு உதவாததும் மிகுந்த இன்பம் தராததுமான இந்த உயர்ந்த பொருள்களைவிட இன்பம் தருவது எதுவோ, அதுவே பயனுடையதாகும். மக்கள் சமுதாயத்துக்கு இன்பம் தேடித் தருவதே அனைத்து விஞ்ஞானத் துறைகளின் நோக்கம். அதிக இன்பம் தருவதை எடுத்துக்கொண்டு, குறைந்த இன்பம் தருவதை அவன் விட்டுவிடுகிறான்.

## விந்தணுக்களை பாதிக்கின்றனவா கையடக்கத் தொலைபேசிகள் ?



மனிதர்கள் தங்களின் காற்சட்டைப்பையில் செல்லிடபேசியை வைப்பதால் அவர்களின் விதைப்பைகளில் உற்பத்தியாகும் விந்தணுக்களின் எண்ணிக்கை குறைவதாகவும், உற்பத்தியாகும் விந்தணுக்களின் வீரியமான செயற்பாட்டிலும் குறைபாடுகள் ஏற்படுவதாகவும் பிரிட்டனில் இருக்கும் எக்ஸ்டர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் செய்திருக்கும் புதிய ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகளின் குழு 1492 ஆண்களின் விந்தணுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 10 வெவ்வேறு ஆய்வுகளின் முடிவுகளை விரிவாக அலசி ஆராய்ந்தது. இந்த ஆய்வின் முடிவில், செல்லிடபேசிகளில் இருந்து உருவாகும் சூடும், மின்காந்த அலைகளும் கதிரியக்கமும் சேர்ந்து மனிதர்களின் விதைப்பைகளின் விந்தணு உற்பத்தியையும், உற்பத்தியாகும் விந்தணுக்களின் செயற்படும் தன்மையையும் ஆரோக்கியத்தையும் பாதிப்பதாக தாங்கள் கண்டறிந்திருப்பதாக இந்த ஆய்வுக்குத்தலைமை தாங்கிய மருத்துவர் பியானோ மத்தியூஸ் தெரிவித்திருக்கிறார்.

அதேசமயம் இந்த ஆய்வின் முடிவுகள் முழுமையானவை அல்ல என்று மற்ற விந்தணு ஆய்வாளர்கள் இவற்றை புறந்தள்ளியிருக்கிறார்கள். இந்த குறிப்பிட்ட ஆண்களின் மற்ற பழக்கவழக்கங்கள், உணவு மற்றும் உட்கொண்ட மருந்துகள் போன்றவற்றை இந்த ஆய்வாளர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளாத நிலையில் செல்லிடபேசிகளை காற் சட்டைப் பையில்வைப்பதால்மட்டுமே இவர்களின் விந்தணு உற்பத்தியும் விந்தணுக் களின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுவதாகக் கூறுவதை ஏற்கமுடியாது என்கிறார் ஷெப்பீல்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விந்தணு ஆய்வாளர் மருத்துவர் ஆலன் பேசி தெரிவிக்கிறார்.

தமது ஆய்வின் முடிவுகள் இறுதியானவை அல்ல என்பதை ஏற்றுக்கொள்ளும் பியானோ மத்தியூஸ், செல்லிடபேசிகளின் சூடும், மின்காந்தப்புலம் மற்றும் கதிரியக்கவீச்சு ஆகியவை விந்தணுக்களில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள் குறித்து மேலதிக ஆய்வுகள் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை தமது ஆய்வின் முடிவுகள் குறிப்புணர்த்துவதாகத் தெரிவிக்கிறார்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | 9 | | 2 | | | 4 |
| 5 | | | | | 7 | 1 | | 6 |
| 3 | 9 | | | 4 | 5 | 8 | 2 | |
| | 2 | 8 | 1 | | | | | 5 |
| | | | | | | | | |
| 1 | | | | | 4 | 9 | 3 | |
| | 5 | 3 | 7 | 2 | | | 8 | 9 |
| 2 | | 7 | 4 | | | | | 3 |
| 6 | | | 3 | | 8 | 4 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 7 | 4 | 6 | 3 | 2 | 9 | 8 |
| 9 | 6 | 2 | 8 | 7 | 1 | 4 | 5 | 3 |
| 3 | 8 | 4 | 2 | 5 | 9 | 7 | 1 | 6 |
| 8 | 2 | 1 | 6 | 4 | 5 | 3 | 7 | 9 |
| 6 | 4 | 9 | 3 | 2 | 7 | 1 | 8 | 5 |
| 7 | 3 | 5 | 9 | 1 | 8 | 6 | 4 | 2 |
| 1 | 9 | 6 | 7 | 8 | 2 | 5 | 3 | 4 |
| 2 | 5 | 8 | 1 | 3 | 4 | 9 | 6 | 7 |
| 4 | 7 | 3 | 5 | 9 | 6 | 8 | 2 | 1 |

## பொது அறிவுப் போட்டி

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆரம்பப் பிரிவு பாடசாலைகளுக்கு இடையேயானபொதுஅறிவுப்போட்டி,துரித கணிதச் செய்கைப் போட்டி. சித்திரப்போட்டி, சிங்கள விநாடி வினாப் போட்டி என்பன எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெறும் என வலிகாமம் கல்வி வலய கல்விப்பணிப்பாளர் எஸ். சந்திரராசாவினால் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-86)

# பாரதூரமான விளைவுகளை இலங்கை சந்திக்க நேரிடும்

## தற்போதைய போக்கு குறித்து மீண்டும் எச்சரிக்கிறார் தயான்

கொழும்பு. ஜூன் 13
இலங்கையின் தற்போதைய போக்கால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் தொடர்ந்தும் இந்தப் போக்கு நீடிக்குமானால் முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர்.ஜெயவர்த்தன அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடிமிக்க நிலைக்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது என்றும் ஐ.நாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதி கலாநிதி தயான் ஜயதிலக மீண்டும் எச்சரித்துள்ளார்.

இந்தியாவை எதிர்க்கும் அதே சமயத்தில் சர்வதேச விசாரணையையும் ஒரேவேளையில் எதிர்ப்பதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் எச்சரிக்கின்றார்.

இலங்கை அரசு சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதி மொழிகளுக்கு ஏற்றாற் போல் நடக்காமல், அவற்றுக்கு மதிப்பளிக்காமல் நடந்து வருகிறது. நாட்டின் இறைமையை முன்னிலைப்படுத்தி சர்வதேச விசாரணையை எதிர்த்து வரும் அரசு, அதனை எதிர்கொள்வதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவது மிகவும் அவசியமானதாகும்.

> இந்தியாவை எதிர்க்கும் அதே சமயத்தில் சர்வதேச விசாரணையையும் ஒரேவேளையில் எதிர்ப்பதால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும்.

ஆனால் மோடியின் அரசு வலியுறுத்தி வரும் 13 ஆவது திருத்தத்தை நடை முறைப்படுத்துவது தொடர்பில், இலங்கை தயாரில்லை. இப்படியான நிலையில் இந்தியாவின் ஆதரவு. கிட்டுவது கடினம்.

அதேவேளையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை, சர்வதேச விசாரணைக் குழுவை நியமித்து விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலியுறுத்தியுள்ளார். அதனை அரசு நிராகரித்துள்ளது. அத்துடன் எதிர் மறையான செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் அபாயகரமானவை. கண்மூடித்தனமான அரசின் எதிர்ப்புக்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியான நிலைமைகளையே ஏற்படுத்தும் என்பது நிச்சயம் என்றார் தயான் ஜயதிலக. (ல)

# மரண அறிவித்தல்

## சந்திரகுமார் கோபி ஆனந் (கோபி)

(பழைய மாணவன் - வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - 2012)



பருத்தித்துறை இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும், இல. 52, இராஜதுரை வீதி, வைரவபுளியங்குளம், வவுனியாவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரகுமார் கோபி ஆனந் (கோபி) நேற்றுமுன்தினம் (11.06.2014) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சந்திரகுமார் (கோபி ஏஜென்சி 33, மில்வீதி, வவுனியா, 352, A9 வீதி, கிளிநொச்சி)- மீனாதேவி தம்பதியரின் அன்பு மகனும், நிசாந்தினிதேவி, விஜய்ஆனந் (லண்டன்), துசியந்தினி (மருத்துவபீடமாணவி -மாலபே) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாஸ்கரன் (பொறியியலாளர் UNOPS- கிளிநொச்சி), சர்மிளா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், தனோபன், கோஷியா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.52, இராஜதுரை வீதி,
வைரவபுளியங்குளம்,வவுனியா. (43345) (45.3.6)

தகவல் :
குடும்பத்தினர்

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

## அமரர் பரராஜசிங்கம் பிரதீபன்

(நந்தன்)



தோற்றம் 06.12.1972
மறைவு 02.05.2014

கடந்த 02.05.2014 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் பரராஜசிங்கம் பிரதீபன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும்.


அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் வடக்கு, வங்கி வீதி,
ஆவரங்கால். (48942)(10.6.3)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## செல்வநாயகம் மகாலிங்கம் (மகான்)



கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் இலக்கம் 21, சங்கரப்பிள்ளை வீதியை வதிவிடமாகவும் கொண்ட **செல்வநாயகம் மகாலிங்கம்** நேற்றுமுன்தினம் (11.06.2014) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் அன்னலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற இராசதுரை மற்றும் சிவக்கொழுந்து தம்பதியரின் அருமை மருமகனும், வசந்தியின் (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) அன்புக் கணவரும், தனுஜாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சந்திரலிங்கம் மற்றும் புஸ்பவதி (திருவையாறு), சிவஞானம் (ஆசிரியர், கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்), தயாவதி (திருவையாறு), பத்மாவதி (திருவையாறு), திலகவதி (லண்டன்), திருஞானம் (பிரான்ஸ்), பிரேமா (திருவையாறு), கருணாவதி (திருவையாறு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகராஜா (லண்டன்), காலஞ்சென்ற பவளராணி மற்றும் தவராணி (மானிப்பாய்), ஜெயரூபன் (லண்டன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை றோட்,
மானிப்பாய். (48940) (45.3.6)

தகவல் :
குடும்பத்தினர்
தொ.பே. 021 225 5932

## விசாகப் பொங்கல்

தெல்லிப்பழை சித்தியம்புளியடி அண்ணமார் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு அபிஷேகப் பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது. மேலும் பாரம்பரிய முறைப்படி வழுந்துப்பானைப் பூசை நடைபெற்று பொங்கலுடன் மடை பரவி விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு எட்டாம்நாள் மடைப்பூசை இடம்பெறும். பூர்வாங்க கிரியைகள் வே.கந்தசுவாமி ஐயா தலைமையில் இடம்பெறவுள்ளன.(க)

## கற்கைநெறிக்கு விண்ணப்பம்

யாழ்.கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரியில் பின்வரும் கணினி கற்கை நெறிகளுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் சான்றிதழ்- 06 மாதம்.

தகைமை :- க.பொ.த(சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கணினி வலையமைப்பு வல்லுநருக்கான சான்றிதழ் 06 மாதம்.

தகைமை :- க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தமிழ், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு முன்னர் தொழில்நுட்பவியல் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். இந்தக் கற்கை நெறிகளானது எதிர்வரும் ஜூலை மாதம் முதல் வாரம் ஆரம்பிக்கப்படும். (க)

# மரண அறிவித்தல்

## அமிர்தலிங்கம் சுப்பிரமணியம் (சண்முகா ஐயா)

(முன்னாள் பிராந்திய முகாமையாளர், E.B.Creasy & Company Alcop Cey.Ltd)



மாதனை புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ். வீதி,யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்த லிங்கம் சுப்பிரமணியம் 09.06.2014 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - செல்லம்மா (அன்னமுத்து) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற தா.க.பொன்னுத்துரை மற்றும் இராசம்மா (கனடா) தம்பதியரின் அன்பு மருமகனும், அகிலாண்ட நாயகியின் பாசமிகு கணவரும், தவலிங்கம் (நோர்வே), சிறிலிங்கம், தயாபரி (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), ஜனார்த்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பூலோகசுந்தரம், சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கணேசலிங்கம் (பபு - கனடா), கனகலிங்கம் (சர்க்கரை - ஆஸ்திரேலியா), குமரலிங்கம் (குமரன் - லண்டன்), கேசவலிங்கம் (கேசவன் - கனடா), குணலிங்கம் (குணம் - நோர்வே), தணநாயகி (கனடா), சாந்தநாயகி (கனடா), சோதிநாயகி (லண்டன்), காலஞ்சென்ற சந்தனப்பிள்ளை, மண்டலநாயகி (லண்டன்), டாக்டர் கிருபரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், சுகிர்தா (அமெரிக்கா), சுஜாதா (லண்டன்), சிவகுமார் (லண்டன்), நந்தினி (நோர்வே), சதாலிங்கம் (நோர்வே), ரூபலிங்கம் (இலங்கை) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப.10 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'அகிலகம்', 28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3852 (வீடு),
077 573 7397 (ஜனா)
077 653 5784 (தயா)

(48938)
(12.3.6)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## 47ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 125ஆவது பிறந்த தினமும் | 18ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் 100ஆவது பிறந்த தினமும்



அமரர் மரியார்
அந்தோனிப்பிள்ளை (ராசப்பா)
தோற்றம் - 21.03.1889
மறைவு - 16.11.1967



அமரர் அந்தோனிப்பிள்ளை
பெனடிற் (செல்லத்துரை)
தோற்றம் - 13.06.1914
மறைவு - 27.05.1996

இவர்களின் ஆத்மசாந்திக்காக நாளை (14.06.2014) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். இத் திருப்பலியில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.

பெ.செபஸ்ரியன் குடும்பத்தினர்.
077 256 7072

தாளையடி வடக்கு,
தாளையடி.

(48895)(12,3.6)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராமநாதன் லோகநாதன்

(முன்னாள் செயலாளர்,காரைநகர் பிரதேச சபை)

தோற்றம் 24.05.1960

மறைவு 18.05.2011

திதி: பிரதமை (13.06.2014)

வாழ்க்கையெனும் ஓடத்தில் எனைச் சுமந்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று கரைந்து போனாலும்
நாளிலும் பொழுதிலும் கண்ணீர் தான் சொந்தமாகின்றது.
நீங்கள் இல்லா என் வாழ்வு நீர்க்குமிழி ஆனதப்பா
காலம் செய்த மாயங்கள் மெல்ல கொல்லும் நினைவுகள்
நம் உறவு சொல்ல இன்று நீங்கள் யாரோ நான் யாரோ

ஓம் சாந்தி!

என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்
அன்பு மனைவி லோகநாதன் ரதீஸ்வரி,
குடும்பத்தினர்.
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

(48804)(5.6)

# தொழிற் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்வரும் கற்கை நெறிகளை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஆடி மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

இந்தக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், நல்லூர், பண்டத்தரிப்பு, கரவெட்டி, பருத்தித்துறை, மாதகல் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், அலுமினியம் பொருத்துநர், காய்ச்சி இணைப்பவர்(வெல்டிங்), சிறுவர் மற்றும் பெண்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், அழகுக் கலை வல்லுநர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர், மர வேலை தொழில்நுட்பவியலாளர்(தளபாடம்), வானொலி- தொலைக்காட்சி திருத்துநர், கணினி பட வரைஞர் ஆகியனவே அந்தக் கற்கை நெறிகளாகும். இந்த அனைத்துக் கற்கை நெறிகளும் தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அல்லது சுய விவரக் கோவைகளை கற்க விரும்பும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, 1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (தொ.பே: 021 222 7949) அல்லது ஏதாவது எமது தொழிற் பயிற்சி நிலையங்களில் இன்றைய தினத்துக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (க)

# நிர்வாகிகள் தெரிவு

அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் யாழ். மாவட்ட சங்கத்தின் 5ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் பெயர் விவரம் வருமாறு:-

தலைவர்-வி. ஸ்ரீசக்திவேல், உப தலைவர்- எஸ்.வீரசிங்கம், செயலா ளர் -க.கதிரமலை உப செயலாளர்- எஸ்.மன்மத ராஜன், பொருளாளர் எஸ். கணேசலிங்கம், நிர்வாக உறுப்பினர்கள் செ.சிவலோக நாதன், சு.விஜயநாதன், கணக்கு பரிசோதகர் மா.புவனேந்திரன். (க-11)

# செப்பனிடப்படுமா வீதி?

கரணவாய், ஜூன் 13

வரணி- தில்லையம்பலப் பிள்ளையார் வீதி கடந்த 20 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாத காரணத்தால் வீதியில் முழத்துக்கு முழம் பெரிய பெரிய குழிகள் காணப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட வீதியில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கரணவாய், கரவெட்டி போன்ற பகுதிகளைச் சேர்ந்த பெருமளவான விவசாயிகள் தில்லையம்பலப்பகுதி, வரணி வயல் வெளி ஆகிய பகுதிகளில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த வீதி இவர்களுக்குரிய பிரதான போக்குவரத்து மார்க்கமாகவுள்ளது.

குறித்த வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் வயல் நிலங்களை உழுவதற்கோ, பசளைகளைக் கொண்டு செல்வதற்கோ, நெல் அறுவடைகாலங்களில் அவற்றை எடுத்துச் செல்வதற்கோ விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.


இதேவேளை - கொடிகாமம் சந்தைக்குச் செல்லும் பழ வியாபாரிகள் மற்றும் தேங்காய் வியாபாரிகளும் தமது போக்குவரத்துக்கு குறித்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

> கொடிகாமம் சந்தைக்குச் செல்லும் பழ வியாபாரிகள் மற்றும் தேங்காய் வியாபாரிகளும் தமது போக்குவரத்துக்கு குறித்த வீதியையே பயன்படுத்தி வருகின்றனர்.

மூட்டை முடிச்சுகளுடன் வரும்போது பள்ளம்திட்டிகளில் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் விழுந்து எழும்புவதால் அடிக்கடி அவை சேதங்களுக்கு உள்ளாக நேர்கிறது.

அது மட்டுமல்லாது வீதியின் இரு மருங்குகளிலும் சம்புப் புற்கள் வளர்ந்து பற்றைகளாகக் காணப்படுவதால் இரவு நேரங்களில் குறித்த வீதியில் பயணம் செய்வோர் அச்சத்துடனேயே பயணம் செய்ய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே அந்தப் பகுதி விவசாயிகளினதும், வியாபாரிகளினதும் நலன்கருதி குறிப்பிட்ட வீதியைப் புனரமைப்புச் செய்து துப்புரவு செய்வதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.(வ-108)



நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வடக்கு வீதியில் உள்ள இராஜகோபுரத்துக்கு முன்பாக மணிமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் தோற்றத்தை இங்கு காணலாம். (வ-17)

# நூல் வெளியீடு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் கல்விக் குழுவால் தயாரிக்கப்பட்ட "இந்து நாகரிகம்" என்ற க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான வழிகாட்டி நூல் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையுடனும், செற்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையிலும் வெளியிட்டு வைக்கப்படும்.

இதனைத் தொடர்ந்து மாலை 4.30 மணி வரை உயர்தர வகுப்பு ஆசிரியர்களினால் உயர்தர மாணவர்களுக்கான பயிலரங்கு நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை இதே பயிலரங்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறும். உயர்தர வகுப்பு மாணவர்கள் இதில் பங்குபற்றி பயன் பெறலாம். (க)

# சைவசமயப் பேருரைகள்

இருபாலை கிழக்கு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் (முனி கோயில்) அலங்கார உற்சவத்தை முன்னிட்டு வலி. கிழக்கு சைவ சமய மன்றத்தால் நடத்தப்படும் சைவ சமயப் பேருரைகள் இந்த மாதம் 11 ஆம் திகதி ஆரம்பித்து 20 ஆம் திகதி வரை மேற்படி ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் "நாயன்மார் காட்டிய நன்னெறி" என்ற தொடரில் சொற்பொழி வாற்றி வருகின்றார்.

இறுதி நாளன்று சமய அறிவுப் போட்டி களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். இந்தப் போட்டியில் பாடசாலை மாணவர்கள், ஆர்வலர்கள் உட்பட அனைவரும் பங்கு பற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சுதர்சனக் கிரியா

நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதியில் உள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் நாளை காலை 7 மணிக்கு சுதர்சனக் கிரியா நடைபெறவுள்ளது.

வாழும் கலை அன்பர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.வாழும் கலை அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. (க)

# அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு செயலமர்வு

அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் காலை 8.30 முதல் மாலை 5.00 மணி வரை யாழ்ப்பாண பிராந்திய பயிற்சி நிலையத்தில் (சுகாதார கிராமம், பண்ணை) இடம்பெறவுள்ளது.

இந்தச் செயலமர்வின் பாடங்கள் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டத்தையும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

# மலிவு விலையில் மாம்பழம்

சுழிபுரம், ஜூன் 13

சுழிபுரம் சத்தியக்காட்டுச் சந்தையில் நல்ல இன பெரிய கறுத்தக் கொழும்பான் மாம்பழம் இருபது ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

இந்த வாரம் முதல் சந்தையில் மாம்பழம் அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளது.

சுழிபுரம் பகுதியில் மாம்பழம் இந்தப் போகம் நிறையக் காய்த்துள்ளது. மழை குறைவாக இருந்ததால் மாம்பழம் அதிகமாகக் கிடைத்துள்ளது.

இங்கிருந்து வெளியிடங்களுக்கு நூற்றுக் கணக்கான பழங்கள் வாங்கிச் செல்லப்படுகின்றன. (க-28)

# உள்ளகப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்.மாவட்ட பொது சுகாதார பரிசோதகர்களுக்கான இருநாள் உள்ளகப் பயிற்சி நெறி எதிர்வரும் 16, 17 ஆகிய திகதிகளில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பிராந்திய மலேரியா தடை இயக்கப் பணிமனையினரால் பயிற்சி நெறிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

**பஸ் விற்பனைக்கு**

HJ XXXX இலக்கமுடைய அசோக் லேலண்ட் பஸ் விற்பனைக்குண்டு.

(18905) (12.3) தொடர்புகளுக்கு: 077 305 3000




**வீடு வாடகைக்கு**

அரியாலை, கண்டிவீதியில், (புங்கன் குளம் சந்தி) அமைந்துள்ள வீடு வாடகைக்குண்டு. (18941) (12.3)

தொடர்புகளுக்கு: 077 143 5595

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) நல்ல அமைதியான சூழலில் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.

(18774) (12.3.6) தொடர்பு: 072 959 6597

**இறைச்சிக் கோழிக்குஞ்சு விற்பனைக்கு**

முதல்தரமான BAIRAHA இறைச்சிக் கோழிக் குஞ்சு விற்பனைக்குண்டு.
ஒரு குஞ்சின் விலை ரூபா 75/= மற்றும் PRIMA முட்டைக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு.
பிரதி சனிக்கிழமை தோறும் கோண்டாவில் மற்றும் நெல்லியடியில் ஓடர்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(45674) (12.3.6) தொடர்பு: 077 995 9382

**வீடு வளவு விற்பனைக்குண்டு**

ஆனைக்கோட்டை, ஆறுகால் மடம் புதுவீதியில் அமைந்துள்ள பரப்பு இரண்டு குழி 11.20 விஸ்தீரணம் கொண்ட காணியும் அழகான மாபிள் பதித்த வீடும் கிணறும், மலசலகூடமும் விற்பனைக்குண்டு. (48916) (12.3)

தொடர்புகளுக்கு: 075 670 1245

**வீடு வாடகைக்கு**

பலாலி வீதி, உரும்பிராய், V.T.S வீதியில் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில்புரியும் தனிப்பட்டவர்களுக்கும் உகந்த அறைகளும், உரும்பிராய் தபால்பெட்டி வீதியில் சிறிய குடும்பத்திற்கு ஏற்ற வீடும் வாடகைக்குண்டு.

(18857) (12.3) தொடர்புகளுக்கு: 077 606 2168



**சமாதான நீதிவான்களாகச் சத்தியப் பிரமாணம்**



நாராயணபிள்ளை வேலாயுதம்
திருநகர் வடக்கு- கிளிநொச்சி

கிறிஸ்தோப்பிள்ளை பீற்றர் இராசநாயகம்
கிளி நகர்-கிளிநொச்சி

இவர்கள் 03.05.2014 கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ.வஹாப்தீன் முன்னிலையில் சமாதான நீதிவான்களாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். இவர்கள் கிளி/மாவட்ட கரைச்சி மத்தியஸ்தர் சபையின் உறுப்பினர்கள் ஆவர்.

இவர்களது சேவை சிறப்புற வாழ்த்துபவர்:
திருவையாறு, கிளிநொச்சி. கணபதிப்பிள்ளை காமநாதன்

(41287) (10.6.3)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### சொந்த

றிருந்தார். அத்துடன் அவர்களுடன் உரையாடல்களை நடத்தியிருந்த பெயானி, மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் தொடர்பாக அதிகாரிகள் மற்றும் உயர்மட்டத் தலைவர்களுடனும் கலந்துரையாடியிருந்தார்.

தான் நேரடியாகக் கண்டவற்றையும், இங்கு திரட்டிய தகவல்களையும் கொண்டு தாம் தயாரித்துள்ள அறிக்கையைத் தற்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்துள்ளார் பெயானி. அந்த அறிக்கையில், இடம் பெயர்ந்த மக்களை குடியமர்த்துதல், காணி விவகாரங்கள் போன்ற விடயங்கள் தொடர்பில் கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இடம் பெயர்ந்த மக்களின் மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக தேசிய செயற்றிட்டத்தை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று பரிந்துரைத்துள்ளார் பெயானி.

அதுமட்டுமல்லாது, போர் முடிவடைந்துள்ள நிலைமையில் தேசிய பாதுகாப்பில் இராணுவத்தின் வகிபாகம் தொடர்பில் மீள்மதிப்பீடு செய்யப்படவேண்டும். குறிப்பாக சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு அமைவாக அதனைச் செய்யலாம். வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள சில பகுதிகளிலிருந்து இராணுவத்தை மீளப்பெறுவதற்கான திட்டத்தின் வெளிப்படையான தகவல்களை இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்க வேண்டும் அவர்களுக்கு இடப்பெயர்வினால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நட்டஈடும் வழங்கப்பட வேண்டும். இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியேற்ற செயற்பாடுகளின் போது அவர்கள் தாக்கப்படுதல் சித்திரவதைக்கு உட்படுதல் அச்சுறுத்தப்படல் என்பன இடம்பெறுவதை தவிர்க்க வேண்டும். அவர்களின் சுதந்திரமான நடமாட்டம் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

காணாமற் போனோர் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவானது சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவதை உறுதிப்படுத்த வேண்டும். காணாமற்போனோரின் உறவினர்களுடன் இணைந்து செயற்பட்டு பரிந்துரைகளை வெளிப்படுத்த வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு எதிராக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படுவதை உறுதிப் படுத்த வேண்டும். பொதுமக்களுக்கு எதிராக குற்றங்களில் ஈடுபட்ட பாதுகாப்பு அதிகாரிகள் தண்டிக்கப்படாமல் இருக்கின்றமை குறித்து ஆராயப் படவேண்டும் – என்றும் அவர் பரித்துரைகளைச் செய்துள்ளார். (ற-5)

### ஆணைக்குழு

பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அமர்வு கடந்த வாரம் மட்டக்களப் பில் நடைபெற்றது. அதில் ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்ற அமர்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவுக்கு எதிராகவும் மக்கள் முறைப்பாடுகளை முன் வைத்திருந்தனர்.

1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிய ரெலோ அமைப்பினர் தமது பிள்ளைகளைக் கடத்திச் சுட்டுக் கொன்றது என்று 5 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. அது தொடர்பில் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும் என்று ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் செல்வம் அடைக்கல நாதனிடம் கேட்ட போது,

"இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை விசாரணை செய்ய வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். இதே போன்று எங்கள் அரசியல் கட்சி சார்ந்த – எங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்" – என்று பதிலளித்தார். (ற-5)

### கமலுக்கு

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது. கந்தசாமி கமலேந்திரன், லண்டன் யசிந்தன் மற்றும் றெக்ஷயனின் மனைவியான அனித்தா ஆகியோருக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

றெக்ஷயன் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார். அது தொடர்பிலேயே மேற்குறித்த மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-4)

### விடுவிக்கப்பட்ட

முகாமில் இருந்து கடல் மார்க்கமாக தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்டி மீன்பிடித்தமைக்காக 46 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்து மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அனைவரையும் விடுவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜக்ஷ உத்தரவிட்டிருந்தார். அதையடுத்து குறித்த மீனவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு. இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் நேற்றுக் காலை தலைமன்னார் கடற்படைத்தளத்திலிருந்து கடற்படையினரின் இரு படகுகளில் மீனவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு இந்திய கடலோரக்காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ற-56)

### கடும்

ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான விஜயதாஸ ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் இணைந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட கூட்டறிக்கையின் பிரகாரம் மேற்படி குழு நியமிக்கப்பட்டுள்ளதால் இது விடயத்தில் அரசுக்கு மாற்றுவழி இல்லை. எனவே, ஐ.நா. விசாரணைகளுக்கு முகங்கொடுப்பதைத் தவிர, அரசுக்கு இது விடயத்தில் மாற்றுவழி இல்லை என்றும் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு அரசு முட்டுக்கட்டைப் போடுமானால், அது நாட்டுக்கு பேராபத்தை ஏற்படுத்தும் என்றும், ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கக்கூடும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டினார். ஜனாதிபதித் தேர்தலை குறிவைத்தே இது விடயத்தில் முடிவெடுக் கும் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஜனாதிபதி ஒப்படைத் துள்ளார். இது தவறான முன்னுதாரணமாகும் என்றும் அவர் விமர்சித்தார்.

அத்துடன், "ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் ஒத்துழைத்துச் செயற்படாவிட்டால் இலங்கைக்குப் பாரிய நெருக்கடிகள் ஏற்படலாம். அனைத்துலக சமூகத் துடன் தொடர்ந்தும் முரண்பட்டால் சீனா, ரஷ்யா ஆகிய இலங்கையின் நட்பு நாடுகள் கூட அரசை கைவிரிக்கும் நிலை ஏற்படும்" என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

இதற்கிடையில், ஐ.நா. விசாரணைக்குழு தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்திருப்பது தவறான செயலாகும் என்று ஜே.வி.பியின் உறுப்பினர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்தார். (த-சி)

### வடக்கு

– செலவுத் திட்டம் இது வாகும். வடக்கு மாகாண சபைத் தேர்தல் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் வடக்கு மாகாண சபை நிர்வாகத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப் பெடுத்துக் கொண்டது. அதன் பின்னர் கடந்த வருடம் டிசெம் பர் மாதம் முதலாவது வரவு – செலவுத் திட்டம் பேரவைச் செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்த நிலையில் அடுத்த ஆண்டுக்குரிய வரவு – செலவுத் திட்டம் தயாரிக்கும் நட வடிக்கைகள் வடக்கு மாகாண அமைச்சு அலுவலகங்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமைச்சுக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான நிதி, தற்போது தயாரிக்கப்படவுள்ள புதிய வரவு – செலவுத் திட்டத்தினூடாக மத்திய அரசிடம் கோரப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு அமைச்சுக்களும், அதற்கு கீழான ஒவ்வொரு திணைக்களங்களும், புதிய வரவு – செலவுத் திட்டத்தை தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. (ற-5)

### ஜனாதிபதிக்கு

விருதை பொலிவிய ஜனாதிபதி ஈவோ மொறலஸ் வழங்கிக் கௌரவிப்பார் என்று கூறப்பட்டுள்ளது. சுதந்திரம் மற்றும் ஜனநாயக நிறுவகங்களுக்காக உழைத்த தனி மனிதர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு அந்த சேவைக்காக வழங்கப்படும் அங்கீகாரமே இந்த விருது என பொலிவியா அறிவித்துள்ளது

அதேவேளை, குறித்த மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பொலிவியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

ஜி– 77 அமைப்பில் 133 நாடுகள் உறுப்புரிமை பெற்றுள்ளதுடன், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை முன்னேற்றும் நோக்கிலேயே மேற்படி அமைப்பு உருவாக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமையுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இந்தமாநாட்டில்கலந்துகொள்ளவுள்ளன. (ற)

### விசாரணைக்

பட்டுள்ளது.

சிரேஷ்ட ஐ.நா. அதிகாரியான சண்ட்ரா பிடஸ் அம்மையார் இந்த விசாரணைக் குழுவின் இணைப்பாளராகக் கடமையாற்றுவார். இரு சட்ட மருத்துவ நிபுணர்கள், ஒரு சட்ட ஆய்வாளர், பாலின வல்லுநர் ஒருவர், விசாரணை அதிகாரிகள் எனப் பன்னிருவர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அதேசமயம், இந்தக் குழுவினருக்கு வெளி நிபுணத்துவ உதவிகள் மற்றும் புலனாய்வு ஒத்துழைப்பை வழங்குவதற்காக இரண்டாம் நிலை உதவிக் குழு ஒன்றும் நியமிக்கப்பட இருக்கின்றது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியில் மதிக்கப்படும் நியூஸிலாந்தின் நீதியரசரான டாம் சிஸ்வியா கார்ட்ரைட்டும் இந்த விசாரணைக் குழுவில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவின் பணி இந்த ஜூன் நடுப்பகுதியில் ஆரம்பித்து, பத்து மாதங்கள் கடந்து 2015 ஏப்ரலில் முடிவுறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)


## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி கொன்செப்ரா

தோற்றம் 14.05.1960

மறைவு 13.06.2007



ஆசைமுகம் கண்டு
ஆறுதல் மொழி கேட்டு -அன்போடு
அணைத்த கரம் பிரிந்து
ஆண்டு ஏழு ஆகியதே!
எம் வாழ்வின் எப்போதும்
எம்மோடு இருப்பீர்கள் என்றிருந்தோம்
ஆனால் தினமும் உங்களின்
- நினைவுகளை
சுமந்த படி வாழ வைத்து
விட்டீர்களே அம்மா

என்றும் உங்களை எங்கள் மனதில் கொண்டு வாழ்கின்றோம்

162 A, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(49006)(10) குடும்பத்தினர்.

## NEW ERA ACADEMY - LONDON

ELOCUTION CLASS 2014

EXAMINATIONS

BUTTERFLY INTERNATIONAL SCHOOL CHANKANAI

பெற்றோர்களே! உங்கள் சிறார்களுக்குச் சிறப்பான ஆங்கில மொழித்தேர்ச்சியை வழங்க அரியசந்தர்ப்பம் இங்கிலாந்து நாட்டு ஆங்கில முறையிலமைந்த பாடத்திட்டம் இறுதிப்பரீட்சை கணிப்பீடு, மதிப்பீடுகள் இங்கிலாந்து நாட்டு விரிவுரையாளர்களால் மேற்கொள்ளப்படும்.

புதிய Elocution Class 15.06.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு எமது முன்பள்ளியில் ஆரம்பமாகும்.

* சர்வதேச அங்கீகாரம் பெற்ற பாடநெறி
* இப்பாடநெறியை மூன்று வயது தொடக்கம் கற்க முடியும் இதனை கற்பதன் மூலம் எமது பிள்ளைகளின்
* ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் அதிகரிக்கும்.
* ஆங்கிலத்தில் கிரகிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.
* ஆங்கிலத்தில் எழுதும் ஆற்றல் அதிகரிக்கும்.
* சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்
* Family migration இன் போது புள்ளிகள் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு தினங்களில் தரமான விரிவுரையாளர்களினால் மகிழ்ச்சிகரமான ஆங்கிலம் கற்கும் முறையியல்களான ஆடல், பாடல், நாடகம், வர்ணம் தீட்டுதல், பேச்சு, விளையாட்டுக்கள் மூலம் கற்பிக்கப்படும். பெறுமதி வாய்ந்த வழிகாட்டி நூல்களுடன்.

வயது பிரிவுகள்:
5 வயதுக்கு கீழ் - 3+ 4+, 5
7 வயதுக்கு கீழ் - தரம் - 1, தரம் - 2
9 வயதுக்கு கீழ் - தரம் - 3, தரம் - 4
10 வயதுக்கு கீழ் - தரம் - 5

தொடர்புகளுக்கு: 077 618 4250, 077 890 7229

Director
Butterfly International School
Chankanai

வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு. பதிவுகளுக்கு முந்துங்கள்.

ஆசிரியர் New Era Academy (UK) இன் ... Mrs. Dharshani Puvirajasingam ...

(C/14757)(10)

## பரத நாட்டிய வகுப்புக்கள்

528, பலாலி வீதி, திருநெல்வேலியில் இயங்கும் ஸ்ரீசக்தி நடனாலயத்தில் பரத நாட்டிய அறிமுறை, செய்முறை வகுப்புக்கள் (தரம் 6- தரம் 13)

ஆரம்பம்: 14.06.2014 சனிக்கிழமை 4.00pm

ஆசிரியர்கள்: திருமதி க. ஞானசக்தி
திருமதி நா. காமினி
திருமதி டானியல் பேள்ரஞ்சினி

(49003) (10)

T.P: 077 6160340, 021 222 3822

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் U.K. பிரஜாவுரிமை உடைய 1976 ஆம் ஆண்டு பிறந்த 5 அடி 9 அங்குலம் உயரம், ரோகினி நட்சத்திரம், பாவம் 19 ½ லக்கினத்தில் செவ்வாய் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 69 24 729

(49001) (10)

யாழ்.நகரில் முதன் முறையாக......

## புத்தகத் திருவிழா

மாபெரும் தமிழ்ப் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

வீரசிங்கம் மண்டபத்தில்

காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 19.06.2014 வியாழக்கிழமை வரை

பல்லாயிரக் கணக்கான தலைப்புக்களில் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் அதிரடி விலைக்கழிவுகளுடன்

குறிப்பிட்ட சில புத்தகங்களுக்கு எதிர்பாராத விசேட விலைக்கழிவு. அரிய சந்தர்ப்பம்.



வாசிப்பை நேசிக்க வைப்போம் அனைவரையும் அழைக்கின்றோம்.

(49004)(12.6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் அருணாசலம் சரஸ்வதி

தோற்றம் 12.03.1932

மறைவு 14.05.2014

எமது குடும்பத்தின் குலவிளக்காகவும்
எமது பாசமிகு தாயாகவும்
எங்கள் அனைவருக்கும் வழிகாட்டியாகவும்
எங்கள் அனைத்து உறவுகளின்
காவல் தெய்வமாகவும் இறுதிவரை
உறுதி தளராது இருந்த எங்கள்
இதய தெய்வத்தின் பெயர் என்றும் அழியாது...

கடந்த 14.05.2014 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வத்தின் நினைவாக இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசனமும் நடைபெறவிருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாலிநகர்,
வவுனிக்குளம்.

(49005)(10)

உங்கள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.



உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடுவதற்காகப் போர்த்துக்கல் அணி நேற்றுப் பிரேஸிலை வந்தடைந்தது. அந்த அணியின் நட்சத்திர வீரரும் உதைபந்தாட்ட ரசிகர்களின் நாயகனுமான கிறிஸ்ரியானோ ரொனால்டோவை பிரேஸில் அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்கின்றனர்.
காயத்தால் அவதிப்பட்டு வந்த போர்த்துக்கல் உதைபந்தாட்ட அணியின் தலைவர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ ஓரளவு குணமாகிவிட்டார்.
கால்முட்டி காயம் மற்றும் தசைப்பிடிப்பால் அவதிப்பட்டதால் உலகக்கிண்ணப் போட்டியில் ரொனால்டோ பங்கேற்பாரா என்ற கேள்வியில் ரசிகர் இருந்தனர். இந்த நிலையில் அயர்லாந்துக்கு எதிரான நட்புரீதியான பயிற்சி ஆட்டத்தில் போர்த்துக்கல் மோதியது. இதில் பாதியில் களமிறங்கிய ரொனால்டோ வழக்கம் போல் உற்சாகத்துடன் விளையாடினார். (த)

## பீற்றர்சன் இல்லாதமை மிகப் பெரும் ஏமாற்றமே



குமார் சங்கக்கார

இலங்கை அணியுடனான டெஸ்ட் தொடருக்கு, இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்ஸன் அணியில் இணைத்துக்கொள்ளப்படாமை தொடர்பில் இலங்கை அணி வீரர் குமார் சங்கக்கார கருத்து வெளியிட்டுள்ளார்.
கெவின் பீற்றர்சன் இல்லாத இங்கிலாந்து அணி லசித் மலிங்க இல்லாத இலங்கை அணிக்கு ஒப்பானது எனக் குறிப்பிட்டுள்ளார்.
சகல அணிகளிலும் பல்வேறு திறமைகளை கொண்ட வீரர்கள் இருக்கின்ற போதிலும் ஒரு அணி உயிர் பெறுவது அவர்கள் அனைவரும் ஒன்றிணையும் போதேயாகும் எனச் சங்கக்கார குறிப்பிட்டுள்ளார்.
இங்கிலாந்து அணி முகாமையாளர்களுடன் கருத்து முரண்பாட்டில் உள்ள பீற்றர்சன் இலங்கை அணியுடனான போட்டிகளில் தமது துடுப்பில் பதில் அளித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.
அவர் இலங்கை அணியுடனான 11 டெஸ்ட் போட்டிகளில் 51.4 என்ற சராசரி ஓட்ட பெறுதியைப் பெற்றுள்ளார்.
அதிகபட்சமாகக் கொழும்பில் இடம்பெற்ற போட்டி ஒன்றில் 165 பந்துகளில் 151 ஓட்டங்களை பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத் தக்கது. (த)



ஜாம்பவான் பீலே

## உருகுவேயை பிரேசில் பழி வாங்கவேண்டும்

உதைபந்தாட்டம் மூலமாகத் தான் பிரேசில் என்ற நாடு இருப்பது அனைவருக்கும் தெரியவந்தது என்று உதைபந்தாட்ட ஜாம்பவான் பீலே கூறியுள்ளார்.
இன்று உலகமே எதிர்பார்க்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.
இந்த நிலையில் இறுதிப்போட்டியில் மோதும் அணிகள் பற்றி தான் ரசிகர்களிடையே ஒரே பேச்சாக இருக்கும்.
இது பற்றி பீலே கூறுகையில். 1950 இல் நடந்த உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் உருகுவேயிடம் பிரேசில் தோற்றதற்கு இந்த ஆண்டு இறுதிப்போட்டியில் அந்த அணியை பிரேசில் பழி தீர்க்கவேண்டும் என்பதே எனது விருப்பம்.
அந்தக் காரணத்தால் நான் பிரேசிலும், உருகுவேவும் தான் இறுதிப்போட்டியில் மோதவேண்டும் என்று நினைப்பேன்.
மேலும் பிரேசில் என்ற நாடு குறித்து பலருக்கும் தெரியாது. பிரேசில் என்ற ஒரு நாடு உள்ளது என உலக மக்களுக்கு தெரியவந்ததே உதைபந்தாட்டங்களால் தான். எனவே பிரேசிலின் பெருமைக்கு உதைபந்தாட்டம் தான் முக்கிய காரணம் என்று கூறியுள்ளார். (த)

## மகிழ்ச்சியில் பலோடெல்லி



பலோடெல்லி - பா[illegible] குசா

இத்தாலி உதைபந்து அணியின் வீர[illegible]லாடெல்லி, தனது காதலியான பானி நெகுசாவைக் கரம்பிடிக்கவுள்ள[illegible] இத்தாலி அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் பலோடெல்லி, பெல்ஜிய[illegible]தைச் சேர்ந்த மொடல் அழகி நெகுசாவை பல மாதங்களாகக் காதலி[illegible]து வருகிறார்.
இவர்களின் திருமணம் உறுதிப்படுத்த[illegible]டாமல் இழுத்தடித்த நிலையில், தனது டுவிட்டர் வலைதளத்தில் பலோடெ[illegible]ல்லி, நெகுசா திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்துவிட்டார். எனது [illegible]மனைவிக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள் எனக் கூறியுள்ளார்.
இதை உறுதிப்படுத்தும் வகையில் நெகு[illegible]வும் பிறந்தநாள் பரிசாக அவர் கொடுத்த வைர மோதிரத்தின் புகை[illegible]படத்தை வெளியிட்டுள்ளார். ஆனால் திருமணம் பற்றி அவர்கள் ஏ[illegible]ம் குறிப்பிடவில்லை .(த)

## அணித் தலைவரான உத்தப்பா

ஆஸ்திரேலியா செல்லும் இந்தியா 'ஏ' அணியின் தலைவர்களாக உத்தப்பா, திவாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்திய அணி ஆஸ்திரேலியா சென்று ஜூலை 2ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 6ஆம் திகதி வரை தென்னாபிரிக்கா 'ஏ', ஆஸ்திரேலியா 'ஏ', ஆஸ்திரேலியா தேசியத் திறன் அணி ஆகியவை பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடுகிறது.
இந்தப் போட்டிகளில் ரொபின் உத்தப்பா 4 அணிகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டித் தொடருக்கும், ஆஸ்திரேலியா 'ஏ' அணிக்கு எதிரான 4 நாள் போட்டிகளுக்கு மனோஜ் திவாரி அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளனர்.



ரொபின் உத்தப்பா

இந்திய 'ஏ' அணி வீரர்கள்:- மனோஜ் திவாரி (அணித் தலைவர்), லோகேஷ் ராகுல், ஜிவாஞ்ஜோத் சிங், ரொபின் உத்தப்பா, அம்பாத்தி ராயுடு, கருண் நாயர், நமன் ஓஜா, பிராக்யன் ஓஜா, உமேஷ் யாதவ், தவால் குல்கர்னி, அனுரீத் சிங், ரஜத் பாலிவல், அமித் மிஸ்ரா, சந்தீப் சர்மா, ஜஸ்பிரீத் பும்ரா, பாபா அபராஜித்.
ஒரு நாள் போட்டித் தொடருக்கான வீரர்கள்:- உத்தப்பா (அணித் தலை வர்), உன்முக்த் சந்த், மனீஷ் பாண்டே, ராயுடு, மனோஜ் திவாரி, கேதர் ஜாதவ், சஞ்சு சாம்சன், பர்வேஸ் ரசூல், அக்ஷர் படேல், தவால் குல்கர்னி, ரிஷி தவான், மோகித் சர்மா, கரன் சர்மா, ராகுல் சுக்லா, மனன் வோரா, ஜெய் தேவ் உனட்கட். (த)

# காளியம்பாள் யங்கம்பன்ஸ் அணிகள் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுக்கழகம் நடத்தும் சிவ குருநாதர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில்இடம்பெற்றுவருகின்றன.

நேற்றுமுன்தினம்புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் காளியாம்பாள் விளையாட்டுக்கழக அணியும் ஞானகலா விளையாட்டுக்கழகஅணியும்மோதின. இதில் காளியாம்பாள் விளையாட்டுக்கழக அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# அரையிறுதி ஆட்டத்துக்கு சென்.மேரிஸ் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கனி சுப்பா கிங்ஸ் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணியைஎதிர்த்துவலைப் பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# பருத்தித்துறை சிவப்பிரகாசா மாணவிகளுக்குப் பதக்கங்கள்




யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே போட்டியில் பருத்தித்துறை சிவப்பிரகாச வித்தியாலய மாணவிகள் ஒரு தங்கம், இரு வெள்ளிப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.

15 வயதுப்பிரிவில் பி.தேனுகா காட்டாப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தையும், குமித்தே போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

17 வயதுப்பரிவில் பி.துவாரகா காட்டா போட்டி,குமித்தே போட்டி ஆகியவற்றில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிபதக்கத்தைப் பெற்றுள்ளார். (த-23)

# 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான உதைபந்தில் ஹென்றிஸ் வெற்றி



ஆட்டத்தின் ஒரு காட்சி

வலி.வடக்கு, ஜூன் 13

சர்வதேச உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தை முன்னிட்டுப் பொது மக்களிடையே விழிப்புணர்வை எற்படுத்தும் வகையில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டமொன்றில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றுள்ளது.

இளவாலை புனித ஹென்றி யரசர் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் மானிப் பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகமும் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகத்துக்கு முதல் பாதி ஆட்டத்தில் கோல் பெறும் வாய்ப்பு கிடைத்த போதிலும் அதனை அது சரியாகப் பயன்படுத்தவில்லை. இரு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் கோல் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய வேகத் துடன் களமிறங்கின. இதன் போது றெட்றேஞ்சர் விளையாட்டுக்கழக வீரன் அ.வாசிங் டன் முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து இரண்டு கோல்களை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக வீரர்களான அ.விக்கினேஸ்வரன், சு.தனேந்திரன் ஆகியோர் பெற்றுக் கொடுத்தனர்.

ஆட்ட நிறைவில் யங்ஹென் றிஸ் விளையாட்டுக்கழகம் 02:01 என்ற கோல் கணக்கில் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகத்தை வென்றது. (த-86)

# உதயதாரகை உதைபந்தாட்டம் அல்வாய் நண்பர், சேவியர் வெற்றி



யாழ்ப்பாணம், ஜூன் 13

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

நேற்று முன்தினம் புதன் கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 6:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

சென்.சேவியர் விளையாட் டுக் கழக அணிக்கும் நாகதீபம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.சேவியர் விளையாட்டுக் கழக அணி 2:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)


## மரண அறிவித்தல்



### செபமாலை சொலமன்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை சொலமன் நேற்று (12.06.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (13.06.2014) பிற்பகல் ஒரு மணியளவில் கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

கச்சாய் றோட், கொடிகாமம்.

தகவல்: ஆனந்தராசா (மகன்)

## மரண அறிவித்தல்



### மனோன்மணி பஞ்சாட்சரம்

தாவடி தெற்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி பஞ்சாட்சரம் நேற்று (12.06.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா -நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் கந்தையா பஞ்சாட்சரத்தின் பாசமிகு மனைவியும்,புவனேஸ்வரி,சரஸ்வதி,தவமணி, தர்மராசா, மங்கையர்க்கரசி ஆகியோரின் பாசமிகு சகோதரியும்,பத்மாவதி, பத்மநாபன் பரமேஸ்வரன், பாலசோதி,அருந்தவமலர்,சுவந்தன் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மாயனத்துக்கு எடுத்தச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி சிவேஸ்வரி வேலாயுதம்

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவேஸ்வரி வேலாயுதம் கடந்த (10.06.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், வேலாயுதத்தின் அன்பு மனைவியும், யவணராணியின் (கொலண்ட்) அன்புத் தாயாரும், கஜிதரனின் (கொலண்ட்) பாசமிகு மாமியாரும், சிவமணியின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (நடுவில்)யின் மைத்துனியும், பிரசாந் (கொலண்ட்), யதுசன் (கொலண்ட்), அபிசன் (கொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக சிறுப்பிட்டி காலயம்புலம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி டெஸ்சிராணி புலேந்திரராசா (மல்லிகா)

உடுவில் தெற்கு சத்தியபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புலேந்திரராசா டெஸ்சிராணி நேற்று (12.06.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகரத்தினம்-இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், புலேந்திராசா (ஐயா) வின் நேசமிகு மனைவியும், திவாகர் (விமல்) இன் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கமலராஜா (மோகன்), விமலராணி (சாந்தி), இரட்ணராஜா (புனிதன்) மற்றும், ஜமுனாராணி (கொழும்பு), ரவீந்திரராஜா (கொழும்பு), யூதராஜா (திட்ட இணைப்பாளர் - வன்னிப் பிராந்தியம்-(C.A.C.M), ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குணபாலராசா (வவுனியா), செல்வராணி,தங்கேஸ்வரி, இராஜேஸ்வரி, தவராசா, தில்லையம்பலம் (கொழும்பு), நேசமலர், மது (கொழும்பு), கேதாரணி,காலஞ்சென்றவர்களான தர்மராசா, சௌந்தரராசா, ஜெகதீஸ்வரி ஆகியோரின் நேசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (14.06.2014) சனிக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
சத்தியபுரம்

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### வைரமுத்து துரைராஜா

(பாவற்குளம் வாரிக்குட்டியூர்,பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து துரைராஜா கடந்த (10.06.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வைரமுத்து - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும்,தங்கரூபன் (லண்டன்), ஜெயரூபன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும்,அனித்தா (லண்டன்), நகுலேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், தாமரை (லண்டன்), நீலன் (லண்டன்), கபின் (லண்டன்),கருண் (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தவமணி (மனைவி)
தங்கரூபன்,ஜெயரூபன் (மகன்மார்)

## கண்ணீர் அஞ்சலி



எமது வளர்மதி நிறைவாழ்வகத்தின் லண்டன் கிளை இணைப்பாளர் திரு **இராசதுரைஜெயரூபன்** (மானிப்பாய்) அவர்களின் மைத்துனரும் **திருமதி மா.வசந்தி** (சண்டிலிப்பாய், பிரதேச செயலகம்) அவர்களின் துணைவருமாகிய

### செல்வநாயகம் மகாலிங்கம் (மகான்)

அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து துயர் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு.

வளர்மதி நிறைவாழ்வகமும்,
வளர்மதி முன்னேற்றக்கழகமும்.

## கோப்பாயில் கரப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம், ஜீன் 13

யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கத்தினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் 'ஏ' பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நாளை சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம் பெறவுள்ளன. (த-23)

## வென்றது பலாலி விண்மீன்

யாழ்ப்பாணம், ஜீன் 13

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுகழகம் நடத்தும் சிவ குருநாதர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.


கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் பலாலி விண்மீன் விளை யாட்டுக்கழக அணி 10:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# வென்றது வேம்படி மகளிர்

வலி.வடக்கு, ஜீன் 13

யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கூடைப் பந்தாட்டப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி வெற்றி பெற்றது. உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரியும் வேம்படி மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் ஆட்ட நிறைவில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி 12:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-86)



மோதிக் கொள்ளும் வேம்படி - உடுவில் அணிகள்

## யங் ஹென்றிஸ், அராலி அணிகள் இறுதியாட்டத்தில் நாளை மோதல்

வலி.வடக்கு, ஜீன் 13

வலிகாமம் உதைபந்தாட்ட லீக் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வலிகாமத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை இரவு 7.00 மணியளவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் மின் ஒளியில் நடைபெறவுள்ளது.



யங் ஹென்றிஸ் அணி.



அராலி அணி

இறுதிப் போட்டியில் இளவாலை யங் ஹென்றிஸ் அணியும் அராலி அணியும் மோதவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் உதைபந்தாட்ட வீரரும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபருமான அருட்தந்தை எஸ்.யேசுதாசன் கலந்துகொள்வார். (த-86)

## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழக மைதான்த்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்குஇடம் பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து றேஞ்சஸ் விளையாட்டுக்கழக 'ஏ' அணி மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் லீக் முறையில் நடத்தும் மின்னொளி தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

★ ★ ★

வலிகாாம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் ஆகியவை யாழ். மாட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தும் 5 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி சில்வேஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாதகல் சென்.தோமஸ் யுத் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து தாவடி காளியாம்பாள் விளையாட்டுக்கழக 'பி' அணி மோதவுள்ளது. 7 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கொக்குவில் இந்து மைதானத்தில் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொற்பதி விளையாட்டுக் கழகம் நடத்தும் சிவகுருநாதர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட் டித் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொற்றவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## கிரிக்கெட் போட்டி

கார்மேல் போய்ஸ் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் குரு.சுரேஸ் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித்தொடரின் ஆட்டங்கள் எதிர்வரும் 2ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ளவிரும்பும் விளையாட்டுக் கழகங்கள் போட்டி ஏற்பாட்டுக் குழுவினருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-23)

விளம்பரதாரர்களே உங்களுக்கு ஒரு நற்செய்தி!
உங்களுக்கும் உங்கள் வியாபாரத்திற்கும் ஒளியேற்ற உதயனின் மற்றொரு ஞாயிறு விளம்பர சிறப்பிதழ்
உதயன்
அங்காடி
விளம்பர சிறப்பிதழ்
விளம்பர உலகின் புதிய பரிமாணம்
400/= ரூபாவில் விளம்பரம்
விளம்பரதாரர்களுக்காக வடக்கிலிருந்து தனித்துவமாக வெளிவரும் ஒரேயொரு வாராந்த சிறப்பிதழ்
எங்கள் விளம்பரங்கள் உங்கள் முன்னேற்றம்
உதயன் அங்காடி விளம்பர சிறப்பிதழ்
தொலைபேசி: 07 6603 6604
ஒவ்வொரு ஞாயிறும் உங்கள் கைகளில்
மிக மிக குறைந்த செலவில் உங்கள் விளம்பரங்களை பிரசுரித்து நன்மையடையுங்கள்.
விளம்பர தொடர்பு: Phone : 021 567 4455
Mobile : 07 6603 6604
email: angady@uthayan.com

பெண்ணின் பெருமை பேசுவோம்!
தென் இந்திய புத்தகங்களை விஞ்சும் அளவுக்கு
• பெண்களுக்கு தேவையான சகல அறிவியல் விடயங்களையும் உள்ளடக்கி
• அரசியல் பாலியல் கலக்காது மார்க்க நெறிபிறளாது
• பெண்களின் பெருமைகளையும் சாதனைகளையும் வெளிப்படுத்தி
• நல்லதொரு குடும்பம் எனும் உன்னத இலக்கில்
• பத்துவகை போட்டிகளுடன்
• அற்புதமான வர்ண அச்சிடல் தரத்தில் வெளிவந்துள்ளது
ஜூன் மாத ஒளிஅரசி
• ஒரு தடவை வாங்கிப்படியுங்கள்; அதன் பயன் அறிந்து வியப்படைவீர்கள்
பிரதிகளுக்கு பத்திரிகை முகவர்களை நாடுங்கள்
தொடர்புகளுக்கு: 0714273035




## ஸ்பெயின் அணியில் வாய்ப்பு விளையாட மறுத்த மெஸ்ஸி

ஸ்பெயின் அணியில் விளையாட வாய்ப்பு கிடைத்தும் தாய் நாட்டுக்காக விளையாடுவதையே விரும்புகிறேன் என்று மெஸ்ஸி அதை மறுத்துள்ளார்.

கடந்த கால ஆட்டங்களில் மெஸ்ஸி தனது நாட்டுக்காக விளையாடும் போது உற்சாகத்துடன் விளையாடவில்லை என அவர் மீது விமர்சனங்கள் எழுந்தது.

இந்த விமர்சனங்கள் பற்றி அவர் மெஸ்ஸி தி பாட்ரியாட் என்னும் புத்தகத்தில் கூறுகையில், எனது சொந்த நாட்டு மக்களே இவ்வாறு கூறுவது வேதனையளிக்கிறது. நான் ஆர்ஜென்ரீனா அணியின் தீவிர ரசிகன்.எனக்கு ஸ்பெய்ன் நாட்டு அணியில் விளையாடும் வாய்ப்பு வந்தது.ஆனால் அதை நான் மறுத்து விட்டேன்.

ஏனென்றால் நான் என் நாட்டை நேசிக்கிறேன். என் நாட்டின் நிறத்தை தான் அணிய விரும்புகிறேன் என்று தெரிவித்துள்ளார். (கு)

# விமானத்தில் பிரேசில் சென்ற உதைபந்துகள்




பிரேசிலில் நடக்கவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்கான உதைபந்துகள் பாகிஸ்தானில் இருந்து விமானம் மூலம் பிரேசில் சென்றடைந்துள்ளன.

பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்ட பந்துகள் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பயன்படுத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இந்த உலகக் கிண்ணப் போட்டியில் பயன்படுத்தப்படும் பந்துக்கு பிரசுகா என்ற பெயரை ரசிகர்கள் சூட்டி இருக்கிறார்கள்.

பிரசுகா என்பது பிரேசில் மக்களின் வாழ்க்கை முறையை சித்தரிக்கும் வார்த்தை என்பது குறிப்பிடத்தக்கது.இந்தப் பந்தின் வடிவம் முப்பரிமாண முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.பந்தின் வடிவம், எடை, அழுத்தம் ஆகியவை மழை பெய்தால் கூட மாறாது, பல வண்ணங்களில் மிளிரும் 69 சென்ரிமீற்றர் சுற்றளவு கொண்ட இந்த பந்தின் எடை 437 கிராமாகும்.மேலும், பந்தின் தரத்தை 10 நாடுகளை சேர்ந்த 300 வீரர்களிடம் விளையாட கொடுத்து சோதித்து இறுதி செய்துள்ளனர். (கு)

2014 FIFA WORLD CUP Brasil

## உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு தாய்லாந்து அரசு சலுகை

உதைபந்தாட்ட இரசிகர்களுக்காக தாய்லாந்து அரசு பல சலுகைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் போட்டிகள் காண்பிக்கப்படும் அலைவரிசைகளுக்கான கட்டணங்களை அறவிட வேண்டாம் எனத் தொலைக்காட்சி சேவை கட்டுப்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு தொலைக்காட்சி நிறுவனங்கள் சுமார் 22 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்தி உதைபந்தாட்டப் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான உரிமைத்தை பெற்றுள்ளன.

இந்நிலையில் இடைக்கால அரசின் இந்த அறிவிப்பானது தொலைக்காட்சி சேவைக் கட்டுப்பாட்டாளர்களுக்குப் பெரும் நட்டத்தை விளைவிக்கக்கூடும் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (கு)

# உலகக்கிண்ணத்தில் இம்முறை கோல் லைன் தொழில்நுட்பம்




உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முதல் முறையாக கோல் லைன் தொழில்நுட்பத்தை சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் (பிபா) அறிமுகப்படுத்தவுள்ளது.

இந்த தொழில்நுட்பத்தில் கோல் கம்பத்தின் பக்கவாட்டு வலைகளில் உயர் தொழில்நுட்ப அதிவேக கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். கோல் கம்பத்தின் 7 இடங்களில் 14 கமராக்கள் பொருத்தப்பட்டிருக்கும். உதைபந்தாட்ட வீரர் பந்தை உதைத்தோ, தலையால் முட்டியோ கோலை நோக்கி வரும் பந்து கோல் லைனைக் கடந்து கோல் கம்பத்துக்குள் செல்கிறதா என்பதை கமராக்களில் பதிவாகும் காட்சிகள் மூலம் கண்காணிக்க முடியும். பந்து கோல் லைனைக் கடந்து கோல் கம்பத்துக்குள் நுழைந்து விட்டால் களத்திலுள்ள நடுவர், 2 லைன்ஸ் மேன்கள் மற்றும் களத்துக்கு வெளியில் உள்ள நான்காவது நடுவர் ஆகியோரின் கையில் கட்டப்பட்டிருக்கும் கடிகாரத்தில் கோல் என்ற அறிவிப்பு வரும்.

இதையடுத்து, களநடுவர் கோல் அடிக்கப்பட்டதற்கான அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிடுவார். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை உதைபந்தாட்டப் போட்டிகளில் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த கடும் எதிர்ப்பு இருந்து வந்தது. பிபா தலைவர் செப் பிளாட்டரும் 4 ஆண்டுகளுக்கு முன்பு எதிர்ப்பு தெரிவித்திருந்தார். மனிதர்கள் விளையாடும் போட்டியில் நடுவர்களுக்கு உதவி செய்ய தொழில்நுட்பத்தைப் புகுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்த அவர், 2010 உலகக் கிண்ணத்துக்குப் பின்னர் தனது நிலையை மாற்றிக் கொண்டார். தென்னாபிரிக்காவில் 2010 இல் இடம்பெற்ற உலகக் கிண்ண போட்டியின் போது ஜேர்மனிக்கு எதிரான போட்டியில் இங்கிலாந்தின் பிராங்க் லம்பெர்ட் அடித்த பந்து கோல் லைனைக் கடந்திருந்த போதிலும், கள நடுவர் பந்து கோல் எல்லையை கடக்கவில்லை எனக் கருதி கோல் இல்லை என அறிவித்தார். பின்னர் தொலைக்காட்சி கமராக்களில் பார்த்த போது பந்து கோல் எல்லையைக் கடந்து கோலுக்குள் சென்றிருந்தது தெரியவந்தது. இதையடுத்து 2014 உலகக் கிண்ண போட்டியில் கோல் லைன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.ஜேர்மனியைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று இதற்கான ஒப்பந்தத்தை பெற்றுள்ளது. போட்டி நடக்கும் 12 விளையாட்டரங்குகளிலும் கோல் கம்பங்களைச் சுற்றி கமராக்களை பதிக்கும் பணியில் இந்த நிறுவனத்தின் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

காற்று, மழை மற்றும் கமராக்களை வீரர்கள், கோல் காப்பாளர்கள் மறைப்பது உட்பட பல்வேறு நிலைகளில் 2400 முறை இந்த தொழில்நுட்பத்தை வல்லுநர்கள் சோதனை செய்து பார்த்துள்ளனர். இந்த தொழில்நுட்பம் மூலம் தவறு இல்லாத போட்டியாக பிரேசிலில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண போட்டி அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (கு)

விசேட கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும்
SLAS
போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்புகள் ஆரம்பம்
14.06.2014
சனி 8.30 - 3.30 வரை நடைபெறும்.
சகல பாடங்களும் விரிவான முறையில் கற்பிக்கப்படும்.
ஒவ்வொரு சனியும் 8.30 - 3.30 வரை நடைபெறும்.
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
தொ.பே.: 0774696695

இலங்கை நிர்வாகசேவை (SLAS)
நிருவாக சேவைப் போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்புகள்
ஆரம்பம்:
சனி (14/6) பி.ப 1 மணி
சனி, ஞாயிறு தினங்களில் பி.ப 1 மணி தொடக்கம் பி.ப. 5 மணி வரை நடைபெறும்.
T.P. 0754 164 564
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி,
(கொமர்ஷல் வங்கி அருகில்)

இந்திய சாஸ்திரியார் வருகை
யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓர் சந்தி அருள்வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, கல்வித்தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழில் முன்னேற்றம் இல்லையா, குடும்பப் பிரச்சினையா, வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? (48917)(7.6.3)
எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்
(காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(பிள்ளையார் ஹோட்டல் முன்பாக)
T.P : 072 681 6681, 072 681 6691

கட்டார் நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு!!!
கட்டார் நாட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையத்தில் கீழ்காணும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.

| | |
|---|---|
| HV AC Technician Helper | 900 + OT |
| Telecom Technician Helper | 900 + OT |
| Painter Helper | 900 + OT |
| Electrician Helper | 900 + OT |
| Plumper Helper | 900 + OT |
| Welding Helper | 900 + OT |

மற்றும் சுத்திகரிப்பாளர்கள், கையுதவியாளர்கள் (போன்ற) இன்னும் பல வேலைவாய்ப்புகள் உடனடியாக காத்திருக்கின்றன (முன்அனுபவம் தேவையில்லை) கைவசம் விசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்
தங்குமிடம், போக்குவரத்து, வைத்திய வசதி, உணவு போன்றன இலவசம். ஒப்பந்த காலம் 2 வருடம் நீடிக்கப்படக் கூடியது. வேலை நேரம் 8 மணித்தியாலங்கள். கிழமைக்கு 6 நாட்கள் வேலை. ஏனைய நிபந்தனைகளும் விதிகளும் கட்டார் நாட்டு சட்ட திட்டங்களுக்கமைவானது. உங்கள் விண்ணப்பங்கள் எதிர்வரும் 15ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் ஏற்றுக்கொள்ளப்படும்.
முக்கிய குறிப்பு:- நேர்முக தேர்விற்கு சமூகமளிப்பவர்கள் கடவுச்சீட்டு, 8 புகைப்படங்கள், சுயவிபரக்கோவைகள் ஆகியவற்றை தவறாது கொண்டுவரவும்.
உடன் தொடர்பு கொள்ள: Lanka Voice Jaffna -077 9527575 076 6697789
கெப்பிடல் ரெக்ரூட்மன்ட் இன்டர்நெஷனல் (பி) லிமிடெட்
இல. 130/3/1 3 மாடி, கிறேன்பாஸ் வீதி, கொழும்பு - 14

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.